Koviloor Digital Library

தி இந்து

ஸ்ரீ ராமானுஜர் 1000

₹ 90

Acc. No 24238
412

Koviloor Digital Library

Koviloor Digital Library

அட்டையில்
ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீராமானுஜர்

வெளியிடுபவர்:
என்.ராம்
ஆசிரியர்:
கே.அசோகன்

மலர் பொறுப்பாசிரியர்:
அரவிந்தன்

தயாரிப்புக் குழு:
என். ராஜேஸ்வரி
வ. ரங்காச்சாரி
மானா பாஸ்கரன்
கே.சுந்தரராமன்
வா. ரவிக்குமார்

தலைமை வடிவமைப்பாளர்:
என். கணேசன்
முதன்மை வடிவமைப்பாளர்:
மு. ராம்குமார்

வடிவமைப்பாளர்கள்:
ராஜேஷ் முத்துசாமி
ராஜவேல் தேவராஜ்
சி. பார்த்திபன்

தொடர்புக்கு:
தி இந்து தமிழ்,
கஸ்தூரி மையம்,
124, வாலாஜா சாலை,
சென்னை - 2.

தி இந்து

ஸ்ரீ ராமானுஜர் 1000

எண்ணற்ற ஞானிகளும் மகான்களும் பிறந்த நாடு இது. தத்துவ தரிசிகளுக்கும் சீர்த்திருத்தவாதிகளுக்கும் பஞ்சம் இல்லாத நாடு இது. அறிவு, பக்தி, தொண்டு ஆகியவற்றினூடே இறையுணர்வை வளர்த்தவர்கள் அனேகம் பேர். காலத்துக்கேற்பத் தத்துவ விளக்கங்களைத் தந்து வழிநடத்தியவர்களும் புதிய மார்க்கங்களை உருவாக்கியவர்களும் பலர் உண்டு. ஞானம், பக்தி, தத்துவம், தொண்டு, சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தன் வாழ்க்கையையே தன் செய்தியாக முன்வைத்துவிட்டுப் போனவர்கள் அரிதினும் அரிதானவர்கள். அத்தகைய அரியதொரு மகான்களில் ஒருவர் ஸ்ரீராமானுஜாச்சாரியார்.

இன்றைக்குச் சரியாக 999 ஆண்டுகளுக்கு முன் இம்மண்ணில் அவதரித்த ஸ்ரீராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா தற்போது விமரிசையாக நடைபெற்றுவருகிறது. ஆன்மிக ரீதியிலும் சமய அடிப்படையிலும் மட்டுமின்றி, சமூகச் சீர்திருத்த நோக்கிலும் ராமானுஜரின் வாழ்க்கை முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியத் தத்துவ நூல்களுக்கு இவர் அளித்த விளக்கம் விசிஷ்டாத்வைதம் என அறியப்படுகிறது. நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்த இந்த மகான், தத்துவ விளக்கங்களுக்கான நூல்களை இயற்றியுள்ளார்.

இன்றைய காலகட்டத்தின் பல்வேறு நெருக்கடிகளுக்குத் தன் வாழ்வில் தீர்வுகண்டவர் ராமானுஜாச்சாரியார். அந்தக் காலகட்டத்தில் கோயில்கள் நிர்வகிக்கப்பட்டுவந்த முறைகளில் இருந்த முறைகேடுகளைக் களைய வழிவகுத்தார். 'உடையவர்' என அழைக்கப்பட்ட இவர், திருவரங்கம் கோயில் உடைமைகளைச் சிறப்புற மீட்டெடுத்து நிர்வாகம் செய்தார்.

பிறப்பினால் தீர்மானிக்கப்பட்ட சாதி வேற்றுமைகளை மறுத்து, பக்தியையும் ஞானத்தையும் நல்லொழுக்கத்தையும் முன்னிறுத்தினார். தத்துவ உலகிலும் இறைவனின் சன்னிதியிலும் பிறப்பு சார்ந்த சாதி வேற்றுமைகளுக்கு இடமில்லை என அறிவித்ததுடன் அதை நடைமுறைப்படுத்தியும் காட்டினார். பெண்களுக்கும் ஆன்மிகப் பணிகளில் பங்களித்தார்.

பக்தி, ஞானம், ஒழுக்கம், சமத்துவம், தொண்டு ஆகிய அம்சங்களைத் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியும் பரப்பியும் வந்த இந்த மகானின் நினைவைப் போற்ற 'ஸ்ரீராமானுஜர் 1000' என்னும் இந்த மலரைப் படைத்திருக்கிறோம். ராமனுஜரின் வாழ்வு, அவரது தத்துவம், சிந்தனைகள், சமத்துவ எண்ணங்கள், அவர் ஆற்றிய அரும்பணிகள் முதலானவற்றை இதில் நினைவுகூர்ந்திருக்கிறோம். தத்துவம், வரலாறு, சமயம் ஆகியவற்றில் ஆழங்கால் பட்ட அறிஞர்களும் எழுத்தாளர்களும் ராமானுஜரின் வாழ்வின் சித்திரங்களை நமக்குத் தீட்டித்தருகிறார்கள். ராமானுஜரின் ஆளுமையின் பன்முக அம்சங்களை நமக்கு நினைவுபடுத்தும் நூலாக இந்த மலர் விளங்குகிறது. உடையவரின் வாழ்வையும் அவரது பணிகளையும் விரிவாகவும் சுவையாகவும் பதிவுசெய்கிறது.

ராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டை ஒட்டிப் பல விதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பலரும் பல விதங்களில் ஆச்சாரியனுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்துகிறார்கள். ஸ்ரீராமானுஜரின் நினைவைப் போற்றுவதில் எமது எளிய பங்களிப்பாக இந்த மலரை வாசகர்கள் முன் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

அன்புடன்
ஆசிரியர்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 24238

Koviloor Digital Library

உள்ளே

ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் அருளுரை 6
ராமானுஜர் வாழ்க்கைச் சித்திரம் - எம்.என்.எஸ். 8
காஷ்மீரில் ஒரு தேடல் - இந்திரா பார்த்தசாரதி 12
வேடனின் பெருமை - இளங்கண்ணன் 18
உடையவர் பாதம் பட்ட தலம் - என்.ராஜேஸ்வரி 24
புண்ணியம் கோடி செய்த தலம் - கோ.கார்த்திக் 28
சமத்துவம் கண்ட திருவுரு - விக்னேஷ் ஜி 32
திருக்கச்சி நம்பி - ரெங்கலட்சுமி 39
ராமானுஜ சித்தாந்தம் - அஹோபிலம் ஜீயர் 40
ராமானுஜரும் வரதராஜப் பெருமாள் கோயிலும் - கோ.கார்த்திக் 44
அச்சமற்ற அனந்தன் - சாண்டில்யன் 48
துறவறம் ஏற்றல் - கே.சுந்தரராமன் 52
ராமானுஜர் வாழ்வின் மகிமை - மாலோல கண்ணன் 56
கொங்கு பிராட்டி பெற்ற பேறு - கிருஷ்ண தேசிகாச்சார் 62
எம்பார் ஜீயர் நேர்காணல் 66
பெண்பிள்ளை ரகசியம் - ஸ்ரீவிஷ்ணு 70
எளிமையும் பெருமையும் - சாரி 78
நாடக மேடையில் ராமானுஜர் - வா.ரவிக்குமார் 82
இசை நாடகக் கலைகளும் ராமானுஜரும் - எஸ்.கோகுலாச்சாரி 86
தீண்டாமையை எதிர்த்த தீரர் - திருப்பூர் கிருஷ்ணன் 92
வாழ்வாங்கு வாழ்ந்த தலம் - கல்யாண சுந்தரம் 98
சிறுவனுக்கு திருவடி காட்டிய உடையவர் - முனைவர் இரா.அரங்கராஜன் 100
மகா அமிர்தம் - மகா பெரியவர் 102

© Kasturi & Sons Ltd. 2014. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission of Kasturi & Sons Ltd.

Published by N.Ram at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai 600 002 and
Printed by B.Ashok Kumar, Rasi Graphics (P) Ltd,
No.40, Peters Road, Royapettah, Chennai - 600014, for Kasturi & Sons Ltd., Chennai - 600 002.

Editor: K.Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

Koviloor Digital Library

எம்பார்

Koviloor Digital Library

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

எம்பெருமானாராக ஆனது ஏன்?

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன்,
ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகன் ஸ்வாமிகள்

எம்பெருமானைக் காப்பாற்றிய காரணத்தினால் யதிராஜர் எம்பெருமானார் ஆனார்.

கபர்த்தி மத கர்த்தமம் கபில கல்பநா வாகுராம்
துரத்யயமதீத்ய தத் த்ருஹிண தந்த்ர யந்த்ரோதரம்|
குத்ருஷ்டி குஹநா முகே நிபதத: பர ப்ரஹ்மண:
கர க்ரஹ விசக்ஷிணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:

பரப்ரஹ்மமானது இந்நிலவுலகில் வேறு ஒரு மதமாகிய பெருஞ்சேற்றில் முதலில் அழுந்தியது. பின்பு அது கபிலரின் கற்பனை நிறைந்த வலையில் மாட்டிக் கொண்டது. பின்பு அதுவே ஹிரண்யகர்ப்பனின் மதமெனும் மாயாவினுடைய வாயில் விழுந்தது. அச்சமயத்தில் ராமானுஜர் அந்த பரப்ரம்ஹத்தினைக் கை கொடுத்து மீட்டுக் காப்பாற்றினார். எனவே இவ்வாறு எம்பெருமானைக் காப்பாற்றிய காரணத்தினால் யதிராஜர் எம்பெருமானார் ஆனார்.

தஸ்மை ராமானுஜார்யாய நம: பரமயோகினே
யச்ருதி ச்ம்ருதி ஸூத்ரானாம் அந்தர்ஜ்வரம் அசீமத்

எந்த யதிராஜர் வேதம், ஸ்ம்ருதி, ப்ரம்ஹ சூத்ரங்களின் உள்ளூறவே இருந்த ஜ்வரத்தை போக்கினாரோ? அப்பேர்பட்ட பெருமை வாய்ந்த இராமானுஜராம் பரமயோகிக்கு வணக்கம்.

இராமானுஜரின் செயற்கரிய செயல்

எந்த யதிராஜர் வேதம், ஸ்ம்ருதி, ப்ரம்ஹ சூத்ரங்களின் உள்ளூறவே இருந்த ஜ்வரத்தை போக்கினாரோ... அப்பேர்பட்ட பெருமை வாய்ந்த இராமானுஜராம் பரமயோகிக்கு வணக்கம்.

வேதார்த்த ஸங்க்ரஹத்தினால் ஸ்ம்ருதிகளுடையதும், ஸார தீபங்களால் ப்ரம்ஹ ஸூத்திரத்தினுடையதும், ஸ்ரீபாஷ்யத்தினால் வேத ஸ்ம்ருதி ஸூத்திரங்களுடையதுமான அந்தர் ஜுவரத்தினை இராமானுஜர் போக்கி அருளினார்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

Koviloor Digital Library

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன், ஸ்ரீரங்க ராமாநுஜ மஹாதேசிகன் ஸ்வாமிகள்

Koviloor Digital Library

எம்.என். ஸ்ரீநிவாசன்

ராமானுஜரின் வாழ்க்கை: சுருக்கமான சித்திரம்

காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குத் திருமஞ்சன தீர்த்த கைங்கர்யம் செய்துவந்தார். அப்போது ஆளவந்தாரால் ஆம்முதல்வன் என்று விசேஷ அனுக்கிரகம் பெற்றவர்.

பிறப்பு

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம் திக்கெட்டும் பரவுவதற்குக் காரணமாக இருந்த இந்த மகாசார்யன் ஸ்ரீபெரும்புதூர் க்ஷேத்ரத்தில் ஆசூரி வம்சத்தில் கேசவப் பெருமாள் தீக்ஷிதருக்கும் காந்திமதி அம்மையாருக்கும் சித்திரைத் திருவாதிரையில் புதல்வராய் அவதரித்தார். இவர் பிறந்த பன்னிரண்டாம் நாள் இவரது அம்மானான பெரிய திருமலை நம்பிகள் இவருக்கு இளையாழ்வார் என்ற பெயரைச் சூட்டினார்.

குருவுக்குப் பாடம்

தனது பால்யத்தில் யாதவப் பிரகாசர் என்னும் அத்வைத சன்யாசியிடம் வேதாந்த பாடம் கற்றார். தான் கல்வி கற்கும் காலத்தில் உபநிஷத்திற்கு விரோதமான விளக்கங்களை யாதவப் பிரகாசரிடமிருந்து கேட்டு மனம் நொந்து அதற்கு உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் அர்த்தத்தைத் தனது குருவிற்கே உபதேசித்து அவரிடமிருந்து விலகினார்.

திருமாலின் தசாவதாரங்களில், நரசிம்மாவதாரம், ராமாவதாரம், மற்றும் கிருஷ்ணாவதாரங்களை முறையே நரசிம்மம், ராகவசிம்மம், யதுசிம்மம் என்று வழங்குதல் உண்டு. ராமானுஜரோ யதிசிம்மம்.

விசேஷ அனுக்கிரகம்

காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குத் திருமஞ்சன தீர்த்த கைங்கர்யம் செய்துவந்தார். அப்போது ஆளவந்தாரால் ஆம்முதல்வன் என்று விசேஷ அனுக்கிரகம் பெற்றவர்.

தீர்வு கண்ட மகான்

பின்பு ஆளவந்தாரைச் சந்திக்கத் திருவரங்கம் சென்று, அவரைக் காண முடியாமல் அவரது மரணத்தில் சரம திருமேனியை தரிசித்து ஆளவந்தாருடைய வலது கைவிரல்கள் மூன்று மடங்கி இருக்கக்கண்டு, அருகில் இருந்தோர்களால் ஆளவந்தாரின் மூன்று குறைகளையும் அறிந்துகொண்டார். அவற்றைத் தீர்ப்பதாக அரங்கனைத் தியானித்து சூளுரைத்தார். அம்முக்குறைகளையும் தீர்த்த மகான். அந்தத் தீர்வுகள்:

1. வியாஸ சூத்திரத்திற்கு ஆழ்வார்கள் மற்றும் ஆளவந்தாரின் உள்ளம் உகக்கும்படி ஸ்ரீ பாஷ்யம் என்னும் கிரந்தத்தைச் செய்தல்.
2. நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்யானம் செய்ய வேணும்.
3. வ்யாஸ பராசராதிகள் திருப்பெயர்களை இரண்டு பிள்ளைகளுக்கு இட வேண்டும்.

Koviloor Digital Library



ஸ்ரீரங்கம் - ஸ்ரீ ராமானுஜர் உத்ஸவ மூர்த்தி

Koviloor Digital Library

ராமானுஜரின் சூளுரையை உணர்ந்தவுடன் ஆளவந்தாரின் திருவுடலில் மூன்று விரல்கள் நிமிர்ந்தன. இதனைக் கண்ட எல்லோரும் இவரைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தமிழகத்துக்கு வெளியே

சோழ அரசனால் பல இன்னல்களுக்கு ஆளாகித் தமிழகத்தை விட்டுப் பல ஆண்டுகள் மேல்நாட்டில் வசித்து வைணவத் திருப்பணியை மிக விசேஷமாகச் செய்துவந்தார். ஆளவந்தாருடைய சீடர்களான திருக்கோட்டியூர் நம்பிடம் திருமந்திரார்த்தத்தையும், சரம ஸ்லோக அர்த்தத்தையும், திருமாலையாண்டான் அவர்களிடம் திவ்யப் பிரபந்த வியாக்யானத்தையும், திருவரங்கப் பெருமாள் அரையர் அவர்களிடம் திருவாய்மொழி, கண்ணிநுண் சிறுத்தாம்பு, மற்றும் திவ்ய பிரபந்தங்களையும், பெரிய நம்பி அவர்களிடம் பஞ்ச ஸம்ஸ்காரமும் திருமந்திரம் த்வயம் சரம ஸ்லோகம் உபதேசமும் பெற்றார்.

எழுதிய நூல்கள்

மேலும் திருவரங்கப் பெருமாள் செல்வம் முற்றும் திருத்தி தனது செங்கோலின் கீழ் கொண்டு வந்தவர். ராமானுஜரை இவரது சீடரான திருவரங்கத்து அமுதனார் என்பவர் இராமானுச நூற்றந்தாதி என்ற பிரபந்தத்தை இயற்றிப் போற்றினார்.

சிறப்பு நாமங்கள்

உடையவர்க்கு அம்மானான திருமலை நம்பிகள் இவர் பிறந்த பன்னிரண்டாம் நாள் சூட்டிய பெயர் இளை யாழ்வார். சன்யாச ஆஸ்ரம ஸ்வீகாரம் ஆனவுடன் தேவப்பெருமாள் சாதித்த பெயர் யதிராஜர். திருவரங்கத் தில் அணியரங்கன் சூட்டிய பெயர் உடையவர். திருக்கோட்டியூர் நம்பியால் சூட்டப்பட்ட பெயர் எம்பெருமானார் ஆண்டாளின் திருவுள்ளத்திருந்த அவாவினைப் பூர்த்தி செய்ததால் நாச்சியார் அருளிய பெயர் கோயில் அண்ணன். ஸ்ரீ பாஷ்யத்தைப் பூர்த்தி செய்தவுடன் சாரதா பீடத்தில் சரஸ்வதியினால் சாத்தப் பெற்ற பெயர் ஸ்ரீ பாஷ்யகாரர்.

யதிசிம்மம்

திருமாலின் தசாவதாரங்களில், நரசிம்மாவதாரம், ராமாவதாரம், மற்றும் கிருஷ்ணாவதாரங்களை முறையே நரசிம்மம், ராகவசிம்மம், யதுசிம்மம் என்று வழங்குதல் உண்டு. ராமானுஜரோ யதிசிம்மம்.

இம்மகானின் அவதார நன்னாள் இவ்வருடம் 10.05.2016 அன்று அமைகிறது. 2017-ம் ஆண்டு இவரின் ஆயிரமாவதாண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

நூல்கள்

ராமானுஜர் தம் வாழ்நாளில் ஒன்பது வடமொழி நூல்கள் இயற்றினார். அவை நவநிதிகளான நவரத்தினங்கள் போல வைணவத்தின் பெரும் செல்வங்கள் ஆயின எனலாம். வேதார்த்த சங்கிரகம், ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்ய கிரந்தம் ஆகியவை. இவை அனைத்தும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை.

Koviloor Digital Library



ஸ்ரீ ஆண்டாள் - ஸ்ரீ பார்த்தசாரதி (திருவல்லிக்கேணி)

Koviloor Digital Library

இந்திரா பார்த்தசாரதி

காஷ்மீரில் ஒரு தேடல்

ராமானுஜர், ஒருவன் எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும், இறைவனுடைய லீலைகளில் மனம் ஈடுபட்டால் அவனருளைப் பெறுவதற்கு உரிமையுண்டு என்று நம்பினார்.

திருப்பதிக்குச் சென்று ராமாயணம் பாடம் கேட்கத் தீர்மானித்தார் ராமானுஜர். திருமலை நம்பிக்கு ராமாயணத்தில் மிகவும் ஈடுபாடு. ஆகவே தாய்மாமாவிடம் போய், ராமாயணத்தின் ரகஸ்யார்த்தங்களை உணர விரும்பிய உடையவர், சில சிஷ்யர்களுடன் புறப்பட்டார்.

'அஷ்ட சகஸ்ர கிராமம்' என்ற இடத்துக்கு அவர் சென்றார். அங்கு அவருடைய சிஷ்யர்கள் இருவர் இருந்தனர். யக்ஞேசர் என்பது ஒருவர் பெயர். மற்றவருடைய பெயர் வரதாசார்யர்.

வரதாசார்யர் மிகவும் ஏழை. ராமானுஜர் ஏழைகளுடைய நண்பர் என்ற முறையில், வரதாசார்யர் குடிலுக்கு முதலில் சென்றார். வரதாசார்யர் உஞ்சவிருத்தி ஏற்கச் சென்றிருந்தார். அவர் மனைவி வந்திருக்கும் விருந்தினர் யார் என்று உணர்ந்தார். ஆனால், வெளியே சென்று வரவேற்கும் நிலையில் அவரில்லை. அவர் அணிந்திருந்த ஆடைகள் கிழிந்திருந்தன. இதை அறிந்த ராமானுஜர் தம் தலையில் அணிந்திருந்த துணியை உள்ளே எறிந்தார். அதைத் தரித்துக்கொண்டு வெளியே வந்த வரதாசார்யர் மனைவி, ராமானுஜரை உள்ளே அழைத்துச் சென்று பலகையிட்டு அமரச் செய்து உபசரித்தார். விருந்துண்டு செல்ல வேண்டும் என்று வேண்டி நின்றார். உடையவரும் அதற்கு இசைந்தார். ஆனால் வீட்டிலோ ஒரு சிறு தான்யம்கூட இல்லை. அப்பொழுது வரதாசார்யர் மனைவிக்கு அவ்வூரிலிருந்த ஒரு வணிகன் நினைவு வந்தது. அவன் ஒரு கயவன். வரதாசார்யர் மனைவியின் அழகைக் கண்டு மயங்கியவன். வரதாசார்யரின் மனைவிக்கு இது நினைவுக்கு வந்ததும், அந்த வணிகன் வீட்டுக்கு விரைந்தார். அரிசி, உப்பு, மிளகு ஆகிய சமையற் பொருள்களை அவனிடம் கெஞ்சிக் கேட்டார். இதற்கு விலையாக என்ன செய்ய வேண்டுமென்பது அவர் உணர்ந்ததுதான். ஆனால், விருந்தினரை தவறவிடக்கூடாதென்பது அவர் விருப்பம். வணிகனும் பொருள்களைத் தந்தான். வருவதாக வாக்களித்துவிட்டுத் திரும்பினார்.

ராமானுஜர் விருந்துண்டு சென்ற பிறகு, வரதாசார்யர் வந்தார். நடந்த செய்தி கேட்டு மகிழ்ந்தார். ராமானுஜருக்கு விருந்து படைத்த மனைவியைப் பாராட்டினார். இருவருமாக வணிகனிடம் சென்றனர்.

இதைப் பற்றிக் கேள்வியுற்ற ராமானுஜர், வணிகனை அழைத்துத் தம் சிஷ்யனாக்கிக் கொண்டார். மன்னிப்புப் பெறத் தகுதி இல்லாதவர்கள் உலகில் இல்லையென்பது அவர் கருத்து.

Koviloor Digital Library




ஸ்ரீ அலமேலுமங்கை தாயார் திருச்சானூர் திருவேங்கடமுடையான் திருமலை

Koviloor Digital Library

ஆஜானுபாகுவாக ஆறடி உயரமும், தோற்றப் பொலிவும் கொண்ட ராமானுஜர் தலைவர்க்குரிய அருங் குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர். ஆளவந்தார் முதன்முறையாகக் காஞ்சியில் அவரைத் தொலைவில் கண்டபோது வைணவத்தின் எதிர்காலம் இவர் கையில் இருக்கிறது என்று தீர்க்க தரிசனத்துடன் சொன்னார். ஆளவந்தார் விரும்பியவற்றை ராமானுஜர் பூர்த்தி செய்தார். வைணவம் ஒரு வாழும் சமயமாக, பிரபல இயக்கமாக அவர் காலத்தில் மாறியது.

வரதாசார்யர் கூறினார்: 'நீ வேண்டி நின்ற என் மனைவியின் உடல் இதோ இருக்கின்றது; எடுத்துக் கொள். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டால், உடம்பு ஒரு தேவையற்ற இடைச் செருகல். நீ அவளுடைய உடலை எடுத்துக் கொள். ஆனால், அவள் உள்ளம் எனக்குச் சொந்தம்.'

வணிகன் திடுக்கிட்டான். அவன் வரதாசார்யர் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

இதைப் பற்றிக் கேள்வியுற்ற ராமானுஜர், வணிகனை அழைத்துத் தம் சிஷ்யனாக்கிக் கொண்டார். மன்னிப்புப் பெறத் தகுதி இல்லாதவர்கள் உலகில் இல்லையென்பது அவர் கருத்து. செல்வந்தராகிய யக்ஞேசரைக் கண்டபோது, ராமானுஜர் அவர் தமது கர்வத்தை ஒழித்தல் வேண்டுமென்று வற்புறுத்தினார். வைணவ அடியார்களுடைய ஆடைகளைத் துவைக்குமாறு யக்ஞேசரைப் பணித்தார். இதுவே அடக்கத்தையும் பெற வழி என்றும் கூறினார்.

திருப்பதி மலைகளில் ராமானுஜர் தவழ்ந்துகொண்டே சென்றார். தம் பாதங்களை வைத்துக் களங்கப்படுத்தக் கூடாதென்பதற்காக அவர் இவ்வாறு சென்றார். அங்கு அவர் தம்முடைய சிஷ்யர் அனந்தாழ்வானைக் கண்டார். அனந்தாழ்வான், ராமானுஜருடைய விருப்பத்துக்கேற்ப, திருப்பதிக்கு வந்து, நந்தவனம் அமைத்து இறைவனை வழிபட்டார். பொழில் வண்ண மலர்களோடு பூத்துக் குலுங்கியது. 'முன்பு உன் பக்திக்கு வித்திட்டேன். இப்பொழுது அதன் பலன் கிடைத்தது' என்று ராமானுஜர் அவரைத் தழுவிக்கொண்டு கூறினார்.

பொழில்களில் பூப்படுக்கைகள் விரிந்திருந்தன. நீண்ட வளர்ந்த மரங்கள் இருந்தன. வண்டுகளின் ரீங்காரமும், புள்ளினங்களின் இன் னிசையொலியும், இயற்கையின் அழகை விமர்சித்தன. சமயத்தை அழகு வழிபாட்டின் அடிப்படையில் கண்ட ராமானுஜர், இறைவனை புவனசுந்தர ராகக் கண்ட ராமானுஜர், மெய்ம்மறந்து நின்றார். இயற்கையில் இறைவனைக் கண்டு, இந்த ஐக்கியத்தில் தம்மையும் கரைத்து தெளிந்து நின்றார்.

அவர் தமது மாமனாகிய திருமலை நம்பியுடன் ஓராண்டுக் காலம் வசித்தார். இருவருமாக ராமாயணத்தை விசிஷ்டாத்வைத கண்ணோட்டத்துடன் ஆராய்ந்தனர். ஒரு நாள் ராமானுஜர் நந்தவனத்திலிருந்து திரும்பும்போது, ஒருவர் பாம்பின் வாயில் விரலை விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். அருகில் சென்று பார்த்ததும் அவர் தம்முடைய சிறிய தாயார் மகன் கோவிந்தரென்று அறிந்தார். அவர் செய்கை பற்றிக் கேட்டபோது, கோவிந்தன் சொன்னார்: 'பாம்பு என் காலருகே வந்து வாயைத் திறந்தது. அதன் நாக்கில் ஒரு முள் இருந்தது. அதை எடுத்தேன்'. ராமானுஜர் அவரைத் தழுவினார். 'நீதான் உண்மையான வைஷ்ணவன். துன்புற்ற உயிரினமொன்று, அது கொடுமை வாய்ந்ததாயினும் அதன் துன்பத்தைக் களைந்தாய்' என்று மகிழ்ந்தார்.

அவர் திருவரங்கம் திரும்பிச் சென்றபோது கோவிந்தரையும் உடன் அழைத்துச் சென்றார். கோவிந்தரின் தாய்க்கு ஒரு வருத்தம். மகன் மணமாகிய போதிலும் மனைவியுடன் இல்லறம் நடத்தவில்லையென்று வேதனை கொண்டிருந்தார். ராமானுஜரைக் கோவிந்தருக்கு அறிவுரை சொல்லும்படி வேண்டினார். உடையவர் இந்தச் செய்தியைக் கோவிந்தரிடம் கூறி, மனைவியுடன் இல்லறம் நடத்தும்படி பணித்தார். ஒரு நாளிரவு கோவிந்தரும் அவர் மனைவியிடம் பள்ளியறையில் சந்தித்தனர். கோவிந்தர் மனைவியுடன் இறைவன் திருப்புகழ் பற்றிக் கூறத் தொடங்கினார். சிற்றின்ப அறை பேரின்ப அறையாயிற்று. அடுத்த நாள், கோவிந்தரின் கொள்கை உறுதியைப் பற்றிக் கேள்விப்பட்ட எம்பெருமானார், அவரைத் துறவறம் மேற்கொள்ளச் செய்தார். புலனடக்கம் பெற்ற கோவிந்தர் இதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் என்று தீர்மானித்தார் ராமானுஜர். கோவிந்தர் தத்துவ நூல்களை எல்லாம் கற்றுணர்ந்த பெரியார். அவருக்கு 'எம்பார்' என்ற பெயர் வழங்குவதாயிற்று.

திருப்பதியில் எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானுக்கு ராமானுஜர், சங்கும், சக்கரமும் வழங்கிய தாகக் கதைகள் கூறுகின்றன. இது குறித்து பலவிதமான விளக்கங்கள் தரப்படுகின்றன. திருப்பதி ஒரு காலத்தில் முருகன் ஸ்தலமாக இருந்ததென்றும், பிறகு ராமானுஜரின் முயற்சியினால் வைணவப்பதி ஆயிற்று என்றும் கூறுவர். வேறு சிலர், காணாமற்போன சங்கையும், சக்கரத்தையும்தான் ராமானுஜர் மீண்டும் அப்பனுக்குச் சாத்தினார் என்றும் கூறுவர்.

இந்தக் காலத்தில்தான் ராமானுஜர் பிரம்ம சூத்திரத்துக்கு பாஷ்யம் எழுதினார். அவருடைய கொள்கைகள் நாடெங்கும் பரவியிருந்தன. ஒரு புதிய சமய சூழ்நிலை உருவாவதற்கு அவர் காரணமாக இருந்தார். அவருடைய குருவாகிய ஆளவந்தாரின் திருமேனியின் எதிரே அவர் எடுத்துக்கொண்ட சபதங்கள் நிறைவேறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அவர் மனத்துக்குப் பட்டது.

Koviloor Digital Library

பாஷ்யம் எழுதுவதைப் பற்றி அவர் சிந்திக்கத் தொடங்கினார். 'போதாயன விருத்தி' என்ற நூல் பற்றி அவர் கேள்விப்பட்டிருந்தார். ஆதிசங்கரர் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். காஷ்மீரில் ஒரு பிரதி கிடைக்கின்றது என்று அறிந்தார். கூரேசருடன் அவர் காஷ்மீர் யாத்திரை செய்யப் புறப்பட்டார். சமஸ்கிருத பண்டிதர்கள் இந்த நூலின் ஏட்டுச் சுவடியை ராமானுஜருக்குக் காட்டத் தயங்கினார்கள். ராமானுஜர் அரசரைக் கண்டு பேசினார். அவருடைய கூர்மையான அறிவும் பொலிவும் அரசரை மிகவும் கவர்ந்தன. அவர் அந்த நூலை ராமானுஜருக்கே அளித்து விட்டார். அவர் அந்த நூலை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றபோது, காஷ்மீர் பண்டிதர்களின் ஆட்கள் வழியில் தாக்கி, நூலைத் திரும்ப எடுத்துக்கொண்டு வந்து விட்டார்கள். இதனால் வருந்திய ராமானுஜரிடம், கூரேசர் அதுபற்றி வருந்த வேண்டாம் என்றும், தாம் அந்நூல் முழுவதையும் மனப்பாடம் செய்துவிட்டதாகவும் கூறினாரென்றும் கர்ண பரம்பரைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீரங்கம் திரும்பியவுடன் பாஷ்யம் எழுதத் தொடங்கினார் ராமானுஜர்.

மூன்று விருப்பங்களும் நிறைவேறின

ராமானுஜர் நூற்றிருபது வயது வரை வாழ்ந்தார். மைசூரிலிருந்து வந்த பிறகு, இருபது வருஷங்கள், வைணவ சமயம் நிலைநிற்பதற்கான முயற்சிகளை அவர் தளராமல் மேற்கொண்டார். கூரேசரின் மறைவு அவருக்கு அதிர்ச்சி தந்தது என்பது வாஸ்தவம். ஆனால், கணவன் மறைவில் மிகவும் சோர்ந்திருந்த ஆண்டாளை ஆறுதல் கூறித் தேற்றினார் உடையவர். அவளும் கூரேசர் மறைந்த பிறகு, வெகு நாட்கள் வசிக்கவில்லை.

உறங்காவில்லி இறந்தார். ராமானுஜர் அவரை மரியாதைகளுடன் எடுத்துச் செல்வதற்காக ஒரு பூப்பல்லக்குத் தயாரிக்கச் சொன்னார்.

பக்தர்களும் அந்தணர்களும் உறங்காவில்லியின் பூதவுடலைப் பல்லக்கில் எடுத்துக்கொண்டு போனார்கள். பொன்னாச்சியும் அதிர்ச்சியில் இறந்து போனாள். அவளுடலும் உறங்காவில்லியின் உடலுக் கருகே வைக்கப்பட்டு இறுதிச்சடங்குகள் நடந்தேறின.

தம்முடைய முடிவும் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று உணர்ந்தார் ராமானுஜர். ராமானுஜ தரிசனம் நாடெங்கும் பரவி, ஆயிரக்கணக்கான மக்கள் அவரைக் காண திருவரங்கத்துக்குத் திரண்டு வந்து கொண்டிருந்தனர். வைஷ்ணவ மதம் பொதுமக்களின் ஆதரவு பெற்ற ஒரு இயக்கமாக மாறியது. ஆளவந்தாரின் மூன்று விருப்பங்களையும் அவர் நிறைவேற்றிவிட் டார். பிரம்மசூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைத மதத்தின் அடிப்படையில் பாஷ்யம் எழுதி விட்டார். கூரேசருடைய முதல் புத்திரருக்குப் பராசரன் என்ற பெயரைச் சூட்டி ஆளவந்தாரின் மூன்றாவது விருப்பமாகிய நம்மாழ்வார் பெயரை நிறுவ, தம் சிஷ்யரை (திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று) அழைத்தார்.

பிள்ளானை, நாலாயிரத்துக்கு வியாக்கியானம் எழுதப் பணித்தார். வியாக்கியானத்தைப் படித்து மகிழ்ந்து அதற்கு, 'பகவத் விஷயம்' என்று பெயர் வைத்தார். 'ஸ்ரீ பாஷ்யத்துக்கு நிகரான பெருமை யுடையது பகவத் விஷயம்' என்றார் அவர்.

ராமானுஜர் வைஷ்ணவ மதத்தைப் பரப்ப எழுபத்து நான்கு தலைவர்களை நியமித்தார். ஸ்ரீ பாஷ்யத்தைப் ப்ரவசனம் செய்யும் பொறுப்பை திருக்குருகைப் பிள்ளான், நடாதூர் ஆழ்வான், கிடாம்பி ஆச்சான், முதலி யாண்டான் ஆகியோரிடம் ஒப்புவித்தார். திருக்குருகைப் பிள்ளான் நாலாயிர வியாக்கியானத்தை விரிவாக அனைவருக்கும் கற்றுக் கொடுக்கும் மற்றொரு பொறுப்பையும் ஏற்றார். அவருக்கு 'ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய உபய சிம்மாசனாதிபதி' என்ற பட்டப்பெயர் ஏற்பட்டது.

கூரேசருடைய இரு புத்திரர்களாகிய பட்டர், ஸ்ரீராமப் பிள்ளை ஆகியோருக்கு வேதாந்தத்தில் பிரத்யேகப் பயிற்சி அளிக்கும்படி 'எம்பாரை'ப் பணித்தார்.

ஆளவந்தாரைப் போல் கருவிலே திருவுடையவர் பட்டர். சிறுவராக இருந்தபோது ஒரு சமயம் தெருவிலே விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆணவம் மிகுந்த ஒரு அறிஞர்தாம் விருது பெற்றவர் என்று சொல்லிக் கொண்டு வந்தார். பட்டர் அவரை யாரென்று கேட்டார். அறிஞர் தாம் தர்க்க சாஸ்திரத்தில் சிறந்தவரென்றும் தன்னை அதுவரை எவரும் வாதத்தில் முறியடித்ததில்லை என்றும் கூறினார். பட்டர் உடனே கீழே கிடந்த மண்ணை ஒரு கை நிறைய வைத்துக்கொண்டு, 'மண் எவ்வளவு அளவு இருக்கும்?' என்று அவரைக் கேட்டார். அறிஞர் பதில் சொல்லமுடியாமல் விழித்தார். பட்டர் புன்னகையுடன் கூறினார்: 'கையளவு என்று சொல்வதுதானே? இதுகூடத் தெரியவில்லை உங்களுக்கு. விருது ஒரு கேடா?' அறிஞர் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு சிறுவராகிய பட்டரை வாழ்த்தினார். ராமானுஜர் இந்தச் செய்தியைக் கேட்டதும் பட்டரைக் கூப்பிட்டனுப்பி ஆசீர்வாதம் செய்தார். பட்டருக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகக் கூறினார் உடையவர். அது உண்மையாயிற்று. ராமானு ஜருக்கு அடுத்த வைஷ்ணவத் தலைவர் ஆனார் பட்டர்.

ராமானுஜர் தாம் இறப்பதற்கு முன்னால் தம்முடைய சிஷ்யர்களை அழைத்தார். எம்பார் மடியில் தலையை வைத்துக்கொண்டு, கால்களை வடுகநம்பியின் மேல் போட்டுக் கொண்டார். பிறகு அவர் பேச ஆரம்பித்தார்: 'நான் இறந்து போனால் ஒருவரும் என் மறைவு குறித்து அழக்கூடாது. உடம்புதான் அழிகின்றது. ஆத்மாவுக்கு அழிவு கிடையாது. மனிதன் உலகில் தனியாக இல்லை. அவனுக்குக் கடவுள் என்றும் துணை இருக்கிறார். கடவுளை மறந்தவர்கள் தங்களையும் மறக்கிறார்கள்.'

இவ்வாறு சொல்லிய ராமானுஜர் அப்பொழுதுதான் 'எண்பத்திரண்டு வார்த்தைகளை' அருளிச் செய்ததாக வைஷ்ணவ சம்பிரதாய வழக்கு.

எண்பத்திரண்டு வார்த்தைகளாவன: 'ஸ்ரீ வைஷ்ண வனையும் வணங்குதல் வேண்டும். அவர்களுடைய உபதேசங்களில் நம்பிக்கை வைக்க வேண்டும். புலனுணர்

Koviloor Digital Library

ஸ்ரீ கோமளவல்லீ - ஸ்ரீ சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி) காஞ்சிபுரம்

வுக்கு அடிமையாகக் கூடாது. லௌகீக அறிவுக்கு எல்லையுண்டு. ஆச்சார்யார்களுடைய போதனைப்படி நடத்தல் வேண்டும். குருவின் கடாட்சம் விழுந்தால், புலனுணர்வுகள் உனக்குத் தொந்தரவு தராது. குருவின் தயவு கொண்டு உயர்ந்த ஒருவன் ஆசைக்கு அடிமையாக மாட்டான். பக்தர்களின் திருநாமங்களையும் இறைவரின் திருநாமங்களையும் ஒன்றுசேர நினைத்தல் வேண்டும். பாகவதர்களை வணங்குகின்றவர் இறைவன் அருளுக்குச் சீக்கிரம் பாத்திரமாவார். உண்மையான வைஷ்ணவனுக்குச் சுயநலம் கிடையாது. இறைவனையும் ஆழ்வார் பாசுரங்களையும் ஆச்சாரியார் உபதேசங்களையும் சேவிக்க தினந்தோறும் ஒரு மணி நேரமாவது ஒதுக்கல் வேண்டும். இறைவனிடம் சரணடைந்தவர்களை நாடிச் செல்ல வேண்டும்.

தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களோடு சேரக் கூடாது. புலனுணர்வே சொர்க்கம் என்று நினைக்கின்றவர்களைப் பார்க்கவே கூடாது. அர்ச்சாவதாரத்தை அலட்சியமாக நினைப்பவன் நரகத்துக்குப் போவான். குருவை சாதாரண மனிதனாக நினைப்பவனுக்கு உயர்வே கிடையாது. புண்ணிய தீர்த்தத்தை வெறும் நீராக நினைப்பவனுக்கு மோட்சம் இல்லை. தெய்வ மந்திரங்களை வேறு ஓசைகளின் அடுக்காகக் கருதுபவனுக்கு முக்தி என்றுமே கிட்டாது. இறைவனை சில்லறைத் தெய்வங்களில் ஒருவனாக நினைப்பவனுக்கு நல்ல கதி எந்நாளுமே இல்லை. கடவுளிடம் சரணடைந்துவிட்டால் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவே வேண்டாம்.

கடமையைக் கடவுள் பணியாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். ஸ்ரீ பாஷ்யத்தைப் படிக்க வேண்டும். படிப்பதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்குச் சொல்லித் தருதல் வேண்டும். ஆழ்வார்ப் பாசுரங்களையும் குறிப்பாகத் திருவாய்மொழியைப் படிக்க வேண்டும். இதைச் செய்ய முடியாவிட்டால், இறைவனுக்கும் அவனுடைய தொண்டர்களுக்கும் சேவை செய்தல் வேண்டும். இதுவும் முடியாவிட்டால், யாதவ கிரிக்குச் சென்று குடிலை அமைத்துக்கொண்டு வாழ வேண்டும். இதுவும் இல்லாவிட்டால் இருக்கும் இடத்திலேயே இருந்துகொண்டு த்வய மந்திரத்தைத் தியானித்துக்கொண்டு இருக்கவேண்டும். இதுவும் முடியாவிட்டால், ஒரு ஸ்ரீ வைஷ்ணவனை நாடி, அவன் உபதேசத்தின்படி வாழவேண்டும். இவ்வுலகில் ஸ்ரீ வைஷ்ணவர்கள்தாம் உங்களுக்கு நண்பர்கள். தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் உங்களுக்கு எதிரிகள். பக்தர்களை நாடி வாழ வேண்டும். நல்ல எண்ணம் நல்ல செயலுக்கு வழி வகுக்கும். பிறரிடம் தவறு கண்டுபிடிக்கக்கூடாது. உலகில் எவரும் குற்றமற்றவராக இருக்க முடியாது'.

இவ்வாறு சொல்லிக்கொண்டே இறைவனடி. எழுந்தருளினார் ராமானுஜர். சிஷ்யர்கள், குரு அவர்களை அழக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தாலும், துயரத்தை அடக்க முடியாமல் அழுதார்கள்.

திருவரங்கத்திலும் அதைச் சுற்றிலுமிருந்த ஸ்ரீ

Koviloor Digital Library

வைஷ்ணவர்கள் அங்கு கூடினர். வேத மந்திரங்களும், ஆழ்வார் பாசுரங்களும் ஒலித்தன. ராமானுஜர் பூதவுடல் கோயிலுக்குள் எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடந்தேறின. கோயிலுக்குள் அடக்கம் செய்யப்பட்ட ஒரே சநாதன மதத் தலைவர் ராமானுஜர்தாம்.

ராமானுஜர் விக்கிரகம், திருப்பதி, காஞ்சி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ராமானுஜருடைய தத்துவம் அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய கருத்துக்களுக்கு அஸ்திவாரமிட்டது. ராமானந்தர், சைதன்யர், ராமதாசர் ஆகியோர் பிற மதத் தாக்குதல்களை ராமானுஜர் கண்ட பக்தி நெறி மூலம் சமாளித்தனர்.

சொல்லும் செயலும்

ஆஜானுபாகுவாக ஆறடி உயரமும், தோற்றப் பொலிவும் கொண்ட ராமானுஜர் தலைவர்க்குரிய அருங் குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர். ஆளவந்தார் முதன்முறையாகக் காஞ்சியில் அவரைத் தொலைவில் கண்டபோது வைணவத்தின் எதிர்காலம் இவர் கையில் இருக்கிறது என்று தீர்க்க தரிசனத்துடன் சொன்னார். ஆளவந்தார் விரும்பியவற்றை ராமானுஜர் பூர்த்தி செய்தார். வைணவம் ஒரு வாழும் சமயமாக, பிரபல இயக்கமாக அவர் காலத்தில் மாறியது.

அவர் காலத்தில் வழங்கிய தத்துவங்கள் அனைத் தையும் கரை கண்டார் ராமானுஜர். யாதவப் பிரகாசரிடம் இளமையில் அத்வைதம் பற்றித் தெளிந்தார். ஸ்ரீ பாஷ்யத்தைப் படித்தால் அவருடைய பலதிறப்பட்ட தத்துவப் புலமை புலனாகும். ஸ்ரீ பாஷ்யம் எழுதுவதற்கு முன்னால் தம்மை அதற்குத் தகுதியுடையவராகச் செய்ய எல்லாத் துறைகளிலும் தேர்ச்சிபெற்று அவற்றின் எல்லை எட்டினார் ராமானுஜர். யாதவப் பிரகாசருடன் மாறுபட்டாலும் அவர்மீது பகைமை பாராட்டவில்லை. யாதவர், கடைசியில் ராமானுஜரை வழிகாட்டும்படியாக அடைந்தபோது, அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை உடையவர்.

பொறுமை என்ற பண்பை அணிகலனாகக் கொண் டவர் ராமானுஜர். வாதத்தில் சினம் கொள்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும், தம்மை அடக்கிக் கொண்டு வாதத் திறமையோடு கூடிய தம்முடைய இனிய சுபாவத்தினால் எதிரிகளைத் தம் வழிக்குக் கொண்டுவந்தார். வெற்றிபெற வந்தவர்கள் ஆட்கொள்ளப்பட்டார்கள்.

சொல்வதின் மதிப்பு செயலில்தான் என்று பரிபூரண மாக உணர்ந்தவர் ராமானுஜர். தாமும் தன்னுடைய உபதேச நெறியில் நின்று வைணவத்தை ஒரு பொதுஜன இயக்கமாக மாற்றிய முதல் சமயத் தலைவர் ராமானுஜர்.

ராமானுஜருக்கு ஜாதி சமய ஏற்றத்தாழ்வு கிடையாது. இதுபற்றி ஒரு கதை இருக்கிறது.

திருவரங்கத்தின் புறப்பகுதியில் திருக்குலத்தைச் (ஹரிஜன வகுப்பு) சேர்ந்த ஒருவர் வசித்து வந்தார். அவர் இறைவன் திருநாமத்தைச் சொல்லிச் சொல்லி ஆழ்வார் பாசுரங்களை இனிமையாகப் பாடி மகிழ்வது வழக்கம்.

ஒருநாள் ராமானுஜர் ஆற்றில் நீராடிவிட்டு வந்தபோது, சிஷ்யர்களை முன்னே போகச் சொல்லிவிட்டு, அந்தப் பக்தனுடைய குடிசைக்குச் சென்றார். அவரைப் பாடச் சொல்லிக் கேட்டு மூன்று மணி நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தார் ராமானுஜர்.

ராமானுஜர் மிகச் சிறந்த மனோதத்துவ அறிஞர். பொன்னாச்சி மீது தீராக் காதல்கொண்ட உறங்கா வில்லியின் பிரேமையை இறைவன்மீது பக்தியாக மாற்ற முடியுமென்று அவர் சொன்னார். 'யாருக்கு அன்பு செலுத்தத் தெரிகின்றதோ, அவர்தான் உண்மையான பக்திமான்' என்பது அவர் முடிவு!

நம்பிக்கையும் இதயபூர்வமான ஈடுபாடும்தான் ஒரு சமயத்துக்கு அடிப்படை என்பதை நன்குணர்ந்தார் ராமானுஜர். இறைவனைக் கோட்பாட்டினின்றும் ஒதுங்கிவிட்ட எந்தச் சமயமும் காலத்தை வென்றுநின்றது கிடையாது. இறைவழிபாட்டில் அழகுணர்ச்சியையும் இணைத்து, கடவுளைப் புவன சுந்தரனாகப் பாவித்து வணங்கிய ராமானுஜர் நெறி, மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. சத்தியம், ஒழுக்கம், அழகு ஆகிய மூன்றையும் ஒன்று சேரக் கண்ட தத்துவமே ராமானுஜரின் சமய தரிசனம்.

ஆழ்வார் இறைவனை ஆனந்தத்தின் எல்லையாகக் கண்டார். பக்தர்கள் பலவிதமான இன்பங்களை வெவ்வேறு நிலைகளில் அனுபவித்தாலும் இறைவனுடன் ஒன்றும் பேரின்பத்தையே உண்மையான அனுபவமாக அவர்கள் கருதினார்கள்.

இறைவன் மனித சமுதாயத்தின் மீதுள்ள எல்லையற்ற அன்பின் காரணமாக அவதாரம் எடுக்கிறான். ஆழ்வார்கள் மனித அவதாரங்களாகிய ராமனுடைய அவதாரம் பற்றியும், கிருஷ்ணன் லீலைகள் பற்றியும் நெஞ்சுருகப் பாடியிருக்கிறார்கள். ஆண்டாள், கிருஷ் ணனைத் தவிர வேறு எவரையும் மணப்பதில்லை என்று உறுதிபூண்டு, இறைவனுடன் ஒன்றிவிட்ட பாவத்தை அற்புதமாகப் பாடியிருக்கிறாள். ராமானுஜர், தம்முடைய சிஷ்யர்கள் யாவரும் ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் படித்தாக வேண்டுமென்று வற்புறுத்தினார். அவரே பல சமயங்களில் நாலாயிரத்தைச் சேவித்துக்கொண்டே இருப்பது வழக்கம்.

கர்மத்தை வற்புறுத்தியது சநாதன தர்மம். ஆனால் ராமானுஜர், ஒருவன் எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும், இறைவனுடைய லீலைகளில் மனம் ஈடுபட்டால் அவனருளைப் பெறுவதற்கு உரிமையுண்டு என்று நம்பினார். திருப்பாணாழ்வார் வரலாறு அவர் உள்ளத்தைத் தொட்டது. அதை அவர் அடிக்கடி சொல்வது வழக்கம். ஆழ்வார்கள் பாசுரங்களையும் வரலாற்றையும் எல்லாரும் அறிய அவர் வழிவகுத்தார்.

எழுத்தாளரும் நாடக ஆசிரியருமான இந்திரா பார்த்தசாரதி ராமானுஜரைப் பற்றி எழுதிய நூலிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. கிழக்கு பதிப்பகம் வெளியீடு.

Koviloor Digital Library

இளங்கண்ணன்

ராமானுஜர் வாழ்வின் அற்புதங்கள்

வேடன் அந்தணனுக்கும் மேலோன்

அறிவின் பண்பும் உள்ளத்தின் பண்புமே நன்மைக்குக் காரணங்கள். சாதியல்ல என்பதை அறிந்துகொள்ளுங்கள். சாதி பற்றிய உங்கள் கர்வத்தை விடுத்து நல்ல பண்புகளைக் கைக்கொள்ளப் பாடுபடுங்கள்.

பிறவிப் பயன் என்பதைப் புருஷார்த்தம் என்பர். தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்று புருஷார்த்தம் நான்கு வகைப்படும். திருமாலுக்குச் செய்யும் தொண்டே புருஷார்த்தம் எனப்படும். இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சரீர ஆன்மத் தொடர்பு என்பது இத்தொண்டினையே குறிக்கும். சோதிவடிவாய் மேவும் எம்பெருமானுக்கு 'ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்'' என்பதே ஆழ்வார்களும் ஆச்சார்யர்களும் எடுத்துரைத்த கருத்தாகும். இவ்வாறு ஈடுபடும் இல்லறத்தார் 'அடியார்'' என்றும் முற்றும் துறந்த துறவிகளைப் 'பகவர்'' என்னும் குறிப்பிடுவர்.

இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருந்தாலும் திருக்கோயிலில் சிறந்து விளங்கும் திருமூர்த்தியின் மூலம்தான் நாம் அருள்பெற இயலும். எனவே, பகவத் ராமானுஜர் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்தினார்.

ராமானுஜர் அவன் தோள்களை ஆதரவுடன் பற்றிக்கொண்டார். வாரி எடுத்து அணைத்துக்கொண்டார். பொன்னாச்சியை அழைத்துக்கொண்டு வருமாறு பணித்தார்.

சாதி வேறுபாட்டுக்கு இடமில்லை

ராமானுஜரால் இவ்வாறு இறை வழிபாட்டில் ஈடுபடுத்தப்பட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் உறங்காவில்லி என்பவர். இவர் வேடர் குலத்தவர். ராமானுஜர் திருமால் நன்னெறியில் தீண்டாமைக்கோ, அல்லது சாதி வேறுபாட்டுக்கோ இடமில்லை என்ற தீர்க்கமான கொள்கை உடையவர். இவரது மானசிக குருவான ஆளவந்தாரின் பதினாறு சீடர்களில் ஆண்களோடு பெண்களும், அரசனோடு ஆண்டியும், பார்ப்பனரோடு பஞ்சமரும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்போரில் வல்லனான உறங்காவில்லிக்கு வண்டவில்லி, செய்டவில்லி என்று இரண்டு மருமக்கள் இருந்தனர். இப்பெயர்களை வந்தன், சுந்தன் என்றும் குறிப்பிடுவர். உறங்காவில்லி, அகளங்கன் என்னும் சோழனின் மெய்க்காப்பாளர்களுள் ஒருவன் சோழமன்னனான முதலாம் குலோத்துங்கன் மகனே அகளங்கன் என்பர். மருமக்களும் அப்படியே. இச்செய்தி ஆறாயிரப்படி குரு பரம்பரை மூலம் அறியப்படுகிறது.

Koviloor Digital Library

காஞ்சி வரதர்

Koviloor Digital Library



திருக்குறுங்குடியில் ஸ்ரீராமானுஜர்

உறங்காவில்லி தனது காதல் மனைவி பொன்னாச்சியின் கண்ணழகில் மயங்கிக் கிடந்தான். அவனை மாற்ற எண்ணினார் உடையவர். ராமானுஜர் உறங்காவில்லியைத் திருவரங்கரனைத் தரிசிக்கச் செய்தார். இந்த அழகுத் திருமேனியைக் காண ஆயிரம் கண் வேண்டும் என்று எண்ணினான் வில்லி.

"பவளவாய் கமலச் செங்கண்" (திருமாலை-2) என்று தொண்டரடிப் பொடியாழ்வார் வர்ணிக்கும் அழகிய அரங்கனின் மேல் வைத்த பார்வையை வில்லி எடுக்கவில்லை.

அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்ற ஒன்றினைக் காணாவே
(அமலனாதிபிரான் - 10)

என்று திருப்பாணாழ்வார் போற்றிய நிலையை அடைந்துவிட்டான் உறங்காவில்லி. 'கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாயகண்கள் (அமலனாதிபிரான் - 8) அவனைத் தம் பக்கம் முழுமையாக ஈர்த்துவிட்டன. 'இப்படிப்பட்ட நித்திய அழகை விடுத்து அழியும் அழகின் மேல் ஆசைப்பட்டேனே' என்று வருந்தினான். விம்மினான், கண்ணீர் வடித்தான்.

ராமானுஜர் அவன் தோள்களை ஆதரவுடன் பற்றிக் கொண்டார். வாரி எடுத்து அணைத்துக்கொண்டார். பொன்னாச்சியை அழைத்துக்கொண்டு வருமாறு பணித்தார் உடையவர்.

எதிராசர் தமது மடத்தில் உறங்காவில்லி, பொன்னாச்சி இருவருக்கும் பஞ்ச சம்ஸ்காரம் செய்தார். பிள்ளை உறங்காவில்லி தாசர் (தனுர்தாசர்) என்ற தாஸ்யநாமத்தை உறங்காவில்லி பெற்றார். பொன்னாச்சி ஹேமாம்பாள் மற்றும் இரு மருமக்களும் பஞ்ச சம்ஸ்காரம் பெற்றனர்.

ஓடக்கார வேடன் குகனை, இராமபிரான் தனது சகோதரர்களுள் ஒருவனாக ஏற்றுக்கொண்டதைப் போல் பிள்ளை உறங்காவில்லி தாசரைத் தன் முக்கியச் சீடர்களுள் ஒருவராக இராமானுஜர் வைத்துக் கொண்டார். உறங்காவில்லி தாசர் அகளங்கனின் உறையூரை விடுத்துத் திருவரங்கம் வந்து இராமானுஜர் மடத்தருகே குடிசை அமைத்து ஹேமாம்பாளுடன் தங்கினார். பிற்காலத்தில் அகளங்கன் ராமானுஜரின் சீடராகி அகளங்க நாட்டு ஆழ்வான் என்னும் பெயர் பெற்றார்.

பொறாமையும் ஆணவமும்

வேடன் சீடனானர் என்பதை அறிந்த அன்றைய பிராமணர்கள் சிலர் வெறுப்புற்றனர். குருபக்தி, ஆசையின்மை, நேர்மை, இனிமையான பேச்சு, மனஉறுதி ஆகிய, பிள்ளை உறங்காவில்லிதாசரின் நற்பண்புகளில் ஈடுபட்டு, எல்லா ஆண்களும், பெண்களும் அவரையும் பொன்னாச்சியையும் எம்பெருமானாரின் கருணைக்கு உரியவர்கள் என்பதனால் மிகுந்த மதிப்புடன் நடத்தினர். வேடனான உறங்காவில்லிக்கு ராமானுஜர் அதிக இடம் கொடுக்கிறார் என்று பிராமண சீடர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர், சிலர் பொறாமைப்பட்டனர்.

ராமானுஜர், பிள்ளை உறங்காவில்லி தாசருக்குத் தமது மடத்தில் மட்டுமல்லாது மனத்திலும் மகத்தான இடம் கொடுத்திருந்தார் என்பதை வெளிப்படையாகக் காட்டும் நிகழ்ச்சி ஒன்றைப் பிராமண சீடர்கள் ஒருநாள்

Koviloor Digital Library

கண்டனர். ராமானுஜர் தமது திரிதண்டமும் பவித்திரமும் என்று கூறும் முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் அவர் எங்கு சென்றாலும் தாங்களும் அவர் பக்கத்தில் கூடவே செல்வர். இந்த இரண்டு பேர்களுடன்தான் அவர் காவிரிக்கு நீராடச் செல்வார். குளித்து முடித்துவிட்டு வரும்போது அவர்களது தோள்களில் ஈரத்துண்டைப் போட்டு அதன் மீது தமது கைகளை வைத்துக்கொண்டு வருவார், அவர்கள் இருவரது வெறும் தோள்களில் தமது கை பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

இதைக் கவனித்த சீடர்கள் எதற்காக இப்படி நமது குருநாதர் நடந்துகொள்கிறார் என்று பேசிக்கொண்டனர். ஒரு நாள் நேரடியாகவே கேட்டுவிட்டனர். இதற்கு இராமானுஜர், 'அவர்கள் மனதிலிருந்து தாங்கள் அதிகம் கற்றறிந்தவர்கள் என்னும் ஆணவம் அடியோடு அழிந்துவிடவில்லை. அவர்கள் தோள்களில் கை பட்டால் அந்த ஆணவம் என்னும் உள் அழுக்கு என்னையும் பாதித்துவிடும் என்ற அச்சத்தினால்தான் நான் உங்கள் இருவரது தோள்களில் ஈரத்துண்டைப் போட்டு அதில் கைவைத்து நடந்து வருகிறேன்' என்றார்.

ஒருமுறை இராமானுஜர் காவிரியில் நீராடிவிட்டு வரும்போது எதிரே பிள்ளை உறங்காவில்லிதாசர் வந்தார். உடனே ராமானுஜர் முதலியாண்டான் மீதும் கூரத்தாழ்வான் மீதும் போட்டிருந்த தமது கைகளை எடுத்து பிள்ளை உறங்காவில்லிதாசரின் வெறும் தோள்மீது போட்டுக்கொண்டு அவரோடு நடக்க ஆரம்பித்தார். இதைக் கண்ட ஆண்டானும் ஆழ்வாரும் திகைத்தனர். ராமானுஜரின் அந்தச் செயலை அவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. இரண்டில் ஒன்று தெரிந்தாக வேண்டும் என்ற முடிவோடு உடையவரிடம் விளக்கம் வேண்டினர்.

புன்னகைத்த ராமானுஜர் "நான், எனது என்னும் ஆணவத்தின் இம்மியளவும் படாத இதயத்துக்குச் சொந்தக்காரர் இந்த வில்லிதாசர். இவரது தோள்களைத் தொடுவதால் எனது தர்மத்திற்கு எந்தவிதமான குறையும் (பங்கமும்) ஏற்பட்டுவிடாது. அதனால்தான் நான் வில்லிதாசர் தோள்மீது ஈரத்துணி போடவில்லை" என்றார்.

இந்த நிகழ்ச்சி புதிய செய்தியாகி மடத்தில் இருந்த துறவிகளிடையே காட்டுத் தீயாகப் பரவியது. இதனால் மடத்திலுள்ள சிலர் ராமானுஜர்மீது வெறுப்புக் கொண்டனர். தாங்கள் தாம் உயர் குலத்தவர் என்று எண்ணிக்கொண்டு அந்த மடத்தில் இருந்த பிராமணர்களால் இதைச் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. குலத்தில் தாழ்ந்தவனான ஒரு வேடனுக்குத் தரும் மரியாதையை பிராமணர்களான தங்களுக்கு ராமானுஜர் தரவில்லையே என்று அவர்கள் புழுங்கினார்கள். சிலர் பொங்கி எழுந்தனர். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இது குறித்து உடையவரிடம் நேரிலேயே கேட்டனர். "நீராடிய பின் மறக் குலத்தைச் சேர்ந்த வேடனின் வெறும் தோள்களைப் பற்றிக்கொண்டு வருவது தூய்மையைக் கெடுத்துவிடாதா?' என்று வினாக்களைக் கணைகளாகத் தொடுத்தனர்.

தமது சீடர்களின் பொறாமையை உணர்ந்த இராமானுஜர் "பிள்ளை உறங்காவில்லி தாசர் உள்ளத்தூய்மை கொண்டவர். சாதிச் செருக்கு ஒன்றே தூய்மையானது என்று நினைக்கும் பிராம்மணனைவிட அவர் ஆயிரம் மடங்கு சிறந்தவர்" என்று பதிலளித்தார்.

உள்ளத்தில் நல்ல உள்ளம்

வில்லி என்னும் வேடன் வேதியர்களைவிட மேலானவன் என்பதை நிருபிக்க ஒரு தருணத்தை உண்டாக்கினார். ஒருநாள் தமது அந்தரங்கச் சீடரை அழைத்தார். அந்தச் சீடரிடம் மற்ற சீடர்கள் காயப்போட்டிருக்கும் வேட்டிகளிலிருந்து யாருக்கும் தெரியாமல் கௌபீனத்துக்குத் (கோவணம்) தேவையான அளவு துணியைக் கிழித்துவிடும்படி கூறினார். குருவின் ஆணையைச் சீடர் நிறைவேற்றிவிட்டார். கிழித்த துணிகளை இராமானுஜரிடம் கொடுத்தார்.

மறுநாள் சீடர்கள் தங்கள் வேட்டிகளிலிருந்து கோவணத்துக்குத் தேவையான அளவு துணி கிழிக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். அந்த பிராமண சீடர்கள் தங்கள் நிலையில் தாழ்ந்து மோசமான வார்த்தைகளால் திட்டினர்.

அனைவரும் இராமானுஜரிடம் சென்று முறையிட்டனர். இந்த நாடகத்தின் சூத்திரதாரியான அவர் ஒன்றும் தெரியாததுபோல் இருந்தார். சீடர்கள் வாய்க்கு வந்தபடி வசைமாரி பொழிந்தனர். 'கிழித்தவன் கையில் கிடைத்தால் கிழித்துவிடுவோம், என்றனர் கோபாவேசமாக.

"கோவணத்துக்குத் தேவையான அளவு மட்டும்

அமுத மொழிகள்

பிரஹ்மத்தை நேராக உய்த்துணரும் அனுபவமே உபாசனை.

பற்றை ஒழிப்பதும்,
பாவங்களினின்றும் நீங்கப்
பெறுவதும் ஞானத்தினால்
நிகழ்வதாகும்.

உலகில் எல்லாப் பொருள்களும்
என்னைப் பொறுத்தவரையில் சமம்.
உயர்வு, தாழ்வு கிடையாது. ஜாதியில்
உயர்ந்தவர், தாழ்ந்தவர், அறிவோர்,
எளியோர் என்று நான் வேறுபாடு
பாராட்டுவதில்லை

Koviloor Digital Library

கிழித்துச் சென்றிருப்பதால் நமது மடத்திற்குள் யாரோ ஒரு வைணவர்தான் எடுத்திருக்க வேண்டும்'' என்றார் ராமானுஜர்.

"எது எப்படியாயினும் வைணவ நெறியின் எண்பத்தியிரண்டு மகா வாக்கியங்களுள் ஒன்று, வைணவனாயிருப்பவர் பிறர் குற்றம் செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சாதாரணமாக விட்டுவிட வேண்டும் என்றுள்ளதல்லவா? நீங்களும் அப்படியே நடந்துகொள்ளுங்கள்'' என்று பிராமணர்களுக்கு அறிவுரை கூறினார் ராமனுஜர்.

ஆனால், அதை ஏற்றுக்கொள்ளாத பிராமணர்கள் 'திருடனைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும்'' என்று ஒருசேரக் குரல் எழுப்பினர். இராமானுஜர் அவர்களைக் கடிந்துகொண்டார். இந்த நிகழ்ச்சியை அடுத்து ஓரிரண்டு நாட்களுக்குப்பின் இராமானுஜர் தமது சீடர்கள் இருவரைத் தம்மிடம் வரும்படி அந்தரங்கமாக அழைத்தார். அவர்களிடம் 'இன்றிரவு நீங்கள் இரண்டு பேரும் உறங்காவில்லியின் வீட்டிற்குச் சென்று அவர் மனைவி பொன்னாச்சி அணிந்திருக்கும் நகைகளைத் திருடிக்கொண்டு வாருங்கள். இது நமக்குள் பரம ரகசியமாக இருக்கட்டும்'' என்றார்.

பிராமணர்கள் இருவரும் மல்லனான உறங்கா வில்லிக்கு அஞ்சினர். "அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் இரண்டு பேரும் திரும்பி வரும்வரை உறங்காவில்லியை மடத்தில் என்னுடனேயே வைத்துக்கொள்கிறேன் என்றார். வில்லிதாசரை அவரது வீட்டிலிருந்து வரவழைத்து "மடத்தில் ஓர் உபதேசம் கேட்க வேண்டும். அதற்காக இரவு இங்கே தங்க வேண்டும்'' என்று ஆணையிட்டார் ராமானுஜர். உறங்காவில்லிதாசரும் அதனை ஏற்றுக்கொண்டு மடத்திலேயே தங்கினார்.

ராமானுஜர் கூறியபடி பிராமணர்கள் இருவரும் நள்ளிரவில் உறங்காவில்லியின் குடிசைக்குச் சென்றனர். கணவரின் வருகைக்காகக் கதவைப் பூட்டாமல் வெறுமனே சாத்தியிருந்தார் அவரது தர்மபத்தினி பொன்னாச்சி. சீடர்கள் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு பூனைபோல் உள்ளே புகுந்தனர். கதவுக்கு முதுகைக் காட்டி இடப்புறம் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் பொன்னாச்சி. பிராமணர்கள் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டு உறங்குவது போல் நடித்தார். இருவரும் அவளது வலது கை வளையல்களையும் வலது காதுத் தோட்டையும் பூப்போலக் கழற்றிப் பத்திரமாக வைத்துக்கொண்டார்கள். என்ன நடக்கிறது என்பதை ஹேமாம்பாள் அறிந்திருந்தார். ஆனால், தான் சிறிது அசைந்தாலும் பிராமணர்கள் ஓடிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார் அந்தப் பொன்மனதுக்காரி.

வலது பக்கத்து நகைகளைக் கழற்றிய பின், பாவம், அந்த ஏழை பிராமணர்கள் தனது இடது பக்கத்து நகைகளையும் கழற்றிக்கொள்ளட்டுமே என்று, தூக்கத்தில் புரள்வதுபோல் பாசாங்கு செய்து வலப்புறம் திரும்பிப் படுத்தாள் பொன்னாச்சியார். விழித்துக் கொண்டுவிட்டார் என்று அஞ்சி அவ்விருவரும் நகைகளுடன் ஓடிச் சென்றுவிட்டனர்.

வீட்டிற்குள் நுழைந்ததும் பொன்னாச்சியின் தோற்றத்தைக் கண்டு உறங்காவில்லிதாசர் ஆச்சரியமடைந்தார். "என்ன இது? ஒரு பக்கத்தில் நகைகளை அணிந்துள்ளாய். வலது பக்கம் அணிய மறந்து விட்டாயா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

அவர்கள் வருவதை அறிந்த இராமானுஜர் வில்லியை வீட்டுக்குச் செல்லுமாறு அனுப்பிவைத்தார் சீடர்கள் ராமானுஜரிடம் நடந்ததைக் கூறி நகைகளை அவரிடம் கொடுத்தனர்.

ராமானுஜர் வீட்டுக்குச் செல்லுமாறு உறங்காவில்லியிடம் கூற மடத்திலிருந்து வீட்டுக்கு புறப்பட்டுச் சென்றார் அவர். உடனே ராமானுஜர் அந்த இரண்டு சீடர்களையும் அழைத்தார். "நீங்கள் இரண்டுபேரும் இப்பொழுது வில்லியின் பின்னாலேயே அரவமில்லாமல் நடந்து சென்று, அந்த வீட்டில் என்ன நடக்கிறது என்பதை மறைவாக இருந்து தெரிந்துகொண்டு வாருங்கள்'' என்று அனுப்பினார். சீடர்களும் வில்லியைத் தொடர்ந்து சென்று அந்த வீட்டில் என்ன நடக்கிறது என்பதை ஒளிந்திருந்து பார்த்தனர்.

வீட்டிற்குள் நுழைந்ததும் பொன்னாச்சியின் தோற்றத்தைக் கண்டு உறங்காவில்லிதாசர் ஆச்சரிய மடைந்தார். "என்ன இது? ஒரு பக்கத்தில் நகைகளை அணிந்துள்ளாய். வலது பக்கம் அணிய மறந்து விட்டாயா?' என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

பொன்னாச்சி, "அத்தான் சற்று நேரத்திற்கு முன்பு இரண்டு அந்தணர்கள் இங்கு வந்தார்கள். நான் நீங்கள் வருவீர்கள் என்று கதவைப் பூட்டாமல் சாத்தி வைத்திருந்தேன். உள்ளே வந்த அந்தணர்கள் நான் உறங்கிக்கொண்டிருப்பதாக நினைத்து எனது வலது கை வளையல்களை, நீங்கள் ஆசையாக வாங்கி என் கைகளில் போட்டு அழகு பார்த்த அந்த வைர வளையல்களைக் கழற்றினார்கள். பாவம், அந்த இருவரும் வறுமை வாட்டியதால் திருட வந்தார்கள் போலும் என்று ஆடாமல் அசையாமல் படுத்திருந்தேன். அதன் பிறகு எனது வலது காதில் இருந்த தோட்டைக் கழற்றினார்கள். அவர்களுக்கு

Koviloor Digital Library

என்ன கஷ்டமோ இந்த வளையலும் தோடும் போதாது, இடது பக்கத்தில் அணிந்துள்ள வளையல்களையும், தோட்டையும் கழற்றி எடுத்துக்கொண்டு போய் விற்று அவர்களது வறுமையைப் போக்கிக் கொள்ளட்டும் என்று எண்ணி அவர்கள் நகைகளைக் கழற்றுவதற்கு தோதாக நான் புரண்டு படுத்தேன். ஆனால், அவர்கள் நான் விழித்துக்கொண்டுவிட்டேன் என்று நினைத்து பயந்துபோய் ஓடிவிட்டார்கள்'' என்றாள்.

பொன்னாச்சி சொன்னதையெல்லாம் கவனமாகக் கேட்ட பிள்ளை உறங்காவில்லி தாசர், ''என்ன காரியம் செய்துவிட்டாய்? நீ புரண்டு படுத்தது உனது குற்றம். நான் ஆசையாய் அணிந்திருந்த வளையல்கள் என்று பேசுகிறாயே? இவை எனது நகைகள், நான் இவற்றை அந்த பிராமணர்களுக்குக் கொடுக்கிறேன் என்று நீ நினைத்திருக்கிறாய். இந்தத் தவறான கருத்தால் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நீ இழந்துவிட்டாய், நீ இன்னும் சிறிது நேரம் அசையாமல் படுத்திருந்தாயானால் நீ நன்றாக உறங்கிக்கொண்டிருப்பதாக நினைத்து அவர்கள் எல்லா நகைகளையும் கழற்றிக்கொண்டு போயிருப்பார்கள் நீ புரண்டு படுத்து அந்த பாகவதர்களைப் பயந்தோடச் செய்துவிட்டாய். உன் நகைகளை நீ இறைவனின் உடமைகள் என்று கருதியிருந்தால் இந்தக் குற்றத்தை நீ செய்திருக்க மாட்டாய். உடைமைத் திமிர் இன்னமும் உன்னிடம் உள்ளது. நீ இன்னமும் 'நான்' 'எனது' என்னும் அகங்காரத்திலிருந்து விடுபடவில்லை என்பது தெளிவாகிறது'' என்று வருத்தத்துடனும், சினத்துடனும், கூறினார்.

உறங்காவில்லி தாசர் கோபத்துடன் கூறியதிலிருந்து உண்மையை உணர்ந்த பொன்னாச்சி ''தவறு அடியாளுடையதுதான் சுவாமி. இனிமேல் எப்போதும் அகங்காரம் தோன்றாதபடி அடியாளுக்கு ஆசி கூறுங்கள்'' என்று வேண்டினாள்.

இவற்றையெல்லம் ஒளிந்திருந்து கண்டும் கேட்டும் நின்றுகொண்டிருந்த சீடர்கள் அந்தத் தம்பதியர்மேல் பெருமதிப்புக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்று மடத்துக்குச் சென்றனர். ராமனுஜரிடம் நடந்தது நடந்தபடி ஒன்று விடாமல் கூறினர். இரவு நீண்ட நேரம் ஆகிவிட்டதால் ராமானுஜர் அவர்களை ஓய்வெடுத்துக்கொள்ளச் சொன்னார்.

யார் பெரியவர்? எது உயர்ந்த பண்பு?

மறுநாள் விடிந்தது. துறவிகள், பிராமணர்கள், சீடர்கள் முதலானோர் காவிரியில் நீராடிவிட்டு சாத்திரங்கள் ஓதுவதற்காக ராமானுஜரிடம் சென்றார்கள். அவர் அவர்கள் எல்லோரையும் உட்காரும்படி கூறினார். பொன்னாச்சியையும் உறங்காவில்லியையும் உடைய வர் அழைத்திருந்தார். அவர்கள் இருவரையும் அமரச் சொன்னார். பின்னர் அரியதொரு அறிவுரை அளிக்கத் தொடங்கினார்.

''அன்பானவர்களே நீங்கள் எல்லோரும் சாத்திரங் களில் வல்லவர்கள். ஆனால் உங்களது அந்தணத்தன்மை குறித்து நீங்கள் கர்வம் கொண்டிருக்கிறீர்கள். குலமதம், கல்வி மதம், தனமதம் ஆகிய மும்மலங்களால் மனிதன் சீரழிகிறான். ஓர் பிராமணனுக்கு உரிய குணாதிசயம் எதுவென்று தெரியுமா? உங்களது ஆடை சிறிதளவு கிழிக்கப்பட்டதற்கு நீங்கள் ஆர்ப்பாட்டம் செய்து சண்டையிட்டீர்களே அது சிறந்ததா? அல்லது பொன்னாச்சி நேற்றிரவு மகிழ்ச்சியுடன் பிராமணர்களுக்கு அளித்தும் ஏன் மற்ற நகைகளையும் கொடுக்கவில்லை என்று கோபித்துக்கொண்ட உறங்காவில்லியும் அதற்காக வருந்திய அவர் மனைவியும் இப்போது இங்கே அடக்கமாக இருக்கிறார்களே, இந்த நடத்தை, சிறந்ததா? மறவர் குலத்தைச் சேர்ந்த வேடனாக இருந்தாலும் பிள்ளை உறங்காவில்லி தாசர், கோவணத்துத் துணிக்காகச் சண்டை போட்டுக்கொண்ட அந்தணர்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு தூய்மையானவர் என்று இப்போது விளங்குகிறதா? அடியவர் ஒழுக்கத்துக்கு (தாசவிருத்தி) இவர் சிறந்த எடுத்துக்காட்டாவார். பிராமணர்களாகிய நீங்கள் பிரம்மத்தை உணர்ந்தவர்களல்ல. இந்த வேடர்தான் பிரம்மத்தை நன்கு உணர்ந்தவர். ஆகையால், இத்தகைய உத்தமமான, தூய மனிதரின் வெற்றுத் தோள்மீது நான் கையைப் போட்டுக்கொண்டு வந்தது எப்படிக் குற்றமாகும்?'' என்றார்.

இதைக் கேட்ட சீடர்கள் ''சுவாமி உறங்காவில்லி நடந்துகொண்ட முறைதான் ஓர் அந்தணனுக்கு உரியது நாங்கள் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறோம்'' என்று ஒரே குரலில் கூறினர்.

இதைக் கேட்டு மகிழ்ந்த எதிராசர் அனைவருக்கும் அறிவுரை வழங்கினார். ''சீடர்களே, அறிவின் பண்பும் உள்ளத்தின் பண்புமே நன்மைக்குக் காரணங்கள். சாதியல்ல என்பதை அறிந்துகொள்ளுங்கள். சாதி பற்றிய உங்கள் கர்வத்தை விடுத்து நல்ல பண்புகளைக் கைக்கொள்ளப் பாடுபடுங்கள். பிறப்பில் அனைவரும் சமமே. பிறப்பில் உயர்ந்தவன் என்று கூறிக்கொள்பவன் மனித குலத்துக்கே எதிரியாவான். எனவே, கல்வி, செல்வம், பிறப்பு ஆகிய அனைத்தையும்விட நற்பண்பே மேலானது என்பதை உணர்ந்து ஆன்ம பலத்துக்காகப் பாடுபடுங்கள். நலம் தரும் நற்குணத்தால் நாமும் உயரப் பாடுபட்டு நமது சமுதாயத்துக்கு நல்ல வழிகாட்டியாக முயற்சி செய்யுங்கள்'' என்றார்.

எதிர்காலத்தில் வைணவ மடங்களில் தலைமை ஏற்றிடத் தகுதியான சீடர்கள் அன்று எம்பெருமானாரிடம் ஓர் இனிய பாடத்தைக் கற்றுக்கொண்டனர். அவரது அறிவுரையால் அந்தணர்களின் அஞ்ஞான இருள் அகன்று ஞான ஒளி பெருகியது. எல்லாவற்றையும் பொறுமையாகக் கவனித்துக் கொண்டிருந்த உறங்காவில்லி, பொன்னாச்சி தம்பதியரை அருகே அழைத்தார் ராமானுஜர். நான், எனது என்ற அகந்தை பொன்னாச்சியிடம் உள்ளதே என்று கோபம் கொண்டிருந்த வில்லிதாசரைச் சமாதானப்படுத்தினார். அந்த உத்தமத் தம்பதிகளிடைய இருந்த பிணக்கை நீக்கி மீண்டும் அன்பு நிலவச் செய்தார் ராமானுஜர்.

Koviloor Digital Library

என்.ராஜேஸ்வரி

உடையவர் பாதம் பட்ட தலம்

மகான் ஸ்ரீ ராமானுஜர் தனது பாத யாத்திரையின் வழியில் இம்மாபில க்ஷேத்திரத்தை அடைந்தார். ஸ்ரீ கேசவ பெருமாளைப் பூஜித்து வழிபட்டார்.

ராமானுஜர், பல வைணவத் திருத்தலங்களுக்குச் சென்று வந்துள்ளார். அத்திருத்தலங்கள், அவர் வந்ததாலேயே வரலாற்றில் இடம் பிடித்துவிட்டன எனலாம். அத்திருக்கோயில்கள் பிரபலமடைவதற்கும் அவரது வரவே காரணமாகிவிடுகிறது. அத்திருக்கோயிலைச் சுற்றிப் பண்பாடும் ஆன்மிகமும் தழைத்தோங்குகின்றன என்பதற்கு மேற்கு மாம்பலத்தில் உள்ள ஸ்ரீபாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் கோயில் சாட்சியாக உள்ளது.

அதிகாலைப் பொழுது. அருணோதய ஒளி துவஜ ஸ்தம்பத்தைத்தொட்டு வணங்குகிறது. சிலுசிலுவென்ற காற்று பிராகாரத்தைத் தழுவிச்செல்கிறது. புன்னகை பூக்கும் பெருமாள், ஸ்ரீ தேவி, பூதேவியுடன் அலங்காரவளைவின் மேல் நளினமாக ஒசிந்து நிற்கும் காட்சி. கண்டதும் கண்களை ஈர்க்கும் அழகு மிளிரும் கோயில். சுத்தமான சூழல்.

சென்னை மேற்கு மாம்பலத்தை அலங்கரிக்கும் அருள்மிகு பாஷ்யகாரஆதிசென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் நிற்கும்போது வரலாற்றினூடே பயணித்துச் செல்லும் அனுபவம் ஏற்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய கோயில் இது.

இன்றைய மாம்பலம் அன்றைக்கு மாபிலம் என்ற காடாக இருந்தது. ‘ஸர்வ தேவ நமஸ்கார; கேசவம் ப்ரதிகச்சதி’ என்ற சுலோகத்தின்படிஎந்த தெய்வத்தை வணங்கினாலும், அது கேசவ பெருமாளையே அடையும். ‘கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ’ என்பது ஆண்டாள் பாசுரத்தில் வரும் குறிப்பு. இந்தக் கேசவன் தொன்மையான மாபிலம் என்ற மாம்பலத்தில் எழுந்தருளிய நிகழ்ச்சி ஒரு அதிசயம்.

இன்றைய மாம்பலம் அன்றைக்கு மாபிலம் என்ற காடாக இருந்தது. ‘ஸர்வ தேவ நமஸ்கார; கேசவம் ப்ரதிகச்சதி’ என்ற சுலோகத்தின்படிஎந்த தெய்வத்தை வணங்கினாலும், அது கேசவ பெருமாளையே அடையும்.

திருத்தல வரலாறு

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் திருவரங்கத்தில் பெரியபெருமாளுக்குத் தொண்டு புரிந்துவந்த மாதவாசார் என்பவருக்குக் குழந்தைஇல்லை. திருவரங்கனின் ஆணைப்படி பல தலங்களுக்குச் சென்று வர முடிவுசெய்தார்.

அதில் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயிலும், திருமலை ஸ்ரீ நிவாசப் பெருமாள் திருக்கோயிலும் குறிப்பிடத்தக்கவை. இந்தத் தலங்களுக்குச்சென்றார். பணிந்தார். வேண்டினார். நம்பிக்கையுடன் திரும்பினார்.

அப்போது வழியில் இருந்த இந்த மாபிலம் என்ற அடர்ந்த காட்டினில்ஓரிடத்தில் தங்கிக் கண் அயர்ந்தார். அப்போது அவர் என்றென்றும் சேவிக்கும் அரங்கத்துப்

Koviloor Digital Library

மாம்பலம் ஸ்ரீபாஷ்யகார ஆதி சென்னகேசவ பெருமாள்

igital Library

பெருமாள் அனந்த சயனமாகவே அவர் கனவில் தோன்றினார்.நின்ற திருக்கோலத்தில் இங்கு புதையுண்டிருப்பதாகக் கூறி, தன்னைமீட்டெடுத்துப் பூஜைகள் செய்ய அறிவுறுத்தினார்.

அதனால் மாதவாசாருக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கும் எனஅருள்பாலித்தார். மாதவாசாரும் அவ்வாறே செய்ய, அவருக்குப் புத்திரபாக்கியம் ஏற்பட்டது.

மகான் ஸ்ரீ ராமானுஜர் தனது பாத யாத்திரையின் வழியில் இம்மாபில க்ஷேத்திரத்தை அடைந்தார். ஸ்ரீ கேசவ பெருமாளைப் பூஜித்து வழிபட்டார். அன்றிரவு தங்கி, விடியலில் தன் வழிப்பயணத்தைத் தொடர்ந்தார். அன்றுமுதல் இத்திருக்கோயிலுக்கு 'உடையவர் திருக்கோயில்' (ராமானுஜரை உடையவர் என்று சொல்வார்கள்) என்பது திருநாமம்.

அருள்பாலிக்கும் சந்நிதிகள்

இதன் பிரதானக் கருவரையில் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் ஸ்ரீ தேவி, பூதேவி தாயாருடன் எழுந்தருளியுள்ளார். மூலவருக்கு முன்னால் உற்சவர் ஸ்ரீஆதி கேசவன் காட்சி அளிக்கிறார். இப்பெருமாள் சன்னதிக்கு முன்னால்அர்த்த மண்டபம் மற்றும் மகா மண்டபம் அமைந்துள்ளன.

பெருமாள் சந்நிதிக்கு வலதுபுறத்தில் ஸ்ரீ செங்கமலவல்லித் தாயார்தனிக்கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். ஆண்டாள் சந்நிதிக்கு அருகில்அச்சு அசலாக உள்ள திருமலை ஸ்ரீ நிவாச பெருமாளைக் கண்ணாரத்தரிசிக்கலாம். இச்சந்நிதியின் கூரைத் தளத்தில் கல்லில் மீன் ஒன்றுதிருத்தமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார் ஆச்சாரியன்களைத் தரிசித்து வெளியே வந்து மண்டப முகட்டை நோக்கினால், கருங்கல்லில் செதுக்கப்பட்ட சங்கு சக்கரம் இருபுறம் அமையப் பெற்ற திருநாமம் சிற்பக் கலையின் தொன்மையைப் பறைசாற்றுகிறது.

இந்த அருள்மிகு பாஷ்யகார ஆதிசென்ன கேசவப் பெருமாள்திருக்கோயிலில் ஜீர்ணோத்தாரண, புனராவர்தன அஷ்டபந்தன மகாசம்ப்ரோஷணம் 09.02.15 திங்கள் கிழமையன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. உடையவர் பாதம் பட்ட சிறப்புக் கொண்ட தொன்மையானஇந்தக் கோயில் நவீன வாழ்வின் பரபரப்பான சூழலுக்கு மத்தியில்அமைதியாக வீற்றிருந்து ஆற்றுப்படுத்துகிறது.

இத்திருக்கோயில் சான்னித்யத்தைப் பெற்று விளங்குவதால், பிரம்மோற்சவம், ஆண்டாள் திருக்கல்யாணம், திருப்பாவை உட்பட உபந்யாசங்கள் ஆகியவை சிறப்புற நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் உள்ள படிக்கும் மாணவர்கள் இறையருள் பெற ஸ்ரீலஷ்மி ஹயக்கிரீவர் ஹோமமும், பூஜையும் நடத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

உடையவர் பாதம் பட்ட சிறப்புக் கொண்ட தொன்மையான இந்தக் கோயில் நவீன வாழ்வின் பரபரப்பான சூழலுக்கு மத்தியில் அமைதியாக வீற்றிருந்து ஆற்றுப்படுத்துகிறது.

Koviloor Digital Library



திருவரங்கம் நம்பெருமாள்

Koviloor Digital Library

கோ.கார்த்திக் ஆதிகேசவப் பெருமாள் கோயில்

புண்ணியம் கோடி செய்த தலம்

இத்தலத்தில் தாயார், யதிராஜநாதவல்லி என்ற பெயரில் அருளுகிறாள். தன் பக்தரின் பெயரில் தாயார் இங்கு அருள்பாலிப்பது சிறப்பு.

ஸ்ரீ பெரும்புதூரில் வசித்த கேசவ சோமயாஜி, காந்திமதி தம்பதியருக்கு 1017ம் ஆண்டு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையின் மாமா பெரிய திருமலை நம்பி, திருப்பதியில் சேவை செய்துவந்தார். குழந்தை லட்சுமணர் போல இருந்ததால், "இளையாழ்வார்' எனப் பெயர் சூட்டினார். ராமானுஜர் பிறந்ததால் இத்திருத்தலமே கோடிப் புண்ணியம் செய்தது எனலாம்.

ஆதிகேசவர் கோவில் எதிரே, ராமானுஜர் பிறந்த இடத்தில் மண்டபம் உள்ளது. சித்திரை விழாவின் 10 நாட்களும் ராமானுஜர் இங்கு எழுந்தருளுவார். திருநட்சத்திரத்தன்று ஊஞ்சலில் தாலாட்டி, சங்குப்பால் தரும் வைபவம் இங்கு நடக்கும். இவ்வேளையில் ஸ்ரீரங்கம், திருப்பதி,காஞ்சிபுரம், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருமாலிருஞ்சோலை (மதுரை கள்ளழகர் கோவில்) உள்ளிட்ட 36 திவ்ய தேசங்களிலிருந்து ராமானுஜருக்கு பரிவட்டம் கொண்டு வந்து மரியாதை செய்யப்படும்.

தீபாவளி துவங்கி தை மாத அஸ்தம் நட்சத்திரம் வரையில் ராமானுஜருக்கு வெந்நீர் அபிஷேகம் செய்கின்றனர். குளிர்காலம் என்பதால் இக்காலகட்டத்தில் ராமானுஜருக்கு கோட் அணிவித்து, கம்பளி போர்த்துகின்றனர்.

பக்தர் பெயரில் தாயார்

ராமானுஜருக்கு யதிராஜர் என்ற பெயரும் உண்டு. யதி என்றால் சன்னியாசி, ராஜர் என்பது தலைமைப் பண்புடையவரைக் குறிக்கும். இத்தலத்தில் தாயார், யதிராஜநாதவல்லி என்ற பெயரில் அருளுகிறாள். தன் பக்தரின் பெயரில் தாயார் இங்கு அருள்பாலிப்பது சிறப்பு.

ராமனின் தம்பி

அனுஜன் என்றால் இளையவர் என பொருள். ராமனுக்கு இளையவரான லட்சுமணரின் அம்சமாகப் பிறந்ததால் இவர் ராமானுஜர் (ராமன் அனுஜன்) என்றழைக்கப்பட்டார்.

ஊர்வலம் வரும் பூமாலை

ஆண்டின் அனைத்து நாட்களிலும் இங்கு விழா கொண்டாடுகிறார்கள். பிரதான விழா இல்லாத நாட்களில் செல்வர் (பெருமாளின் உற்சவர்

Koviloor Digital Library

ஸ்ரீமரகதவல்லி - ஸ்ரீவிஜய ராகவன் (திருப்புட்குழி)

Koviloor Digital Library

வடிவம்) காலை, இரவில் புறப்பாடாவார். மாலையில் ஒரு வாசனைப்பூ மாலையை, மேளதாளத்துடன் புறப்படச் செய்கின்றனர். சுவாமியே, பூ வடிவில் பவனி வருவதாக ஐதிகம்.

வெந்நீர் அபிஷேகம்

தீபாவளி துவங்கி தை மாத அஸ்தம் நட்சத்திரம் வரையில் ராமானுஜருக்கு வெந்நீர் அபிஷேகம் செய்கின்றனர். குளிர்காலம் என்பதால் இக்காலகட்டத்தில் ராமானுஜருக்கு கோட் அணிவித்து, கம்பளி போர்த்துகின்றனர். உடல் முழுவதும் போர்த்த வெல்வெட் அங்கி, உல்லன் சால்வை, தலை முதல் பாதம் வரை போர்த்த குன்சம் என்ற ஆடை ஆகியவை இங்குள்ளன. மாசி முதல் புரட்டாசி வரையில் கோடைக்காலத்தில் சுவாமியைக் குளிர்ச்சிப்படுத்த சந்தனக் காப்பிடுகின்றனர்.

தானுகந்த திருமேனி

ராமானுஜரின் விசேஷமான திருமேனிகள் (சிலை) கர்நாடக மாநிலத்திலுள்ள திருநாராயணபுரம் (மேல் கோட்டை), ஸ்ரீரங்கம் மற்றும் இத்தலத்தில் உள்ளன. இங்குள்ள சிலை தானுகந்த திருமேனி ஆகும். ராமானுஜரின் அடியார்கள், அவரது ஆலோசனைப்படி ஒரு சிலை வடித்தனர். ராமானுஜர் அச்சிலையைத் தழுவி, அதில் தன் சக்தியைப் புகுத்தினார். ராமானுஜரே உகந்து (விரும்பி) அணைத்ததால் இது, "தானுகந்த திருமேனி" எனப்பட்டது. இந்த சிலையைச் செய்தபோது,ராமானுஜருக்கு வயது 120. அந்த வயதிற்குரிய தோற்றத்திலேயே ராமானுஜரின் காதுமடல் தெரியும்படியாக சிலை தத்ரூபமாக இருக்கிறது.

வெள்ளை உடை ராமானுஜர்

மன்னன் ஒருவன் ராமானுஜர் மீது வஞ்சகம் கொண்டு, அவரைத் தண்டிக்க எண்ணினான். இதையறிந்த ராமானுஜரின் சீடரான கூரத்தாழ்வான், ராமானுஜரின் காவி ஆடையை தான் அணிந்துகொண்டு சென்றார். ராமானுஜர், கூரத்தாழ்வானின் வெண்ணிற ஆடையை அணிந்து தப்பிச் சென்றார். உண்மையறிந்த மன்னன், கூரத்தாழ்வானின் கண்களைக் குருடாக்கிவிட்டான். குருவுக்காக தன் கண்களைத் தியாகம் செய்த சிஷ்யனுக்கு மரியாதை செய்யும்விதமாக, சித்திரை திருவிழாவில் ஒருநாள் ராமானுஜர் வெண்ணிற ஆடை அணிந்து காட்சி தருகிறார்.

செல்லப்பிள்ளை

மன்னன் ஒருவன் தன் மகளின் விருப்பத்திற்காக, கர்நாடகாவிலுள்ள திருநாராயணபுரத்தில் இருந்த பெருமாள் சிலையை டில்லிக்கு எடுத்துச் சென்றான். இதையறிந்த ராமானுஜர், சிலையை மீட்க டில்லி சென்றபோது, சுவாமி சிலை அவரது மடியில் வந்து

Koviloor Digital Library



அமர்ந்தது. "இதோ, என் செல்லப் பிள்ளை!' என ஆனந்தத்தில் கண்ணீர் விட்டார். இதன் பிறகு இந்தப் பெருமாளை செல்லப்பிள்ளை என்றே அழைத் தனர். பங்குனி பூசத்தன்று ராமானுஜர் மடியில் செல்லப் பிள்ளை அமர்ந்து வீதியுலா செல்லும் வைபவம் இங்கு நடக்கும்.

பாவத்துக்கு விமோசனம்

தொண்டை நாட்டு மன்னனான ஹாரீத மகாராஜன், வேட்டைக்குச் சென்றபோது, ஒரு பசுவை புலி அடிக்கச் செல்வதைக் கண்டான். புலி மீது அம்பெய்தான். ஆனாலும், உக்கிரம் கொண்ட புலி, பசுவைக் கொன்றுவிட்டது. இதனால், மன்னனுக்கு கோ சாபம் உண்டானது. இதற்கு இங்கு சுவாமியை வேண்டி நிவர்த்தி பெற்றான். இவ்வாறு, அறியாமல் செய்த பாவங்களையும் போக்குபவராக இங்கு சுவாமி அருள்கிறார். ராமானுஜர் சன்னதிக்குப் பின்புறம் பல்லி சிற்பம் இருக்கிறது. செய்த பாவத்திற்கு நிவர்த்தி கிடைக்கவும், மோட்சம் பெறவும் இந்த பல்லியை வணங்குகின்றனர்.

மணவாள மாமுனிகள்

120 ஆண்டுகள் வாழ்ந்த ராமானுஜர், அடுத்த பிறப்பில் மணவாள மாமுனிகளாகத் தோன்றி, பாஷ்யங்களை உபதேசம் செய்தார் என்று கருதப்படுகிறது. ராமானுஜர் சன்னதி பிராகாரத்தில் இவர் உபதேசித்த இடத்திலுள்ள ஒரு தூணில், மணவாள மாமுனிகள் சிலை உள்ளது. கோயிலுக்கு வெளியே மணவாள மாமுனிகளுக்குத் தனிக்கோயிலும் உள்ளது.

சாப விமோசனம்

கைலாயத்தில் உள்ள பூத கணங்கள், சிவனிடம் பெற்ற சாபத்திற்கு விமோசனம் பெற மகாவிஷ்ணுவை வேண்டின. சுவாமி, அனந்தன் என்னும் சர்ப்பத்தால் இங்கு தீர்த்தம் (அனந்தசரஸ் தீர்த்தம்) உண்டாக்கி, அதன் கரையில் காட்சி தந்து விமோசனம் கொடுத்தார். இதற்கு நன்றிக்கடனாக பூத கணங்கள் இங்கு சுவாமிக்குக் கோவில் எழுப்பின. இதனால் பூதபுரி எனப்பட்ட இத்தலம், பிற்காலத்தில் ஸ்ரீபெரும்புதூர் என மாறியது. சுவாமிக்கு ஆதிகேசவப்பெருமாள் என்ற திருநாமம் ஏற்பட்டது.

அதிசயத்தின் அடிப்படையில்

ராமானுஜர் அவதரித்ததால் இது, நித்ய சொர்க்க வாசல் தலமாகக் கருதப்படுகிறது. எனவே, இங்கு சொர்க்கவாசல் கிடையாது. வைகுண்ட ஏகாதசியன்று ஆதிகேசவர், ராமானுஜர் இருவரும் பூதக்கால் மண்டபத்தில் எழுந்தருளுவர். அவ்வேளையில் சொர்க்க வாசல் திறப்பதைப்போல, இங்குள்ள மணிக்கதவை (சந்நிதிக் கதவு) திறப்பர்.

Koviloor Digital Library

விக்னேஷ் ஜி

சமத்துவம் கண்ட அன்பின் திருவுரு

யாதவப் பிரகாசர் என்றும் குருவிடம் பாடம் கற்கச் சென்ற ராமானுஜர், தனது அறிவின் விலாசத்தால் குருவை விஞ்சும் சீடரானார்.

தீர்க்காயுசு என்ற முழுமையான வாழ்வுச் சுற்றான 120 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஸ்ரீராமானுஜர். ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்குள் இன்றும் தானானத் திருமேனியாகக் காட்சி அளிப்பவர். விசிஷ்டாத்துவைதத்தைப் பிரபலப்படுத்தியவர். பிரம்ம சூத்திரத்துக்கு ஸ்ரீபாஷ்யம் என்ற உரையை எழுதியவர். சீர்திருத்தவாதியான ராமானுஜரின் காலம் 1017- 1137. இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

மனிதர் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கொள்கை கொண்டவர் ராமானுஜர். இவர் யமுனாசாரியாரின் சீடரான திருக்கோட்டியூர் நம்பியிடம் திருவெட்டெழுத்து மந்திரத்தைக் கற்க விரும்பினார். அவரும் நிபந்தனையின் பேரில் கற்றுக்கொடுக்க முன்வந்தார்.

பிறப்பும் வளர்ப்பும்

ஸ்ரீபெரும்புதூர் என்ற திருத்தலத்தில் அனந்தன் அம்சமாகப் பிறந்தவர் ராமானுஜர். சர்வக்ரது ஆசூரி கேசவ சோமயாஜிக்கும் காந்திமதிக்கும் மகனாகப் பிறந்தவர். பின்னாளில் மதப் புரட்சி செய்த ராமானுஜர் பிறந்த ஆண்டு 1017. கடக லக்னத்தில் பிறந்த அவர் சாதித்த நிர்வாகச் சீர்திருத்த முறைகள் இன்றும் ஸ்ரீரங்கம் கோயிலில் நடைமுறையில் உள்ளன. இவருடைய தந்தையே இவருக்கு ஆரம்ப கால குருவாக இருந்தார். அவரது காலம் முடிந்த பின் வேறு ஒரு குருவை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது ராமானுஜருக்கு.

அந்த குருவின் பெயர் யாதவப் பிரகாசர். குருவிடம் பாடம் கற்கச் சென்ற ராமானுஜர், தனது அறிவின் விலாசத்தால் குருவை விஞ்சும் சீடரானார். இதனால் குருவின் மனதில் வன்மம் ஓங்கியது. ராமானுஜரைக் கொலை செய்யத் திட்டமிட்டார். காசிக்கு அழைத்துச் சென்று கங்கை நீரில் தள்ளிக் கொலை செய்ய நினைத்தார். அதனால் ராமானுஜர், அவரது உறவினர் கோவிந்தன் உட்பட தனது சீடர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு காசிக்குப் புறப்பட்டார் யாதவப் பிரகாசர். ராமானுஜரைத் தவிர அனைத்துச் சீடர்களுக்கும் குருவின் இந்தக் கயமை எண்ணம் தெரிந்திருந்தது. ராமானுஜரின் உறவினர் கோவிந்தன் உட்பட.

உயிர் பிழைத்தார்

கோவிந்தனின் மனம் பரிதவித்தது. எப்படியாவது ராமானுஜரைக் காக்க வேண்டும் என்று எண்ணினார். ஆனால், யாதவப் பிரகாசரின் உத்தரவுப்படி மற்ற சீடர்கள் கோவிந்தனையும் ராமானுஜரையும் ஒன்றாக இருந்துவிடாமல் பார்த்துக்கொண்டனர்.

ஒரு நாள் இரவு, இந்த மன சஞ்சலத்தால் தூங்க இயலாமல் படுத்திருந்த

Koviloor Digital Library

மதுராந்தகம்

Koviloor Digital Library

கோவிந்தன், ராமானுஜரை எழுப்பி அருகில் இருந்த காட்டுக்கு அழைத்துச் சென்றார். குருவின் கொடிய எண்ணத்தை ராமானுஜரிடம் கூறினார். இப்படியே காட்டின் மறுபுறமாகச் சென்று தப்பிவிடுமாறு கேட்டுக்கொண்டார். அப்போது வேடுவன் வேட்டுவச்சியாக வந்த பெருமாளும் தாயாருமே அவருக்குக் காஞ்சிக்குச் செல்ல வழிகாட்டியதாகக் கூறுவார்கள். ராமானுஜர் பிழைத்தார்.

நிர்வாகச் சிறப்பு

ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் இருந்த காலகட்டத்தில், அதன் நிர்வாகத்தைச் சீர்மைப்படுத்தினார். நேரம் காலம் தவறாமல் பூஜைகள் நடைபெற, பூஜா காலங்களை முறைப்படுத்தினார். பல குழுக்களை அமைத்து அதற்குத் தமது சீடர்களையே தலைவர்களாக அமர்த்தினார். இந்தக் கட்டுதிட்டங்களை விரும்பாத சிலர், ராமானுஜரை ஒழிக்கத் திட்டமிட்டனர்.

ராமானுஜர் பிட்சை எடுத்து உண்ணும் வழக்கம் கொண்டவர். நாளொன்றுக்கு ஏழு இல்லங்களில் மட்டுமே பிட்சை எடுப்பார். இவரை விரும்பாத சிலர் அவருடைய அன்னத்தில் விஷம் கலக்க முடிவு செய்தனர். அதனால் இவர் தினமும் செல்லும் ஒரு இல்லத்தின் பெண்மணியை மிரட்டி விஷம் கலந்த அன்னத்தை அளிக்கும்படிச் செய்தனர். மிரட்டலுக்குப் பயந்து விஷம் கலந்த அந்தப் பெண்மணி ராமானுஜரை எப்படியாவது காப்பாற்ற விரும்பினார். அன்னத்தில் விஷம் இருப்பதைத் ராமானுஜருக்குத் தெரிவிக்க உத்தி ஒன்றைக் கையாண்டார். ராமானுஜருக்குப் பிக்ஷை

அளித்து விட்டு, என்றுமில்லாத வழக்கமாக அவரை நமஸ்கரித்து அழுதுகொண்டே உள்ளே சென்றுவிட்டார் அப்பெண்மணி. இதனை கவனித்த ராமானுஜர், ஆபத்தை உணர்ந்து இந்தச் சூதிலிருந்து தப்பினார்.

பொதுநலனே பிரதானம்

மனிதர் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கொள்கை கொண்டவர் ராமானுஜர். இவர் யமுனாசாரியாரின் சீடரான திருக்கோட்டியூர் நம்பியிடம் திருவெட்டெழுத்து மந்திரத்தைக் கற்க விரும்பினார். அவரும் நிபந்தனையின் பேரில் கற்றுக்கொடுக்க முன்வந்தார். எவரிடமும் இம்மந்திரத்தை வெளியிட்டுவிடக் கூடாது என்பதே அந்த நிபந்தனை. அதை ஏற்றுக்கொண்ட அவர், உபதேசமும் பெற்றார். உபதேசம் பெற்ற உடன் திருகோட்டியூர் கோயில் கோபுரத்தின் மீதேறி அந்தத் திருமந்திரப் பொருளை அனைவரும் கேட்கும் வண்ணம் உரக்கக் கூறி ஊருக்கே உபதேசம் செய்துவிட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த திருக்கோட்டியூர் நம்பி கோபமடைந்தார். ராமானுஜரை அழைத்து குரு வாக்கை மீறியதால் நரகம் புக நேரிடும் என்று கூறினார். அனைவரும் முக்தி அடைவார்கள் என்றால் தான் ஒருவன் மட்டும் நரகம் செல்வதைப் பற்றிக் கவலை இல்லை. மேலும் அது தன் பாக்கியம் என்றார் ராமானுஜர்.

இதனைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பி ஆனந்தப் பரவசமடைந்தார். கருணாமூர்த்தியான அரங்கனின் கருணையைவிட இது உயர்ந்தது என்று எண்ணினார். பின்னர் ராமானுஜரை எம்பெருமானார் என்று கூறி ஆரத் தழுவிக்கொண்டார்.

ஆண்டாளுக்கு அண்ணன்

ராமானுஜரை ஆண்டாளுக்கு அண்ணன் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. ஆண்டாள் ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ராமானுஜரோ பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் அன்பினால் ஆண்டாளுக்குத் தம்பியாகலாம்.

ஆனால், அண்ணன் ஆனது எப்படி?

ஆண்டாள் அரங்கனை மணந்தால் நூறு தடா (பாத்திரம்) அக்கார அடிசில் நிவேதனம் செய்வதாக மனமார வேண்டிக்கொண்டாள். ஸ்ரீரங்கம் சென்றவள் அரங்கனுடன் கலந்துவிட்டாள். அதனால் அவளுக்குத் தன் பிரார்த்தனையை நிறைவேற்ற அவகாசம் கிடைக்கவில்லை. இதனைத்தான் ராமானுஜர் பாண்டிய நாடு வந்தபோது நிறைவேற்றிவைத்தார்.

பின்னர் சில காலம் கழித்து ஸ்ரீவில்லிப்புத்தூர் வட பத்திரசாயி கோயிலுக்குச் சென்றார் ராமானுஜர். அப்போது கோயிலின் உள்ளே நுழைந்த அவரை, சிலாரூபமாக இருந்த ஆண்டாள் 'அன்பின் மிகுதியால் வாருங்கள் எம் அண்ணாவே' என்று நேரிடையாக அழைத்ததாகக் கூறுவார்கள். அதனால் ராமானுஜர் ஆண்டாளுக்கு அண்ணன்.

Koviloor Digital Library

ஸ்ரீராமானுஜர்

Koviloor Digital Library

ரெங்கலட்சுமி

ராமானுஜர் குருவாக ஏற்க விரும்பிய புனிதர்

காஞ்சியிலேயே தங்கி பெருமாளுக்கு கைங்கரியம் செய்ய விரும்பினார் திருக்கச்சி நம்பி. ஆலவட்டம் என்ற விசிறி வீசும் கைங்கரியத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

திருக்கச்சி நம்பி என்பவரின் தந்தை திருமழிசை ஆழ்வாருக்குப் பல காலம் தொண்டு செய்தவர். அவரைத் தொடர்ந்து தொண்டு செய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டவர் நம்பிகள். இவர் ஆரம்ப காலங்களில் தற்போது பூந்தமல்லி என்று அழைக்கப்படும் பூவிருந்த வல்லியில் பூந்தோட்டம் அமைத்து, அங்கிருந்து பூக்களை எடுத்துச் சென்று காஞ்சீபுரத்தில் உள்ள வரதராஜப் பெருமாளுக்கு அளிப்பது வழக்கம். காஞ்சீபுரத்திற்கு, திருக்கச்சி என்ற பெயர் இருப்பதால், அவ்வூரைச் சேர்ந்த இவரை திருக்கச்சி நம்பிகள் என்று அழைப்பது வழக்கம்.

காஞ்சியிலேயே தங்கி பெருமாளுக்கு கைங்கரியம் செய்ய விரும்பினார் திருக்கச்சி நம்பி. ஆலவட்டம் என்ற விசிறி வீசும் கைங்கரியத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார், அதனைத் தொடர்ந்து செய்துவந்ததால், வரதராஜப் பெருமாளுடன் நேரடியாகப் பேசும் பாக்கியம் பெற்றவராகக் கருதப்பட்டார்.

அத்திவரதருக்குச் செய்வது போலவே ஸ்ரீரங்கம் ரங்கநாதருக்கும், திருமலை ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கும் ஆலவட்டக் கைங்கரியம் செய்ய விரும்பினார் திருக்கச்சி நம்பி. இதனை அத்திவரதரிடம் கூறி, அனுமதி பெற்றார். ஸ்ரீரங்கம் வந்தார். அங்கு ரங்கநாதப் பெருமாள், தாம் காவிரி, கொள்ளிடம் என்ற இரு ஆறுகளிடையே இருப்பாதால் குளு, குளு என்று இருக்கிறது. அதனால் ஆலவட்டம் வேண்டாம் என்று கேட்டுக்கொண்டாராம். இதனால் திருமலை ஸ்ரீநிவாசனுக்கு ஆலவட்டம் வீசச் சென்றாராம் திருக்கச்சி நம்பி.

ஸ்ரீநிவாசன் அவரிடம், தாம் ஏழு மலைகளுக்கு இடையே இருப்பதால், இங்கு குளுமையாக இருக்கிறது என்று சொன்னாராம். அத்துடன் நில்லாமல், அத்திவரதர்தாம் பிரம்மனின் வேள்விக் குண்டத்தில் இருந்து வெளிவந்தவர், அவர் மேனி உகக்க ஆலவட்டம் வீசுமாறு கூறினாராம்.

திருக்கச்சி நம்பிகள் ஆளவந்தாரிடம், ராமானுஜர் குறித்து எடுத்துக் கூறி, ராமானுஜரை அவரது சிஷ்யராக ஏற்கும்படி வழி வகை செய்தார். இதன் பின் ராமானுஜரே வைணவம் வளர வழிகாட்டி யாவார் என்று கூறி, ராமானுஜரை 'ஆம் முதல்வன்' என்று சிறப்பித்துக் கூறினார் ஆளவந்தார்.

பின்னாளில் திருக்கச்சி நம்பி, கூரத்தாழ்வானை, ராமானுஜரின் சிஷ்யராக்கினார். கூர்த்தாழ்வாரால், ராமானுஜர் உயிர் காக்கப் பட்டதால் வைணவம் ஓங்கி வளர்ந்தது. திருக்கச்சி நம்பிகளைக் குருவாகக் கொள்ளும்படி, ராமானுஜரின் தாய் கூற, ராமானுஜரும் அவ்வாறே விரும்பினார்

திருக்கச்சி நம்பிகளை ஏழரைச் சனி பீடிக்கும் காலம் வந்தது என்று அறிந்த திருக்கச்சி நம்பி தனது அபிமான தெய்வமான அத்திவரதரிடம் சென்று, தனது கைங்கரியமான ஆலவட்டம் விசுவதற்கு ஏதும் பாதிப்பு வரக் கூடாது என்று வேண்டிக்கொண்டார். ஸ்ரீவரதரும், திருக்கச்சி நம்பிகளை ஏழரை நாழிகைகள் மட்டும் சனி பீடிக்கும்படி பார்த்துக் கொள்வதாகக் கூறினார். அதற்கு ஏற்றாற்போல் சுவாமியின் திருவாபரணம் காணாமல் போனது. பழி திருக்கச்சி நம்பிகள் மீது விழுந்தது. அவரைச் சிறையில் இட்டனர். சில நாழிகையில் அந்த நகை கிடைத்துவிட்டதை அடுத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

அத்திகிரி வரதன் திருக்கச்சி நம்பியின் அணுக்க தெய்வம்.

Koviloor Digital Library

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ராமானுஜ சித்தாந்தம் என்னும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம்

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத
யதீந்த்ர மஹாதேசிகன்

உலகத்தின் தோற்றம், இருப்பு மற்றும் பிரளயம் என்று சொல்லக்கூடிய அழிக்கும் செயல் ஆகிய அனைத்தையும் பகவானே மேற்கொள்கிறான்.

"வேதாத் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி" என்ற கூற்றின்படி வேதமே உயர்ந்த சாஸ்த்திரம், அவை உரைக்கும் பொருளே மெய்ப் பொருள் என்பது நமது சநாதன மதக் கொள்கை. 'மதம்' என்ற சொல்லுக்கு 'கொள்கை' என்று பொருள். அந்தமிலா மறைகள் உரைக்கும் பொருள் ஒன்றே. ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம்; பல்வேறு உயிரினங்களும் இவ்வுலகமும் அவனுக்கு உடலாய் (சரீரமாய்) இருப்பவர்கள். அவன் அவைகளுக்கு ஆத்மாவாய் இருக்கிறான். இக்கருத்தையே ஸ்ரீ நம்மாழ்வார்,

'உடல் மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்' என்று அருளிச் செய்திருக்கிறார். இப்படிப்பட்ட எம்பெருமானையே வேதங்களும் உபநிஷத்துகளும் பரமாத்மா, பரஞ்சோதி, பரத்தத்துவம், ப்ரஹ்ம என்று போற்றுகின்றன. பகவான் ஒத்தார் மிகார் இல்லாத மாமாயன் என்று சொல்லக்கூடிய, தனக்கு ஒப்பு உயர்வு இல்லாத அனைத்து கல்யாண குணங்களும் உடையவனாய், தோஷமற்றவனாய் விளங்குகிறான். இத்தன்மையால் அவன் அனைத்து பொருட்களிலிருந்தும் வேறுபட்டு ஸர்வ விலக்ஷணனாக விளங்குகிறான்.

இவனே உயர்ந்த தத்துவம். மற்றுள்ள தெய்வங்கள் இவனாலேயே அவரவருடைய கர்மாங்களுக்கு ஏற்ப ஸ்ருஷ்டிக்கப்படுவர்.

உலகத்தின் தோற்றம், இருப்பு மற்றும் பிரளயம் என்று சொல்லக்கூடிய அழிக்கும் செயல் ஆகிய அனைத்தையும் பகவானே மேற்கொள்கிறான். இக்கருத்தை உபநிஷத்துக்கள் "ஸஞ் மூலா: சௌம்ய இமா: ப்ரகா: ஸதாயதனா: ஸத்ப்ரதிஷ்ட்டா:" என்று ஓதுகின்றன. இதை அடியொற்றியே அருளிச் செயலிலும் ஆழ்வார்கள் "உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் கிடந்தும் நின்றும்" என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட எம்பெருமான் பரமபதம் என்று போற்றக்கூடிய ஸ்ரீ வைகுண்டத்தில் திருமகளோடும், நிலமகளோடும் ஸேவை சாதிக்கிறான். இதை ஆழ்வார், "உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர் மடமகள் என்றிவர் மூவர் ஆளும்" என்று போற்றுகிறார்.

தன்னால் படைக்கப்பட்ட இவ்வுலகைக் காப்பதற்குப் பல்வேறு அவதாரங்களையும், பல திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபத்திலும் எழுந்தருளி அருள்பாலிக்கிறான். தன்னிடத்தில் அன்பு பூண்ட அடியவர்கள்

Koviloor Digital Library



ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன்

Koviloor Digital Library

மூன்று தத்துவங்கள்

கத்யத்ரயம் என்ற நூல், பெயருக்கு ஏற்ப மூன்று செய்திகளைக் கூறுகிறது. அவை, சரணாகதி கத்யம், பிரபத்தி என்ற சரண் புகுதலைப்பற்றியது. ஸ்ரீரங்க கத்யம், ரங்கநாதப் பெருமானிடம் தன்னையே தாசனாக்கிக்கொள்ளும்படி வேண்டுவது. வைகுண்ட கத்யம் மகாவிஷ்ணுவின்இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தை நேரில் பார்ப்பதுபோல் விவரிக்கிறது.

அணுகுவதற்கு எளியவனாய் இருக்கிறான் என்பதை, "பத்துடையடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கினிய வித்தகன்" என்ற ஆழ்வார் திருவாக்கினால் நாம் அறியலாம்.

பகவானால் அருளிச்செய்யப்பட்ட விதிமுறைகளை ஜீவாத்மாக்கள் மீறி நடப்பதால் பிறவிப் பெருங்கடலாகிய ஸம்சாரத்தில் உழன்று துன்பப்படுகிறோம். எம்பெருமானின் சீற்றத்தைத் தணிப்பதற்கு இஜ்ஜீவாத்மாக்கள் அவனிடத்தில் மிகுந்த பக்தியை வெளிப்படுத்தி அவன் திருவடிகளிலேயே சரண் அடைவதே சிறந்த உபாயம். இக்கருத்தை ஆழ்வார் "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து அடியையடைந்த உள்ளம் தேறி", "அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்" என்றும் உபாயத்தை "நீர் நமதென்றிவை வேர்முதல்மாய்த்து இறை சேர்மின், உயிர்க்கு, அதன் நேர்நிறையில்லே" என்று உபதேசிக்கிறார்.

பகவான் மிகுந்த கருணை வடிவானவன். எப்படிப்பட்ட பாவங்களைச் செய்திருந்தாலும் தன்னிடத்தில் "உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கொடுத்து இறை உள்ளில் ஒருங்கே" என்ற ஆழ்வார் கூற்றின்படி சரணடைபவர்க்கு "சார்ந்த இருபல்வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம், வைக்கத் திருந்தி விடுதிருத்துவார்" என்ற கூற்றின்படி மறுபிறப்பை அறுத்துப் பேரின்ப அனுபவமாகிய தன்னுடைய அனுபவத்தை அருளுகிறான். இக்கருத்தை அனைத்து சாத்திரங்களும், புராணங்களும், ஒரு கருத்தாக இயம்புகின்றன. "தஸ்ய வசீகரணம் தச்சரணாகதிரேவ" என்றும் "ஸக்ருரேவ ப்ரபன்னாய தவாஸ்மி இதியாச்யதே அவயம் ஸர்வபூதேப்யோ ததாமி இத்யேதத் வரதம் மம" என்றும் "மாமேவ யே ப்ரபத்யுந்தே மாயாம் ஏகரம் தரந்தி தே" என்றும் "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ – அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:" என்றும் பலபடியாக விரித்துரைக்கின்றன.

அடியார்கள் தன்னை எளிதாக அடைவதற்காகவே எம்பெருமான் பல வடிவு கொண்டு நம்மிடையே தோன்றுகிறான். அவனை அடைந்து அவனுக்கும் (கைங்கர்யம்) அவனுடைய அடியவருக்கும் கைங்கர்யம் செய்வதே பரமபுருஷார்த்தம் என்பது ஸ்ரீவைணவ மதத்தின் அடிப்படைக் கொள்கை. இப்பொருளை ஸ்ரீஆழ்வார், "நடையாவுடைத் திருநாரணன் தொண்டர் தொண்டர் கண்டீர், இடையார், பிறப்பிடைதோறும் எமக்கு எம்பெருமக்களே" என்றும் "வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணறாகாளென்று உள் கலந்தார், அடியார்தம் அடியார் எம்மடிகளே" என்றும் எடுத்துரைக்கிறார்.

விசித்ரமான இவ்வுலகம் எம்பெருமானின் ஸங்கல்பத்திற்கு ஏற்ப பலவித மாற்றங்களை அடைகிறது. இதை

எம்பெருமானார் ஆழ்வார் ஜீயர்



Koviloor Digital Library

ஸ்ரீ லக்ஷ்மி - ஸ்ரீ ஜ்வாலா நரசிம்ஹன் (அஹோபிலம்)

ச்ருதி "ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய: தத் ஸ்ருதஷ்வ தேவ அனுப்ரவிசத்" என்று கூறுகிறது. இதனை ஆழ்வாரும் "கண்ட வாற்றால் தனதேயுலகென நின்றான் தன்னை" என்றும் "செய்யதாமரைக் கண்ணனாய் உலகேழும் உண்ட அவன் கண்டீர்", "வையம், வானம், மனிதர், தெய்வம் மற்றும் மற்றும் மற்றும் முற்றுமாய் செய்ய சூழ்சுடர் ஞானமாய் வெளிப்பட்டு படைத்தான்" என்றும் கூறுகிறார்.

முன்பு கூறியபடி இவனே உயர்ந்த தத்துவம். மற்றுள்ள தெய்வங்கள் இவனாலேயே அவரவருடைய கர்மங்களுக்கு ஏற்ப ஸ்ருஷ்டிக்கப்படுவர். அவர்களும் அதற்கேற்ற பலன்களை அடைகின்றனர் என்பதை ஆழ்வார் "அவரவர் தமதமது அறிவறி வகை வகை அவரவர் இறையவர் என அடியடைவர்கள் அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர், அவரவர் விதிவழி அடைய நின்றனரே" என்ற பாசுரத்தின் மூலம் அறிவுறுத்துகிறார்.

இந்த மதமானது அனாதியாகவும் நித்யமாகவும் இருக்கிற மறைகளில் கூறப்பட்டுள்ள சித்தாந்தம். இது எவராலும் ஏற்படுத்தப்பட்டதன்று. வேதங்களின் கருத்தை மஹரிஷிகள் கண்டறிந்து தங்களுடைய நூல்களில் இத்தத்துவத்தைப் பலபடியாக அருளியுள்ளார்கள். அவர்களுள் போதாயனர், டங்கர், திரமிடர், குஹதேவர், பாருசி போன்ற ரிஷிகளால் இந்த மதமானது கொடுக்கப்பட்டு, கலியுகத்தின் ஆரம்பத்தில் நம்மாழ்வார் மூலமாக இவ்வுலகில் நடைமுறையில் இருந்துவருகிறது. நம்மாழ்வாருக்குப் பிறகு இந்த சம்பிரதாயத்தில் ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமாகக் கடைபிடிக்கப்பட்டுவருகிறது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக 'பெரும்புதூர் வந்த வள்ளல்' என்று போற்றப்படுகிற ஸ்ரீ ராமானுஜர், இந்த சித்தாந்தத்திற்கு மெருகூட்டினார். இம்மஹான் காஷ்மீரத்தில் உள்ள சரஸ்வதி பீடத்திற்குச் சென்று வ்யாஸ முனிவர் என்று போற்றப்படும் பாதராயணரால் இயற்றப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் என்றும் உரையை எழுதி இக்கொள்கையை உறுதிப்படுத்தினார். இவரின் இத்தொண்டை கணிசித்து ராமானுஜ மதத்தின் முக்கியத் தூணாக விளங்கும் வேதாந்த தேசிகர், "நாதோபஜ்ஞும் ப்ரவ்ருத்தம் பஹுபிர் உபசிதம் யாமுநேய ப்ரவந்தை: த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை: அகில தம: கர்சனம் தர்சனம் ந:" என்றும் "ஆரணநூல் வழிச்செவ்வை அழித்திடும் மைதுகர்க்கு, ஓர் வாரணமாய் அவர் வாதக்கதலிகள் மாய்த்த பிரான், ஏரணிகீர்த்தி ராமானுஜமுனி இன்னுரை சேர், சீரணிசிந்தையினோன், சிந்தியோமினித் தீவினையே" என்றும் போற்றுகிறார்.

இம்மதம் ஸ்ரீ ராமானுஜருக்குப் பிறகு ஓராண் வழியாக இன்றளவும் ஸ்ரீவைணவ ஆசார்யர்களால் கடைப்பிடிக்கப்பட்டு உபதேசிக்கப்படுகிறது. இப்பரம் பரையில் சேர்ந்த நாம் இம்மஹானின் ஆயிரமாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளோம். இது பெறற்கரிய பேறாகும். அம்மஹானைப் போற்றி உகப்பதும் புத்தியில் கொள்வதும் பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றவர்க்கே என்ற கணக்கிலே நம் தலையாய கடமையாகும்.

Koviloor Digital Library

கோ.கார்த்திக்

ராமானுஜரும் வரதராஜப் பெருமாள் கோயிலும்

வரதராஜரும், பெருந்தேவித் தாயாரும் வேடர் வடிவில் சென்று குடிக்கத் தண்ணீர் கேட்டனர். உடன் ராமானுஜர் அருகில் உள்ள சாலைக் கிணற்றில் நீர் எடுத்து அவர்கள் பருகக் கொடுத்தார்.

ராமானுஜரின் வாழ்வில் பல கோயில்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் அதில் ஒன்று. இந்தக் கோயிலுக்கும் உடையவர் என அழைக்கப்படும் ராமானுஜருக்கும் இடையிலான தொடர்பைப் பார்க்கும் முன்பு கோயிலின் தல புராணத்தைப் பார்த்துவிடுவோம்.

தல புராணம்

பிரம்ம ஹத்தி தோஷம் நீங்குவதற்காக, சத்ய விரத ஷேத்திரம் எனப்படும் பகுதியில் அஸ்திகிரி என்ற யானை வடிவிலான மலைமீது, பிரம்மா யாகம் நடத்தினார். இதுவே காலப்போக்கில் காஞ்சிபுரம் என அழைக்கப்படுகிறது. பிரம்மா, அவருடைய மனைவியான சரஸ்வதி தேவியை விடுத்து மற்ற இரு மனைவிகளான சாவித்ரி, காயத்ரி ஆகியோரை உடன்வைத்து யாகம் செய்தார். இதனால், சரஸ்வதி தேவி கோபம்கொண்டு வேகவதி என்ற ஆறாய் உருவெடுத்து யாகத்தை அழிக்க முயற்சித்தாள். இதனால், பிரம்மா யாகத்தைக் காக்கும்படி மகா விஷ்ணுவிடம் வேண்டினார்.

இதையடுத்து, மகா விஷ்ணு யதோக்தகாரியாக வந்து, ஆடையின்றிப் பிறந்த மேனியாகக் குறுக்கே சயனித்து, யாகத்தைக் காத்தார். மேலும், யாகம் பூர்த்தியடைந்த உடன் யாக குண்டத்திலிருந்து பெருமாள் தோன்றினார். பிரம்மாவிற்கு வரம் அளித்ததால், வரதராஜப் பெருமாள் என பெயர் பெற்றார். இதையடுத்து, அத்திமரத்தில் பெருமாளின் சிலை வடித்து அஸ்திகிரி என்ற சிறிய குன்றின் மீது பிரதிஷ்டை செய்தனர். யாக குண்டத்தில் நெருப்பிலிருந்து தோன்றியதால், வரதராஜப் பெருமாளுக்கு முகத்தில் தழும்புகள் ஏற்பட்டது. இதனால், அசரீரி மூலம் தன்னை அனந்த சரஸ் குளத்தில் விட்டுவிட்டு, பழைய சீவரம் பகுதியிலிருந்து தேவராஜப் பெருமாளை மூலவராகப் பிரதிஷ்டை செய்யுங்கள் என பெருமாள் தெரிவித்தார். இதையடுத்து, உஷ்ணத்தைத் தணிப்பதற்காக அத்திகிரி வரதர் அனந்த சரஸ் குளத்தில் வாசம் செய்கிறார்.

40 ஆண்டுகளுக்கு ஒருமுறை குளத்திலிருந்து வெளியே வந்து அத்திகிரி வரதர் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். கடந்த 1939, 1979 ஆகிய ஆண்டுகளில் வெளியே அத்திவரதர், வரும் 2019ம் ஆண்டு பக்தர்களுக்குக் காட்சியளிக்க உள்ளார்.

40 ஆண்டுகளுக்கு ஒருமுறை குளத்திலிருந்து வெளியே வந்து அத்திகிரி வரதர் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். கடந்த 1939, 1979 ஆகிய ஆண்டுகளில் வெளியே அத்திவரதர், வரும் 2019ம் ஆண்டு பக்தர்களுக்குக் காட்சியளிக்க உள்ளார்.

Koviloor Digital Library

காஞ்சி கருடசேவை

Koviloor Digital Library



அமுத மொழிகள்

பொருளை அறிவது என்று சொல்லும்போது, அந்தப் பொருளை அந்தப் பொருளாகக் காணும், குண அமைப்பைப் பற்றிய வேறுபாட்டுணர்வும் அதில் அடங்கியிருக்கின்றது. 'இது ஜாடி, இது துணி' எனும்போது ஜாடியைத் துணியினின்றும் வேறுபட்டதாகக் காண்கின்ற அனுபவத்தையும் அது சொல்கின்றது. இந்த வேறுபாட்டுணர்வுக்கு இடமில்லை என்றால், குதிரையைத் தேடிச் செல்பவன், எருமையைக் கண்டு ஏன் சமாதானப்படக்கூடாது?

ராமானுஜரின் வாழ்வில்...

ஸ்ரீபெரும்புதூரில், அவதரித்த ராமானுஜர் கல்வியில் சிறந்து விளங்கினார். இதனால், அவர் மீது பொறாமை கொண்ட அவரது குரு யாதவப் பிரகாசர், அவரை கங்கையில் தள்ளிவிடும் வஞ்சக எண்ணத்துடன் அழைத்துச் சென்றார். சித்தி மகன் கோவிந்தாசர் மூலம் இதை அறிந்த ராமானுஜர், பாதி வழியிலேயே திரும்பினார். அப்போது, வழி தெரியாமல் காட்டில் கலங்கி நின்றபோது, வரதராஜரும், பெருந்தேவித் தாயாரும் வேடர் வடிவில் சென்று குடிக்கத் தண்ணீர் கேட்டனர். உடன் ராமானுஜர் அருகில் உள்ள சாலைக் கிணற்றில் நீர் எடுத்து அவர்கள் பருகக் கொடுத்தார். தண்ணீரைப் பருகிய இருவரும் மறைந்துவிட்டனர். சுவாமியே வேடனாக வந்ததை ராமானுஜர் அறிந்தார்.

அன்றுமுதல், வரதராஜப் பெருமாளுக்கு சாலைக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து காலையில் அபிஷேகம் செய்துவருகின்றனர். இதன் நினைவாக, மார்கழி மாதம் சொர்க்க வாசல் விழா முடிந்த 12-ம் நாளில் வரதர், தாயார், ராமானுஜர் ஆகியோர் இந்தக் கிணற்றுக்கு எழுந்தருள்வர். அங்கு, வரதர் அணிந்த பரிவட்டமும், மாலையும் ராமானுஜருக்கு அணிவிக்கப்படுகிறது.

ஸ்ரீஸருங்கிபேரர் என்னும் முனிவரின் இரு குமாரர்கள் கௌதம முனிவரிடம் சிஷ்யர்களாக இருந்த போது பூஜைக்கு தீர்த்தம் கொண்டுவந்ததில் பல்லிகள் இறந்து கிடந்ததைக் கண்டு முனிவர் கோபம் கொண்டு இருவரையும் பல்லிகளாகும்படி சாபம் அளித்தார். பிறகு சிஷ்யர்கள் வேண்டிக் கேட்டதால், காஞ்சி சென்றால் மன்னிப்பு உண்டு எனக் கூறிவிட்டார். பிறகு

Koviloor Digital Library

அனந்தஸரஸ் தீர்த்தம்

இருவரும் சப்தபுரிகளையும் சுற்றி வந்து வரதராஜப் பெருமாளிடம் மோட்சம் கேட்டனர். பெருமாள் உங்கள் ஆத்மா வைகுந்தம் செல்ல சரீரம் பஞ்ச உலோகத்தில் என் பின்புறம் இருக்க என்னை தரிசிக்க வருவபர்கள் உங்களை தரிசித்தால் சகல தோஷம் நீங்கி ஷேமம் உண்டாகும்; சூரியன், சந்திரன் இதற்கு சாட்சி என்று மோட்சம் அளித்தார். ஆகையால் இத்தரிசனம் மிக முக்கியமானதாகும்.

தொட்டாசாரியார் சேவை

வரதருக்கு வைகாசி பிரம்மோற்சவம் மிகவும் பிரசித்தி பெற்றது. இதை "வையம் கண்ட வைகாசித் திருநாள் என்பர். இவ்விழாவின் மூன்றாள் நாளில் சுவாமி கருட சேவை வாகனத்தில் காட்சியளிப்பார். இந்த கருட சேவையைக் குறிப்பிட்டு சங்கீத மூர்த்தி தியாகராஜர் கீர்த்தனையும் பாடியுள்ளார்.

சோளிங்கரில் வசித்த தொட்டாசாரியார் என்ற பக்தர் இந்த கருட சேவையை தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவரால் இங்கு வர முடியவில்லை. மனம் வருந்திய அவர், சோளிங்கரில் உள்ள தீர்த்தக்கரையில நின்றபடி, சுவாமியை மனமுருகி வழிபட்டார். அப்போது, ஒரு வினாடி மட்டும் சுவாமி அவருக்கு கருட சேவையில் காட்சியளித்தார். இதன் அடிப்படையில் கருட சேவையின்போது, ராஜகோபு ரத்தில் சுவாமியை ஒரு வினாடி குடையால் மறைத்துப் பின்னர் பக்தர்களுக்குக் காட்சியளிக்கச் செய்வர்.

தாயார் உற்சவம்

பிருகு மகரிஷி செய்த புத்ர காமேஷ்டி யாகத்தில் தோன்றிய மகாலட்சுமி, பெருந்தேவித் தாயார் என்று பெயர் பெற்றாள். சரஸ்வதி பூஜை, வைகாசி திருவிழாவில் ஒருநாள், பங்குனி உத்திரம் என ஆண்டில் மூன்று முறை மட்டும் வரதராஜர், தாயாருடன் காட்சியளிக்கிறார். வைகாசி முதல் வெள்ளியன்று தாயாருக்கு விசேஷ திருமஞ்சனத்துடன் பூஜை நடக்கும்.

தங்கத் தாயார்

வேதாந்த தேசிகர் இங்கு சுவாமியைத் தரிசிக்க வந்தபோது, ஒரு ஏழை அவரிடம் பொருள் வேண்டினான். அவர் அந்த ஏழைக்காகப் பொருள் கேட்டு பெருந்தேவித் தாயாரை வேண்டிப் பாடல் பாடினார். அவருக்கு இரங்கிய தாயார், தங்க மழையைப் பெய்வித்தாள். இதனால், பக்தர்கள் தங்கத் தாயார் என்று அழைக்கிறார்கள்.

மலையாளன்

இந்திரனுக்கு அருளிய யோகநரசிம்மர், இத்தலத்தில் குடவரை மூர்த்தியாகக் காட்சி தருகிறார். இவருக்கான தாயார், ஹரித்ராதேவி தனிச்சன்னதியில் இருக்கிறாள், இவளை மலையாள நாச்சியார் என்றும் அழைப்பர். சிறிய மலையின் மீது காட்சி தருவதால் வரதராஜருக்கு 'மலையாளன்' என்றும் பெயர் உண்டு.

நம்மாழ்வார்

பெருமாள் கோயில்களில் பொதுவாகச் சின் முத்திரை காட்டியபடி இருக்கும் நம்மாழ்வரை, இத்தலத்தில் மார்பில் கை வைத்த நிலையில் தரிசிக்கலாம். இவர் வரதராஜரை தேவர்களுக்கெல்லாம் தலைவன் எனக் குறிப்பிட்டிருக்கிறார். இதனால் சுவாமிக்கு தேவராஜன் என்ற பெயரும் உண்டு.

Koviloor Digital Library

அச்சமற்ற அனந்தன்

ஸ்ரீராமனுஜருடைய பிரபாவத்தை அளந்தாலும் அளந்துவிடலாம். அவரது சீடர்களுடைய பிரபாவத்தை அளக்க முடியாது. அது தவிர, ஸ்ரீராமானுஜருடைய கடாட்சம் எப்பொழுதும் அவரது சீடர்கள் மீதே இருந்துவந்தது.

ஸ்ரீ ராமனுஜருடைய பிரபாவத்தை அளந்தாலும் அளந்துவிடலாம். அவரது சீடர்களுடைய பிரபாவத்தை அளக்க முடியாது. அது தவிர ஸ்ரீராமானுஜருடைய கடாட்சம் எப்பொழுதும் அவரது சீடர்கள் மீதே இருந்துவந்தது. அந்த சீடர் கோஷ்டியில் ஊமையான ஒரு சீடனும் இருந்தான். வாயால் பேச முடியாத அவன் எப்பொழுதும் உடையவரின் முகத்தை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப் பார்வையைப் புரிந்துகொண்ட உடையவர் ஒரு நாள் யாருமில்லாதபோது அவனை சைகை செய்து தமது அறைக்குள் அழைத்துச் சென்றார். கதவுகளைச் சற்று மூடிவிட்டுத் தனது திருவடிகளைக் காட்டி அவற்றைப் பிடித்துக்கொள்ளும்படி கூறினார். அவன் கண்களில் நீர் மல்கியது. அப்படியே தடாலென்று ஆச்சார்யன் திருவடிகளைப் பிடித்துக்கொண்டான். ஸ்ரீராமானுஜரும் அவன் தலைமேல் கைவைத்து ஆசீர்வாதம் செய்தார்.

அந்த சமயம் அந்த அறைப்பக்கம் வந்த ஆழ்வான் கதவு மூடப்பட்டிருப்பதைக் கவனித்து இடைவெளிமூலம் பார்த்தார். நடந்ததைப் பார்த்ததும், “நான் எனது காலத்தையெல்லாம் வேதங்களையும் சாஸ்திரங்களையும் படித்துக்கொண்டு என் பிறவியை வீணாக அடித்துவிட்டேனே. நான் ஊமையாக பிறந்திருந்தால் எனக்கும் இப்படி ஆச்சார்யனின் கிருபை கிடைத்திருக்குமல்லவா?” என்று சோகித்தார். “பெருமானின் கிருபையைப் போலவே ஆசார்யனின் கிருபை எந்தெந்த இடத்திலெல்லாம் பிரவகிக்கிறது?” என்று சோகமும் இன்பமும் கலந்த உணர்ச்சிகளுக்கு இலக்கானார். “பேரின்பத்துக்கு மார்க்கமான இந்த சுலபவழி எனக்குக் கிடைக்கவில்லையே” என்றும் ஏங்கினார்.

அந்தச் சமயம் அந்த அறைப்பக்கம் வந்த ஆழ்வான் கதவு மூடப்பட்டிருப்பதைக் கவனித்து இடைவெளி மூலம் பார்த்தார்.

திருவரங்கத்தில் இத்தகைய விந்தை நிகழ்ந்துகொண்டிருக்கையில் திருமலையில் இன்னொரு விந்தை நிகழ்ந்துகொண்டிருந்த்து. உடையவருடைய அனுமதி பெற்று ஸ்ரீராமானுஜர் பெயரால் நந்தவனம் அமைத்து ஏழுமலையானுக்கு மாலா கைங்கர்யம் செய்துவந்த அனந்தன், அவர் பெயரால் ஒரு தடாகமும் அமைக்கத் தீர்மானித்து அதற்கான முயற்சியில் இறங்கினார். தினம் தினம் விடியற்காலையில்

Koviloor Digital Library



அனந்தாழ்வான் திருவரசு திருமலை

Koviloor Digital Library



ஸ்ரீ கோமளவல்லீ - ஸ்ரீ ஆராவமுதன் (திருக்குடந்தை)

எழுந்திருந்து மண்வெட்டியும் கூடையும் எடுத்துக்கொண்டு மண்ணை வெட்டிக் கூடையில் சேர்த்துக் கரையில் கொட்டிக்கொண்டிருந்தார். அந்தப் பணியால் அவர் மிகுந்த சிரமப்படுவதைப் பார்த்து சீடன் ஒருவன் தள்ளாடி வந்த அவரிடமிருந்து கூடையை வாங்கப் பார்த்தான். "இந்த கூடையில் நீ கையை வைத்தால் உன் கைகள் பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டுத் துவண்டுவிடும்" என்று சினத்துடன் கூறினார் அனந்தன். ஆனால் இந்த மிரட்டலுக்கு அஞ்சாத சீடன் அவரிடமிருந்து கூடையை வாங்கவே முயன்றான். அதைக் கண்ட அனந்தன் வெறிபிடித்தவர் போல் நகைத்து, "ஏனடா சீடனே! என் ஜீவனோபாயத்தைப் பிடுங்கப் பார்க்கிறாய்? பகவத்கைங்கர்யந்தானே என் உயிர்? உனக்கு அதில் அக்கறையிருந்தால் நீயும் ஒரு மண்வெட்டி, கூடை கொண்டு சேவை செய்வதை யார் தடுத்தது?" என்று கேட்டுத் தமது பணிகளில் ஈடுபட்டார்.

இத்துடன் விடவில்லை அனந்தன். தடாகம் தாமதப்படுவதை உணர்ந்து தமது மனைவியையும் வேலைக்கு அழைத்துச் சென்றார். தாம் மண்ணை வெட்டிக் கொடுத்துக் கூடையில் போட்டு அவளைத் தூக்கிச் செல்லப் பணித்தார். அவள் அப்பொழுது பூரண கர்ப்பிணி. இருந்தும் கணவர் சொல் மீறாது முக்கியும் முனகியும் மண்ணைச் சுமந்து சென்றாள்.

Koviloor Digital Library

அவள் பட்ட சிரமம் ஏழுமலையானுக்கே பொறுக்காததால் அவன் சிறு பிள்ளையாக வந்து அவள் கொண்டு வந்த கூடையைப் பாதிவழியில் வாங்கிக்கொண்டு போய் மண்ணைக் கொட்டி வந்தார். ஒவ்வொரு முறையும் மண் சுமந்து சென்ற மனைவி, வெகு சீக்கிரம் திரும்புவதைக் கண்ட அனந்தன் சந்தேகித்து அவளைத் தொடர்ந்தார். அவளிடமிருந்து பாதி வழியில் மண்கூடையை ஒரு சிறுவன் வாங்கிச் செல்வதைக் கண்டு ஆத்திரங்கொண்டு அவனைத் துரத்திச் சென்றார். அவன் முகவாய்க் கட்டையில் மண்வெட்டியாலும் அடித்தார். அப்படியும் அந்த சிறுவன் அவரிடம் அகப்படாமல் ஓடிச்சென்று கோவிலுக்குள் மறைந்துவிடவே வந்தது யாரென்பதைப் புரிந்துகொண்டார் அனந்தன். மறுநாள் சேவார்த்திகள் பெருமாள் முகவாய்க் கட்டையில் ரத்தம் வருவதைக் கண்டு அபசாரம் ஏதோ நேர்ந்திருக்க வேண்டுமென்று அஞ்சி ரத்தத்தை நிறுத்த பச்சைக் கற்பூரத்தை வைத்து அழுத்தினார்கள். அதை ஒட்டி இன்னும் அந்த சம்பிரதாயம் கையாளப்பட்டுவருகிறது.

ஸ்ரீராமானுஜ தடாகத்தைக் கட்டி முடித்த அனந்தன் தமது கைங்கர்யத்திலேயே ஊக்கமுடையவராய்க் காலங்கழித்து வந்தார்.

ஸ்ரீராமானுஜ நந்தவனத்தை நன்றாக வளர்த்து, புஷ்பங்களைத் தினம் தொடுத்து எம்பெருமானுக்கு மாலா கைங்கர்யம் செய்துவந்தார். அனந்தன் திடசித்தர். எதற்கும் அஞ்சாதவர். நந்தவனத்தில் பூக்கொய்கையில் அவரை ஒரு பாம்பு கடித்துவிட கடித்த இடத்தைக் குளத்தில் அலம்பிவிட்டுத் தமது வேலைகளைக் கவனித்தார்.

பக்கத்திலிருந்து அவரது அசட்டையைக் கவனித்தவர், "அது பாம்பு காணும். அதற்கு ஏதாவது மருந்து கொண்டுவருகிறேன்" என்றார்.

அனந்தன் சிரித்தார். "எதற்கு மருந்து?" என்று கேட்டார்.

"பாம்புக் கடிக்கு."

"போடாவிட்டால் என்ன ஆகும்?"

"பிராணன் போய்விடும்."

"அதனாலென்ன? என்னைக் கடித்த பாம்பு என்னைவிட பலமுள்ளதானால் நான் மேல் உலகத்தில் விரஜா நதியில் நீராடுவேன், இல்லாவிட்டால் இங்குள்ள பெருமாள் குளத்தில் தீர்த்தமாடுவேன். இங்கே கோயிலில் குடிகொண்டிருக்கும் பெரிய மருந்துக்குமேல் மருந்து இருக்கிறதா!" என்று கேட்டுத் தமது கைங்கர்யத்தில் கவனம் செலுத்தினார்.

இன்னுமொரு நாள் பெருமாள், அனந்தனை தமது சந்நிதானத்திற்கு வரும்படி அழைத்தார். அப்பொழுது அவர் பெருமாளுக்கு மாலை கட்டிக் கொண்டிருந்தார். அதனால் பெருமாளின் அழைப்புக்கு அவர் செவி சாய்க்கவில்லை.

"அனந்தா! நான் அழைத்தது உன் காதில் விழவில்லை?" என்று ஏழுமலைக்கதிபன் கேட்டார்.

"நான் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் போது என் இந்திரியங்கள் வேறு எதிலும் இயங்கா. மற்ற விஷயங்களுக்குக் காதும் கேட்காது, கண்ணும் தெரியாது" என்றார் அனந்தன்.

"எனக்கும் அதே பாடந்தானா?" என்று பெருமாள் கேட்டார்.

"நான் சொன்னதில் யாருக்காவது விலக்கு வைத்தேனா?" என்றார் அனந்தன்.

"இந்த மலையிலிருந்து உன்னைப் போக நான் கட்டளையிட்டால் என்ன செய்வாய்?"

"போக மாட்டேன். இது எனது ஆச்சார்யனுடையது. ஆதிசேஷனே மலையானான். அவரே உடையவரானார். தவிர நீரும் எனக்குச் சில ஆண்டுகள் முன்தான் வந்திருக்கிறீர். இது ஸ்ரீராமானுஜர் மலை. ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுக்குச் சொந்தமானது. உடையவர் என்னைப் போகச் சொன்னால் போவேன்" என்ற அனந்தன், "நாம் வேறு ஏதாவது உபயோகமாகப் பேசுவோமே" என்று துளியும் அச்சமின்றிச் சொன்னார். இப்படி அச்சமற்ற சேவையில் கருத்துள்ள அடியார்களைப் பெற்ற ஸ்ரீராமானுஜர் ஈடு இணையற்ற ஆச்சார்யனாக விளங்கினார்.

நன்றி: மதப்புரட்சி செய்த மகான் ஸ்ரீராமானுஜர், சாண்டில்யன், வானதி பதிப்பகம், விலை ரூ.110

ஆதிசேஷனே மலையானான். அவரே உடையவரானார். தவிர நீரும் எனக்குச் சில ஆண்டுகள் முன்தான் வந்திருக்கிறீர்.

Koviloor Digital Library

கே. சுந்தரராமன்

ராமானுஜர் துறவறம் பூண்டது ஏன்?

துறவறம் ஏற்பவர்கள் ஆசார்யர் மூலமாகத்தான் காவி ஆடை மற்றும் திரிதண்டம் ஆகியவைகளைப் பெற்றுக்கொள்வது மரபு. இந்த மரபை மீறி ராமானுஜர் தானே துறவிகளுக்கு உரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டார்.

ராமானுஜருக்கு நாள்தோறும் வைணவர் ஒருவர் எண்ணெய் தேய்த்துவிடுவது உண்டு. அவர் ஒரு நாள் இராமானுஜர் வீட்டிற்குத் தள்ளாடியபடி வந்தபோது, இராமானுஜர் காரணம் வினவ, இரண்டு நாளாக உணவருந்தாததைக் கூறினார். பதறிய இராமானுஜர் தன் மனைவி தஞ்சம்மாளை அழைத்து அவருக்கு உணவளிக்குமாறு பணித்தார். 'இது என்ன அன்னச் சத்திரமா? என்று முனகியபடி தஞ்சம்மாள், உணவு தயாராக இல்லை எனவும் பழைய சோறும் இல்லை என்றும் கூறிச் சென்றுவிட்டாள். அடுக்களைக்குள் சென்ற இராமானுஜர், உணவு தயாராக இருப்பது கண்டு, அதனை அந்த வைணவருக்கு அளிக்கலாம் என்று வெளியே வந்தபோது, அவமானம் தாளாது அவ்வைணவர் அங்கிருந்து சென்றுவிட்டிருந்தார். அப்போது அங்கு வந்த தஞ்சம்மாளைக் கண்டு, "அபசாரம் செய்து விட்டாய். அன்று சாதி கருதி திருக்கச்சி நம்பியை அவமானம் செய்தாய். இன்று பசி என்று வந்த வைணவருக்கு உணவளிக்க மறுத்துவிட்டாய். இது இரண்டாவது அபசாரம். உன் உள்ளத்தில் கருணை வறண்டு, கள்ளம் புகுந்தது" என்று சாடினார்.

காஞ்சியில் இருக்கும் திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாள் விருப்பப்படி திருவரங்கத்தில் இருக்கும் பெரியநம்பிகளிடம் உபதேசம் பெற்று வருமாறு ராமானுஜரை திருவரங்கத்திற்கு அனுப்பி வைத்தார்.

குரு பக்தி

காஞ்சியில் இருக்கும் திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாள் விருப்பப்படி திருவரங்கத்தில் இருக்கும் பெரியநம்பிகளிடம் உபதேசம் பெற்று வருமாறு ராமானுஜரை திருவரங்கத்திற்கு அனுப்பி வைத்தார். அவரும் மனமகிழ்வோடு, திருவரங்கம் நோக்கிப் பயணிக்கும் வழியில் மதுராந்தகம் ஏரி காத்த இராமரை தரிசித்தார். அங்கு கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல் பெரியநம்பி மற்றும் அவரது மனைவி விஜயாம்பாள் இருவரையும் கண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார். பெரியநம்பிகளிடம் தீட்சை பெற விரும்புவதாகக் கூறி, அவரிடம் பஞ்ச சம்ஸ்காரம் பெற்றார்.

1. தாப சம்ஸ்காரம் (சக்கரம் – சங்கு தோள்களில் தரிப்பது)
2. புண்ட்ர சம்ஸ்காரம் (திருமண் காப்பு அணிவது)

Koviloor Digital Library



ஸ்ரீபூமிதேவி - ஸ்ரீஒப்பிலியப்பன் (திருவிண்ணகர்)

Koviloor Digital Library



ஸ்ரீராமானுஜர்

3. நாம சம்ஸ்காரம் (விஷ்ணுவின் நாமத்தை ஏற்றுக் கொள்வது)

4. மந்த்ர சம்ஸ்காரம் (மந்திரத்தை உபதேசித்தல்)

5. யாக சம்ஸ்காரம் (யக்ஞம் செய்தல்)

இந்த ஐந்தும் பெற்றவரே ஸ்ரீவைஷ்ணவர் எனும் தகுதியும் பெருமையும் கொண்டவர். இந்த ஐந்து சம்ஸ்காரங்களைப் பெற்றவரே 'ஆச்சார்யர்' என்னும் புகழைப் பெற்றவராகிறார். தீட்சை பெற்ற ராமானுஜர் தமது குருவையும் குருபத்தினியையும் அழைத்துக் கொண்டு காஞ்சிபுரம் வந்தடைந்தார். பெரியநம்பிகள் வருகையை அறிந்த திருக்கச்சி நம்பிகள் மிகவும் மகிழ்ந்து அவரை தரிசித்து பரவசமடைந்தார்.

ராமானுஜரின் வேண்டுகோளுக்கிணங்க தஞ்சம்மாளுக்கும் பெரியநம்பிகள் சமாச்ரயணம் செய்தார். தாம் இருந்த இல்லத்தின் மேற்பகுதியை தம் ஆச்சார்யர் பெரியநம்பிகளுக்கும் அவர் தர்ம பத்தினிக்கும் ஒதுக்கிக் கொடுத்தார். குருவின் அருகே அமர்ந்து தமிழ் வேதமாகிய திவ்யப் பிரபந்தத்தின் பாசுரத் தொகுதிகளை திரும்பத் திரும்பச் சொல்லி நினைவில் வைத்துக்கொள்வார்.

இவ்வாறு ஆறு மாதங்களுக்குள், பொய்கை ஆழ்வாரின் முதல் திருவந்தாதி 100, பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி 100, பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதி 100, திருமழிசை யாழ்வாரின் நான்முகன் திருவந்தாதி 96, திருச்சந்த விருத்தம் 120, நம்மாழ்வாரின் திருவிருத்தம் 100, திருவாசிரியம் 7, பெரிய திருவந்தாதி 87, திருவாய்மொழி, 1102, குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழி 105, திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி 1084, திருக்குறுந்தாண்டகம் 20, திருநெடுந்தாண்டகம் 30, பெரிய திருமடல் 78, சிறிய திருமடல் 40, திருவெழுகூற்றிருக்கை 1, தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளி எழுச்சி 10, திருமாலை 45, திருப்பாணாழ்வாரின் அமலனாதி பிரான் 10, பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு, திருமொழி 143, மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு 11 ஆக மொத்தம் 3892 பாசுரங்களையும் பயின்று முடித்தார். எனவே, தமது ஆச்சார்யரான பெரியநம்பிகளுக்குக் காணிக்கை சமர்ப்பிப்பதற்காகப் பழம், வெற்றிலை, பூ, புதிய துணி ஆகியவற்றை வாங்கிவரக் கடைக்குச் சென்றார்.

பெரிய நம்பியின் மனைவி விஜயாம்பாள் குடத்தில் இருந்து சில நீர்த்துளிகள் தன் குடத்தில் விழுந்து விட்டன என்று பொரிந்து தள்ளினாள்

கிணற்றடிச் சண்டை

பெரிய நம்பியின் மனைவி விஜயாம்பாள் குடத்தில் இருந்து சில நீர்த்துளிகள் தன் குடத்தில் விழுந்துவிட்டன என்று பொரிந்து தள்ளினாள் தஞ்சம்மாள். காஞ்சிபுர பிராமணர்களை விடத் திருவரங்க பிராமணர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் எண்ணம் தஞ்சம்மாளுக்கு எப்போதுமே உண்டு. இயல்பிலேயே பணிவும் சாந்தமும் வாய்க்கப் பெற்ற பெரியநம்பியின் மனைவி விஜயாம்பாள், தஞ்சம்மாளின் தீயைக் கக்கும் வார்த்தைகளைக் கேட்டதும் பதறிப் போய், தஞ்சம்மாளிடம் மன்னிப்பு கோரி, அழுகையை அடக்க முடியாது தன் இல்லம் சென்றாள். சிறிது நேரம் கழித்து, வீடு திரும்பிய

Koviloor Digital Library

பெரியநம்பியிடம் நடந்ததைக் கூறினாள். அதைக் கேட்ட பெரியநம்பி, நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கூறி, இனி காஞ்சியில் இருக்க வேண்டாம் என்றும், திருவரங்கம் செல்லலாம் என்றும் கூறி, மனைவியோடு திருவரங்கம் பயணித்தார்.

தமது ஆச்சார்யனுக்கு சோடச உபசாரம் என்ற பதினாறு விதமான மரியாதை செய்யப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இல்லம் திரும்பிய ராமானுஜர், தன் குருநாதரைக் காணாது, மனைவியிடம் வினவ, தஞ்சம்மாள் அமைதி காத்தாள். பின்னர் அக்கம்பக்கத்தினர் மூலம், செய்தி அறிந்தார். ராமானுஜர் சினந்து, தன் மனைவியை நோக்கி, "நீ செய்யும் மூன்றாவது தவறு இது. பெரியநம்பி எனது குருநாதர் ஆவார். அவரை விரட்டியடித்தது பிழையிலும் பிழையாகும். தண்ணீரும் முப்பிழை பொறுக்கும் என்பார்கள். நானும் பொறுத்தேன். இனியும் இந்தக் கொடுமையை என்னால் தாள முடியாது. சற்றே ஏறுமாறாகில், கூறாமல் சந்நியாசம் கொள் என்பார்கள். நீ உன் பிறந்தகம் போ. நான் கிளம்புகிறேன்" என்றார்.

ஓர் ஏழை பிராமணனிடம், தஞ்சம்மாளின் சகோதரனுக்குத் திருமணம் என்றும், உடனே பிறந்தகம் வரும்படி, அவளது தகப்பனார் எழுதியது போல் ஒரு கடிதத்தைத் தயார் செய்து, அத்துடன் புதிய வேட்டி, புடவை, பூ, பழம், வெற்றிலை பாக்குத் தட்டையும் கொடுத்து அவளை அனுப்பி வைத்தார்.

ராமானுஜர் வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சென்றார். துறவு மேற்கொள்ள விரும்பினார். இறைவனை வணங்கியவர், வெளியே வந்தார். காவி உடை அணிந்தார். திரிதண்டத்தைக் கையில் ஏந்திக் கொண்டார். கோயிலுக்கு அருகே உள்ள குளக்கரையில் வேள்வித் தீ வளர்த்து, தமது இல்லற ஆசைகள் அனைத்தையும் ஒழித்து துறவு நிலைக்குச் சென்றார்.

யதிராஜர்

துறவறம் ஏற்பவர்கள் ஆசார்யர் மூலமாகத்தான் காவி ஆடை மற்றும் திரிதண்டம் ஆகியவைகளைப் பெற்றுக்கொள்வது மரபு. இந்த மரபை மீறி ராமானுஜர் தானே துறவிகளுக்கு உரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டார். அத்வைதியான அவரின் குருவான யாதவப் பிரகாசரிடம் துறவறம் பெற்றுக் கொள்வதில் ராமானுஜருக்கு விருப்பம் இல்லை. வருணாசிரம தர்மத்தைக் காரணம் காட்டி, தான் ஆசார்யராக இருப்பதை திருக்கச்சி நம்பிகள் மறுத்திருப்பார் என்று நினைத்து அவரிடமிருந்தும் துறவறம் பெற்றுக்கொள்ளவில்லை. எனவே தனக்குத் தானே துறவியாக முடிசூட்டிக்கொண்டார். அவரது செயலை காஞ்சி வரதரும் அங்கீகரித்தார். அப்போது அங்கு வந்த திருக்கச்சி நம்பிகள், அப்போது அலர்ந்த செவ்வியுடன் இராமானுஜருடைய வடிவழகைக் கண்டு, "யதிராஜா" என்று அழைத்து மகிழ்ந்தார். எதி என்றால் துறவி; ராஜர் என்றால் அரசர். துறவிகளுக்கு அரசர் என்று பொருள்படும் எனவே அது முதல் இராமானுஜர் யதிராஜர் அல்லது எதிராஜர் என்று அழைக்கப்பட்டார்.

மூவகைத் துறவிகள்

உலகத்தில் அனைத்து இன்பங்களையும் அறுத்து ஆண்டவனுடைய சேவை ஒன்றினையே நினைத்து நெஞ்சத்தை உறுதியாக நிறுத்தும் துறவிகள் ஒருவகை. காவி ஆடை தரித்துக்கொண்டு மனதைத் துறவறத்தில் ஈடுபடுத்த முடியாமல், இல்லறவாசியாகவே வாழும் சந்நியாசிகள் ஒருவகை. ஆனால் ராமானுஜர் மேற்கொண்ட துறவறம் வேறு மாதிரியானது. முதலியாண்டானைத் தவிர மற்ற யாவற்றையும் துறந்தேன் என்று கூறித் துறவறம் பூண்டார். துறவிக் கோலம் பூண்ட இராமானுஜர் முன்னிலும் அதிகமாகப் பொலிவுற்று விளங்கினார். மண், பெண், பொன் ஆகிய மூவகை ஆசைகளையும், மனைவி, மக்கள், செல்வம் ஆகியவற்றின்பால் கொண்டுள்ள ஆசைகளையும் (ஈஷணாத்ரயம்) அறவே அகற்றிய நிலையில் இராமானுஜர் மேற்கொண்ட துறவு அறத்தின் பாற்பட்டது என்று அறிஞர் பலர் கருதி அவரை மாமனிதர் என்று போற்றினர்.

ராமானுஜர் துறவறம் மேற்கொண்டபோது அவருக்கு வயது 32 என்பர். அவரது சகோதரி பூமிதேவியின் மகன்தான் தாசரதி. ராமானுஜருக்கு முன்னமே ஸ்ரீவைணவ பாரம்பரியச் சிறப்பு பெற்றவர் தாசரதி என்னும் முதலியாண்டான். துறவறம் மேற்கொள்பவர்களில் ஒற்றைத் தண்டு உள்ளவர்கள் அத்வைதிகள். ஆதிசங்கரர் திருக்கரத்தில் இதனைக் காணலாம். சித் அசித் ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களை அடையாளமாகக் காட்டுவது முக்கோல் என்ற த்ரிதண்டம். விசிட்டாத்வைதத்தை விரும்புபவர்கள். இவர்களை முக்கோல் பகவர் என்றும் அழைப்பர்.

வீடுமின் முற்றவும்,
வீடுசெய்து உம்முயிர்,
வீடுடை யானிடை
வீடுசெய் மி(ன்)னே (திருவாய்மொழி 1-2-1)

என்பார் நம்மாழ்வார். பொருள் மீது உள்ள ஆசையை விட்டு, உங்களுடைய உயிரை, மோட்ச உலகத்தை உடைய இறைவனிடம் சேர்ப்பியுங்கள் என்று பொருள்.

இதன்படி, பந்தங்கள் அனைத்தையும் உதறி, முதலில் மனத்தினால் சந்நியாசியானார் இராமானுஜர். மனதில் உறுதி ஏற்பட்ட பிறகு சம்சார பந்தத்தை எளிதாக உதறிவிட்டார். வரதராஜப் பெருமாளின் பரமபக்தராக இருந்த ராமானுஜர் அப்பெருமாளையே குருவாகப் பாவித்துத் துறவு மேற்கொண்டார். வைணவர் மட்டுமல்லாது அனைவரும் யதிராஜரைத் தங்கள் தலைவராகக் கொண்டாடினர்.

வாழி எதிராசன் வாழி எதிராசன்
வாழி எதிராசனென வாழ்த்துவார் - வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர் தலை

(மணவாள மாமுனிகள் - ஆர்த்திபிரபந்தம்-1):

Koviloor Digital Library

திருவயிந்தை மாலோல கண்ணன்

ராமானுஜர் வாழ்வின் மகிமை

எம்பெருமான், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் என்னும் மூன்றே அகார, உகார, மகாரம் போன்றது. அதிலே உள்ள ப்ரணவம் போன்றவர் ராமானுஜர்

ஸ்ரீயஃபதியான ஸ்ரீமந்நாராயணனை முதல் ஆசார்யனாகக் கொண்டு, அதை வழுவாமல் கடைபிடித்துக் கரையேறிவரும் ஸம்ப்ரதாயம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம். அந்த எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதே நமது கடமை என்று எண்ணி இறுமாந்திருக்கும் குலம் ஸ்ரீவைஷ்ணவ குலம். சரணாகதியே கைங்கரியத்தை அடையும் வழி. அந்த வழியே மோட்சத்திற்கு உபாயம். அந்த மோட்சத்தைக் கொடுப்பவன் ஸ்ரீமந்நாராயணன். அதைப் பெற்றுத் தரக் கூடியவர்கள் ஆச்சார்யர்கள். அதனால்தான் எம்பெருமானும் "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்று ஆசார்யர்களும், ஆழ்வார்களும் கொண்டாடினார்கள்.

ஆகையால்தான் எம்பெருமானைப் போன்று ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தையும் ஆதி சம்பிரதாயம் என்பர். ஆகையாலே எப்பொருளும் ஆழ்வார்களின் அருளமுதத்தையும், வேதாந்தவாரியனின் தமிழ் மறையையும் ஓத ஆரம்பிக்கும் சமயத்திலே "லக்ஷ்மிநாத ஸமாரம்பாம் நாதயாமுன மத்யமாம்! அஸ்மதாசார்ய பரியந்தாம் வந்தே குரு பரம்பராம்" என்று அநுஸந்தானம் செய்கின்றோம்.

உலகுய்ய வந்த உத்தமன் சூர்ய மண்டல நாராயணனைப் போன்று நமக்கு வாழ்வளிக்க வந்த ஆசார்யன். அவரே எம்பெருமானார்.

முக்கியமான மூன்று அம்சங்கள்

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம் மூன்றை முக்கியமாக உடையது. "முத்திக்கருள் சூட மூன்றைத் தெளிமுன்னம்" என்பதாக அசையும் பொருள் (சித்) அசையாப் பொருள் (அசித்) அனைத்தையும் ஆளும் அவன் (ஈஸ்வரன்) என்பதாகவும், ஸ்ரீமந்நாராயணன், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் என்றும் மூன்றாகவும், பகவான், சரணாகதி, ஆசார்யன் என்பதாகவும் இதைப் போன்று பல மூன்றுகள் முக்கியமாக உடையது.

இதை வேதம் நாராயண அதர்வ சிர்ஷத்தில் "அகார உகார மகார இதி" என்று எல்லா மூன்றையும் சுருக்கிச் சொன்னது. இவை மூன்றுமே ப்ரணவமாகி எம்பெருமானுடன் வேதமாக நின்று, எம்பெருமானுக்கு மூச்சுக்காற்றாகி விளங்கி, கலந்து வைதிக ஸம்ப்ரதாயமாயிற்று.

இத்தனை மூன்றினிலே எம்பெருமான், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் என்னும் மூன்றே அகார, உகார, மகாரம் போன்றது. அதிலே உள்ள ப்ரணவம் போன்றவர் ராமானுஜர் என்கிறார் ஸ்வாமி வேதாந்த தேசிகர்.

Koviloor Digital Library



ஆளவந்தார்

Koviloor Digital Library

ஒரு உயர்ந்த மாலை, ரத்தினங்கள் பதித்த மாலை இருபுறமும் கோர்க்கப்பட்டுள்ளது. அவற்றின் இடையிலே நூல்களினால் கோர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றின் நடுவிலே ஒரு பெரிய ரத்தினக்கல் பதிக்கப் பெற்றால் இரண்டு புறத்தின் தொடர்பையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, தானும் ப்ரகாசித்துக்கொண்டு இருப்பதைப் போன்று நம் ராமானுஜர் என்கிறார் ஸ்வாமி தேசிகர்,

அமுனா தபநாதி சாயி பூம்னா
யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ:!
மஹதீகுருபங்க்தி ஹாரயஷ்டி:
விபுதாநாம் ஹ்ருதயங்கமா விபாதி!!

பொய்கையார் முதலிய ஆழ்வார்கள் ஒரு புறத்தின் ரத்தினங்கள், நாதமுனிகள் முதலிய ஆசார்யர்கள் மறுபுறத்தின் ரத்தினங்கள். இவற்றின் இடையே ஊடுருவியிருக்கும் (மறைந்து இருக்கும்) நூல் (தந்து) எம்பெருமான். இவற்றின் நடுவில் இருக்கும் பெரிய பதக்கமே நம்முடைய ஸத்சம்பிரதாய நாயகன் நம் ராமானுஜர். அந்த ஹாரத்தை அணிந்து இருப்பவன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன். ஆகையாலே பிராட்டியைப் போன்று எம்பெருமானுடன், வீற்றிருக்கும் நாயகனே நம் உரையின் கதாநாயகன். அந்த மணியின் கீழே துலங்கும் மணி (சதங்கை, முத்து, பவழம்) போன்று விளங்குபவனே வேங்கடநாதன், சாதாரண ஹாரத்தின் ஒலி அணிபவர்களுக்கு கேட்கும், சதங்கை, ஒலி பார்க்காதவரையும் கேட்க வைக்கும், பார்க்க வைக்கும்.

எம்பெருமான் - எம்பெருமானார் ஒற்றுமை

எம்பெருமான் இந்தப் பூவுலகில்தான் அவதாரம் செய்தது போன்றே நித்யஸூரிகளை அவதாரம் செய்விப்பித்து மக்களை நல்வழியில் நடத்துகிறான். அவ்வாறே அஹீந்த்ரனான ஆதிசேஷனின் அம்சமாய் அவதாரம் செய்தவர் எம்பெருமானார். ஸ்ரீபெரும்புதூரில் ஆஸூரி கேசவ ஸோமயாஜிக்கும், பூமிப்பிராட்டிக்கும் குமாரராக அவதரித்து, ராமானுஜன் என்னும் நாமம் சூட்டப்பட்டவர் நமக்கு வாழ்வளிக்க வந்த ஆசான். எம்பெருமாள் திருநாமங்களைத் தெளிந்து, தெளியவோதி, "யதிராஜோதிவாகர!" என்னும்படி உலகுய்ய வந்த உத்தமன் சூர்ய மண்டல நாராயணனைப் போன்று நமக்கு வாழ்வளிக்க வந்த ஆசார்யன். அவரே எம்பெருமானார்.

எம்பெருமானார்க்கும், எம்பெருமானுக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டாலே நமக்கு எம்பெருமான் வேறல்ல, எம்பெருமானார் வேறல்ல என்பது புரியும். வடமொழியின் "ஸ்தாலீபுளாக நியாயம்" என்று ஒன்று சொல்வார்கள். இதைப் புரிந்துகொள்ள தமிழிலே ஒரு பழமொழி உண்டு. "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்பதே. பானையில் வேகும் அத்தனை பருக்கைகளையும் நாம் பதம் பார்ப்பதில்லை. ஒன்றை எடுத்துப் பார்த்தாலே எல்லாப் பருக்கைகளின் பதமும் நமக்கு தெரிந்துவிடும். அதைப் போன்று எம்பெருமானுக்கும் எம்பெருமானார்க்கும் உள்ள ஒற்றுமைகள் சிலவற்றைக் காண்போம்.

எம்பெருமான் - எம்பெருமானார், ஸ்ரிய:பதி: - திருமகள் கேள்வன், ஸ்ரீபாஷ்யகாரர் - ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த ஸ்தாபகர் (ஸ்ரீவைஷ்ணவம் என்றால் பெரிய பிராட்டியான லக்ஷ்மியையும் சேர்த்து, தாங்கி நின்றுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே என்று அலர்மேல் மங்கை உறை மார்பனாக சம்பிரதாயத்தை ஸ்தாபித்தவர். எம்பெருமான் ஸர்வலோக சரண்யன் - நல்லோரை, இந்த உலகத்தில் உள்ளோரைக் காத்தவன். ராமானுஜர் - வேதம், வ்யாசரால் இயற்றப்பெற்ற ப்ரம்மஸூத்ரம் முதலியவற்றுக்குத் தவறான அர்த்தத்தைக் காண்பித்து வேதத்தின் பொருள், வேதாந்தமான உபநிஷத்துகளின் பொருள்களைக் கூறியவர்களிடம் இருந்து நம்மைக் காப்பாற்றி உண்மையான பொருளை உரைத்து நம்மை காப்பாற்றியவர். இவ்வாறு பல ஒற்றுமைகளைக் கண்டு நாம் தெளியலாம். எம்பெருமானும், எம்பெருமானாரும் இருவரும் ஒருங்கே, அதாவது ஒரே சமயத்தில் வந்தால் என் மனம் ராமானுஜனாரையே பற்றும் என்கிறார் திருவரங்கத்தமுதனார்,

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துஉன்னைவிடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து இராமாநுச! என்னைமுற்றும்நின்றே.

தன்னுடைய வடிவழகைக் காட்டிக்கொண்டு, உன்னை விட மாட்டேன், உன்னை விட்டு அகலமாட்டேன் என்று நெருங்கி வந்து என்னை அழைத்தபோதிலும், எம்பெருமானாருடைய புகழ் என்னும் சுத்த சத்யமான குணங்கள் நெருங்கிச் சூழ்ந்து, நின்று தன்னுடைய விஷயத்தில் (மோட்சத்தில்) இணைந்து நிற்கும் என்று அருளிச் செய்கிறார் திருவரங்கத்தமுதனார்.

இவ்வாறு "இன்னமுதத் திருமகள் இன்றிவரை முன்னிட்டு எம்பெருமான்" என்று பிராட்டிக்கு ஆசார்யத்துவத்தையும், அதிகாரத்தையும் உடைய சம்பிரதாயம் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம். அதைப் போன்று பல ஸ்ரீகளை (பெண்களை) போற்றியவர், பெண்களால் போற்றப்பட்டேன் ஸ்ரீராமானுஜர். முதன் முதலில் காச்மீரத்தில் ஸரஸ்வதியாவே அனுக்ரஹம் செய்யப்பட்டு பேதச்ருதி, அபேதச்ருதி, கடகச்ருதி என்று மூன்று விதமான வேத வாக்யங்களைக் கொண்டு ப்ரம்ம ஸூத்ரத்திற்கு உரையிட்டு "ஸ்ரீபாஷ்யகாரர்" ஆனார். இவ்வாறு பல ஸ்த்ரீரத்னங்கள் எம்பெருமானார் திருவடியை ஆச்ரயித்து மோக்ஷத்தை அடைந்திருக்கின்றனர். அவர்களிலே "கொங்குப் பிராட்டி" என்னும் தாஸ்ய நாமம் பெற்ற ஸ்த்ரீ ரத்னத்தின் ஆச்சார்ய பக்தியைச் சற்றே அனுபவிப்போம்.

ராமானுஜர் வாழ்ந்த விதம்

ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர் சம்பிரதாய கைங்கர்யங்களைச் செய்துகொண்டு திருவரங்கம்

Koviloor Digital Library

ஸ்ரீ பெருந்தேவி - ஸ்ரீ வரதராஜன் (திருக்கச்சி)

பெரிய கோயிலிலே எழுந்தருளியிருந்த சமயம் ஸ்வாமி ராமானுஜர் உஞ்சவிருத்தி (பிட்சை எடுத்தல்) என்னும் சன்னியாச தர்மத்தை அடியொற்றித் தினமும் பிட்சை எடுத்து பகவதாராதனம் செய்துவந்தார்.

பிட்சை என்பது நாம் நினைப்பது போன்று பல விதமான வீட்டில் பலவிதமான அன்னத்தைப் புசிப்பது அல்ல. "ஒரு சன்னியாசி எப்படி பிட்சை எடுத்து உண்ண வேண்டும் என்றால், மூன்று கவளம் பிட்சையைப் பெற வேண்டும் (ஒரு கவளம் என்பது இரண்டு கையால் உருட்டினால் வரக்கூடிய அளவு). அந்த பிட்சையைப் பெற்று ஆற்றங்கரையிலோ, குளக்கரையிலோ சென்று அங்கே தான் வைத்திருக்கும் நித்யாராதன சாளக்ராமத்திற்கு நிவேதனம் செய்ய வேண்டும். பின்னர் அந்த அன்னத்தைத் தன்னுடைய மேல் துண்டிலே சேர்ந்து நீரிலே அந்த அன்னத்தின் சுவை போகும்வரை அலச வேண்டும். பின்னர் எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட துளஸியை அதில் சேர்த்து, அந்த அன்னத்தைப் பூஜிக்க வேண்டும். இவ்வாறே யதிகள், ஸன்யாசிகள் உணவு உண்ண வேண்டும்" என்று சொல்கிறது சாஸ்த்ரம். அவ்வாறே யதிதர்மத்தைக் கடைபிடித்த நம் ராமானுஜனைக் கண்டாள் ஒரு பெண். அந்த பெண்ணின் பெயர் சுமதி என்பதாகும். அவள் மேல் நாட்டிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்தவள். கொங்கு தேசத்தில் (தற்பொழுது கோயம்புத்தூர்) கொள்ளைக்களம் என்றும் அக்ரஹாரத்தில் இருந்து தன்னுடைய கணவருடன் வந்திருந்தாள்.

அப்பொழுது அந்த தேசத்திலே மழை இல்லாமல் மிகவும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு இருந்தபடியால், அவர்கள் குடும்பத்துடன் ஒரு வீட்டின் மாடியிலே வசித்துவந்தனர். தினமும் மாடியின் மேலிருந்து பிட்சை எடுக்கும் ஸ்வாமி பாஷ்யகாரரை பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வூரிலே இருக்கும் அகளங்கள் என்னும் அரசன் முதல் மற்றைய அனைவரும் ஸ்வாமிக்கு (அவருக்கு) தாஸ்யர்களாக ஆனார்கள் என்றால் என்னவாக இருக்கும், இவரிடம் என்ன கிடைக்கும் என்று ஆஸ்ரயிக்கிறார்கள் என்று பல நாள் பலவாறாக யோசித்துவந்தாள்.

ஒரு நாள் பகலில் பிட்சை எடுக்க ஸ்வாமி எழுந்தருளும் பொழுது, சட்டென்று மச்சிலிருந்து இறங்கி ஸ்வாமியை கை நீட்டி குறுக்காக மறித்து வழியைத் தடுத்தாள். அம்மணி தாங்கள் இவ்வாறு செய்யக் காரணம் என்ன என்றார் ஸ்வாமி. சுமதியும் ஸ்வாமி, அடியேன் தேவரீரிடம் ஒரு சந்தேகம் கேட்க வந்துள்ளேன் என்றாள். அதை தேவரீர் தெளிவுபடுத்த வேண்டும். ஆகையாலே வழி மறித்தேன் என்றாள். அப்படியாகில் என்ன என்று சொல்வாயாக என்று உரைத்தார் ஸ்வாமி.

"ஸ்வாமி, தினமும் மாதூகரம் (பிட்சை) பண்ணிக் காலம் நடத்தும் ஒருவருக்கு ப்ரம்மா இந்திரன் முதலியவர்களுக்குக்கூட உண்டாகாத மாட்சிமை தேவரீருக்கு உண்டாயிற்று. அரசன் தொடங்கி ஸர்வ சாஸ்திரங்களை அறிந்த முதன்மையான பண்டிதர்களும், மற்றுமுள்ள பெரியோரும், சிறியோரும் பல சார்பினரும் அடங்கி ஒடுங்கி அடிக் கீழ் அமர்ந்து காத்திருப்பதை

ஆளவந்தார்

அதிசயமாகப் பார்க்கிறேன். அதனுடைய காரணத்தை திருவாய்மலர்ந்தருள வேண்டுகிறேன்'' என்றாள்.

ஸ்வாமியும், "அம்மணி, அரசனேயாகிலும் அலர்மாமகள் கேள்வனாகிலும், அகில தேவர்களாகினும் பகவத் விஷயமான நல்வார்த்தைகள் ஆயிரங்களில் ஒரு வார்த்தையை உள்ளதை உள்ளபடி சொல்லி, உணர்த்தி, உரைக்குங்கால், செவிசாய்த்து முடிவணங்கி தொழா நிற்பரோ'' என்றார். அவளும் அப்படியென்றால் அடியேனுக்கும் அவ்வருமறையின் பொருளை உணர்ந்து வாழ அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்று இறைஞ்சினாள். அவ்வாறு ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்த அவ்வம்மையை முடி பிடித்து எழுப்பி நம்முடைய மடத்திற்கு வாரும் என்று அருளிச் செய்தார்.

மறுநாள் வைகறையில் எடுத்து அவ்வம்மையார் துரிதமாக மடத்திற்கு எழுந்தருள, ஸ்வாமியும் அவ்வம்மைக்கு "பஞ்சஸம்ஸ்காரம்'' (தாபம் - சங்கு சக்கரத்தை தோளிலே தரித்தல்; நாமம் - தாஸ்ய நாமம் வைத்தல்; புண்ட்ரம் - திருமண ஸ்ரீசூர்ணத்தை தரித்தல்; மந்த்ரோபதேசம் தரித்தல்; ஆச்ரயித்தல் என்பதே பஞ்ச ஸம்ஸ்காரம்) செய்வித்து "கொங்கு பிராட்டி'' என்னும் தாஸ்ய நாமத்தை இட்டார். அவ்வம்மையும்ம் எம்பெருமானுடைய திருவடியையே தியானித்துவந்தாள்.

ஏன் "கொங்குப் பிராட்டி'' என்னும் பெயர் பெற்றாள் என்றால் "கொங்கர் கோன் குலசேகரன் என்று பெயர் பெற்ற குலசேகர ஆழ்வார் அவதரித்த தேசத்திலிருந்து நீர் வந்தமையால் அதையொட்டி உமக்கு கொங்கு பிராட்டி என்று தாஸ்ய நாமம் சாற்றினோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினாராம் ஸ்வாமி பாஷ்யகாரர்.

அதன் பின்னர் மேல்நாட்டில் கொங்கு தேசத்தில் நல்ல மழை பெய்து வறட்சி நீங்கிய செய்தி வந்ததும் அவள் தன்னுடைய கணவருடன் ஊருக்குப் போக வேண்டிய சமயம் வந்தது. இவளும் கணவருடன் சென்றால் ஆச்சாரியனைப் பிரிந்திருக்க வேண்டுமே என்று கவலையுடன் இருக்க, எதேச்சையாக ஸ்வாமி அங்கே எழுந்தருளினார்.

அவரிடம், "ஸ்வாமி, அடியேன் என்னுடைய அகமுடையானோடு நாடேறப் போகிறேன். இனி தேவரீரை நித்யம் சேவிக்க நாடேறப் போகின்றேன். இனி தேவரீரை நித்யம் சேவிக்கக்கூடிய பாக்கியம் கிடைக்கும்படியாக ஏதேனும் ஓர் அடையாளம் ப்ரஸாதிக்க வேண்டும். அதோடு மீண்டும் ஒருமுறை மந்த்ரோபதேசமும் செய்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தாள்.

ஸ்வாமியும் தன் அடையாளமாக, "மறவடியைத் தம்பிக்கு வாண்பணயம் வைத்துப் போய்'' என்று சக்ரவர்த்தித் திருமகள் பரதாழ்வானுக்கு பாதுகையைப் ப்ரஸாதித்தது போன்று தன்னுடைய திருவடிநிலையைக் கொடுத்து, குரு பரம்பராபூர்வமாக உபதேசத்தையும் செய்து அனுக்கிரகம் செய்தார். அவரும் மிகவும் சந்தோஷத்துடன் பெரும் வீடு பெற்றாற்போலே உவகையுடன் அகமுடையானோடு நாடேறினாள்.

Koviloor Digital Library

ஸ்ரீ பூங்கோவல் நாச்சியார் - தேஹளீசன் (திருக்கோவிலூர்)

Koviloor Digital Library

தி.இ. கிருஷ்ண தேசிகாசார்

கொங்குப் பிராட்டி பெரிய வீடு பெற்ற பேறு

ராமானுஜரிடம் காட்டிய அளவற்ற பக்தியால் ஒரு பெண்மணிக்குக் கிடைத்த வரம்.

ராமானுஜர், கத்யத்ரயமும், நித்யம் என்னும் திருவாராதனப் படியையும் அருளிச்செய்தவர். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்று அறுதியிட்டு உரைத்தவர். தரிசன ஸ்தாபகராக எழுந்தருளிய அவர், கோயில் கைங்கர்யங்களிலே பல செம்மைகளைச் செய்து சீர்திருத்தங்கள் செய்ததைச் சகியாத சிலர் கோபம் கொண்டிருந்தனர். எப்படியாவது எம்பெருமானாரை முடிக்க வழி தேடினர்.

அன்னத்தில் விஷம்

எம்பெருமானார் மாதூகரம் பண்ணும் இடத்தில் அன்னத்தில் விஷமிட்டுச் சேர்க்க வழி செய்தனர். அந்த வைஷ்ணவன் தன்னுடைய பத்தினியிடம் இந்த அன்னத்தை நீ ராமானுஜருக்கு அளிக்க வேண்டும் என்று நிர்பந்தித்தார். அந்தப் பெண்மணியும் செய்வதறியாது கண்களில் கண்ணீர் தளும்ப, தயக்கமான நடையோடே பிட்சை இட்டாள். பின்னர் திரும்பிச் சென்றவள் மீண்டும் வந்து பாஷ்யகாரரைச் சேவித்துவிட்டுச் சென்றாள். இதைக் கண்ட ராமானுஜர் ஏதோ ஒரு அறிகுறியைக் காட்டினாள் என்பதை அறிந்தார்.

கண்களிலே கலக்கம், நடையிலே தயக்கம், ஏற்கனவே பிட்சைப் பாத்திரத்தில் இருந்த உணவோடு சேராமல் தனியாக இருக்கும்படி பிட்சையிட்டது. மேலும் கோபித்தது, (நமஸ்காரம் செய்தது) சன்யாஸிக்கு பிட்சையிட்டுவிட்டு சேவிக்கக் கூடாது. அப்படி சேவித்து விட்டால் அன்று அந்த சன்னியாசி உபவாசம் இருக்க வேண்டும் என்பது சாஸ்த்ரம். இந்த அறிகுறிகளை அறிந்த ஸ்ர்வக்ஞரான எம்பெருமானார் அன்னத்தில் ஏதோ இருக்கிறது என்பதை அறிந்து நேராக திருக்காவேரிக்குச் சென்று அன்னத்தை நீரிலே கரைத்துவிட்டு மரத்தின் அடியிலே அமர்ந்தார். அப்பொழுது ஒரு காகம் கரையிலே சிதறி இருந்த ஒரு சில பருக்கைகளைச் சாப்பிட, தலை சுற்றி விழுந்து இறந்தது. இதைக் கண்ட ஸ்வாமி மிகவும் சோகத்தோடே சில நாட்கள் உபவாஸத்துடன் இருந்துவிட்டார்.

ராமானுஜர் என்று ஒரு மஹத் ஆசார்யர் உள்ளார். அவர் கையொப்பம் இட்டால் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் உள்ள அனைவரும் ஒப்புக்கொண்டதாக அர்த்தம்.

கிருமி கண்ட சோழன்

இவ்வாறு இளையாழ்வாரான ராமானுஜருக்குப் பல விதங்களில் இடையூறுகள், கஷ்டங்கள் ஏற்பட்டன. அவ்வாறாக ஏற்பட்ட கஷ்டத்தில் ஒன்றுதான் "கிருமிகண்ட சோழனின்" அரசாணையார் திருவரங்கத்தில் ரங்கநாதனை சேவிக்கச் சென்றாலும் கோயிலின் வாயிலில் இருக்கும் ஓலையில்

Koviloor Digital Library



ஸ்ரீசெங்கமலவல்லி - ஸ்ரீஆமருவியப்பன் (திருவழுந்தூர்)

"சிவாத்பரதரம் நாஸ்தி" என்பதின் கீழே கையப்பம் இட்டால்தான் சேவிக்க முடியும் என்று அரசாணை இட்டனர். மேலும் தன்னுடைய ராஜ்யத்தில் இருக்கும் அனைவரும் சைவ மதத்தையே பின்பற்ற வேண்டும். வைணவர்கள் மற்றையோர்கள், "சிவனைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை" என்னும் ஓலையில் கையெழுத்திட வேண்டும் என்றும் அப்படி இல்லை என்றால் அவர்களைத் தண்டிப்பது என்றும் ஆட்சி செய்து கொண்டு இருந்தான்.

நாலூரான் தந்திரம்

அவன் சபையிலே நாலூரான் என்று ஒரு மந்திரி. அவன் சொன்னான் "இராமானுஜர் என்று ஒரு மஹத் ஆசார்யர் உள்ளார். அவர் கையொப்பம் இட்டால் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் உள்ள அனைவரும் ஒப்புக்கொண்டதாக அர்த்தம் என்று சொல்ல, ராமானுஜரை அரசவைக்கு அழைத்து வர மன்னன் ஆணையிட்டான். இதையறிந்து கூரத்தாழ்வான் எம்பெருமானாரின் உடைகளைத் தரித்து தானே ராமானுஜன் என்று அரசவைக்குச் சென்றுவிட்டார். மற்றைய ஸ்ரீவைஷ்ணவர்களும் எம்பெருமானாரும் பிரார்த்தித்து அவருக்கு வெள்ளை சாத்தி (வெண்மையான உடை) அரசன் கண்களிலிருந்து தப்புவித்தனர்.

பாரத யாத்திரை

எம்பெருமானார் மேலநாட்டு சஞ்சாரம் (மேல்கோட்டை) செய்த சமயம். ஒவ்வொரு பிரதேசமாய் தாண்டித் தாண்டிப் பல கஷ்டங்களை அனுபவித்து முதலிகளும் எம்பெருமானாரும் அடியார்களும் பிரயாணம் செய்தார்கள். "நாட்டிற்கு பொல்லான் நமக்கு நல்லான்" என்று பெயர் பெற்ற வேடமுதலிகள் நல்லான் சக்கரவர்த்தி வம்சத்தினருக்கு அனுக்கிரகம் செய்து, மேற்கே பிரயாணம் செய்துகொண்டிருந்தனர்.

பகலெல்லாம் சஞ்சரித்து அஸ்தமித்து இருக்கும் சமயம் வரை இவர்கள் பட்டினி கிடப்பதைப் பார்த்து வேடமுதலிகள், இங்கே கொள்ளைக்களம் என்றொரு அக்ரஹாரம் இருக்கின்றது. அங்கே கட்டளைவாரி என்னும் ஒரு அந்தணன் வீடு உள்ளது. அங்கே எல்லோரும் அமுது செய்யலாம் என்று கூறி அந்த அக்ரஹாரத்திற்கு அழைத்து வந்தனர். அந்த இல்லத்தில் இருக்கும் அகமுடையாள் இவர்கள் எல்லோரையும் தெண்டனிட்டு அடியேனுடைய இல்லத்தில் அமுது செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தாள் ஆனால் முதலியாண்டான் வேண்டாம் என்றார். அந்தப் பெண்மணி அடியேனும் ஆச்சார்ய சம்பந்தம் உள்ளவள்தான். அடியேனுடைய ஆச்சார்யர் இராமானுஜ முனியே என்றாள்.

முதலிகளும் ஆச்சரியப்பட்டு அது எப்படி என்று கேட்க, தன்னுடைய முன் கதையைச் சொல்லி, அடியேனுடைய இல்லத்தில் ராமானுஜ பாதுகைக்கே பூஜை என்பதாகச் சொன்னாள். முதலிகளும் சரி என்று சொல்ல அந்த கொங்கு பிராட்டியும் நியமங்களின்படி அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் அமுதளிக்கத் தயார் செய்தாள். அவள் எப்படி அமுது செய்கிறாள் என்று பார்க்கும்படி முதலிகள் ஒருவரை அனுப்பினார்.

எல்லாம் முடிந்தது.

ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்ய கர்ம அநுஷ்டானத்தை எல்லாம் முடித்தார்கள். பகவதாராதனம் செய்தார்கள். எம்பெருமானாரைத் தொழுதார்கள். போஜனம் செய்ய புறப்பட்டார்கள். முதலிகள் அமுது செய்த முறையை அறிந்து சொல்ல அனுப்பிய ஸ்ரீவைஷ்ணவரிடம் கேட்டார்.

"எல்லாம் நம்முடைய அனுஷ்டானத்திற்குச் சிறிதும் மாறுபடாமல் நடந்தேறியது. ஆனால் அந்த அம்மையார் கருப்பாக ஏதோ ஒன்றை போகைஞ்செய்த அனைத்திற்கும் நிவேதனம் செய்தார். பார்த்தால் அது சாளக்கராமம் போன்றும் இல்லை, விக்ரகம் போன்றும் இல்லை. அதுவே எனக்கு சந்தேகம்" என்றார்.

முதலிகளும் கொங்கு பிராட்டியை அழைத்து, "நீர் இந்த போகைத்தை யாருக்கு அமுது செய்வித்தீர்?' என்று கேட்டார். கொங்கு பிராட்டியும் அடியேனுடைய ஆசார்யர் "இராமனுஜபாதுகைக்கு அமுது செய்வித்தேன்" என்றார். "அப்படியானால் அதை இங்கே கொண்டு வாரும்" என்றார். கொங்கு பிராட்டியும் இராமானுஜ பாதுகையைக் காண்பிக்க, முதலிகள் தன் ஆசார்யர் எம்பெருமானாருடைய திருவடியைப் போன்று இருப்பதைக் கண்டு சந்தோஷம் அடைந்தார்.

பின்னர் முதலிகள் கொங்கு பிராட்டியிடம் இங்கே இந்த திருவடியை ஒத்து யாராவது இருக்கிறார்களா என்று கேட்க, கொங்கு பிராட்டியும் கைவிளக்கேந்தி ஒவ்வொருடைய திருவடியையும் பார்த்துக்கொண்டு வந்து, பாஷ்யக்காரரின் திருவடி அருகில் வந்தபொழுது இதுவே, இந்தத் திருவடியே அந்தப் பாதுகை என்றாள்.

மேலும் அந்த ஸ்ரீவைஷ்ணவரைப் பார்த்து, "இவருடைய அடியகுழ, கிடையழகு, வயிறழகு, உந்தியழகு, மார்பழகு, மெய்நூலழகு, தோளழகு, கையழகு, ஏந்திய முக்கோலழகு, கண்டத்தழகு, வாயழகு, கண்ணழகு, காதழகு, மூக்கழகு, புருவத்தழகு, திருநெற்றியழகு, சிகையழகு, இவையெல்லாம் நமது ஆசார்யர் போன்றே உள்ளது. ஆசார்யருக்கு காஷாய வஸ்த்ரம் (சிகப்பு). ஆனால் இவரோ வெண்மையான வஸ்திரத்தை அணிந்திருக்கிறார்" என்று சொன்னாள். உடையவரும் அந்தப் பாதுகைகளின் மேலே ஏறி நின்று "யானே உடையவன்" என்றார்.

உடையவரின் திருப்பாதத்திலே விழுந்து, எழுந்து கண்ணீர் மல்க நிற்க, உடையவரும் நாம் ஓதிய மந்திரங்களை அனுஸந்தானம் செய்வாயாக என்று சொல்ல, கொங்கு பிராட்டியும் முதன் முதலில் எவ்வாறு உடையவரால் உபதேசம் செய்யப்பட்டதோ, அதை அப்படியே அநுஸந்தானம் செய்தாள்.

மறுநாள் உடையவர் முதலிகள் புடைசூழ சஞ்சாரம் மேற்கொண்டு ராமானுஜ தரிசனத்தைத் தந்தார். கொங்கு பிராட்டியும் இருப்பிடம், வைகுந்தம், வேங்கடம், மாலிருஞ்சோலை எல்லாம் மாயன் இராமானுஜன் என்றே எண்ணி பெரிய வீடு பெற்றாள்.

Koviloor Digital Library

ஸ்ரீ ஆதிநாதவல்லி - ஸ்ரீ பொலிந்து நின்றபிரான் (திருக்குருகூர்)

Koviloor Digital Library

என்.ராஜேஸ்வரி நேர்காணல்: எம்பார் ஜீயர்

உய்வுக்கு ஒரே வழி உடையவர் திருவடி

நாடெங்கும் ஸ்ரீ வைஷ்ணவ நெறி தழைக்கும்படி ஞான நல்வித்து ஊன்றியது; வெளிப்படையாக ஸ்ரீவைஷ்ணவ பிரச்சாரப் பணியைச் செய்ய இயலாத சூழ்நிலை நாட்டில் நிலவியது; அதனால் ஓர் ஆண் வழியாக (ஒவ்வொருவராகத் தகுதி பார்த்து) உபதேசித்தது என்று பல அம்சங்கள் உள்ளன. அமைதியாக ஸ்ரீவைஷ்ணவத்தை எப்படிப் பரப்புவது என்று திண்ணமாக எண்ணமிட்டவர் ராமானுஜர்.

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள எம்பார் ஜீயர் சுவாமி மடத்தின், தற்போதைய ஜீயர் சுவாமிகளான ஸ்ரீபெரும்புதூர் அப்பன் பரகால ராமானுஜர் எம்பார் ஜீயர் சுவாமி என்று அழைக்கப்படும் ஸ்ரீ உ.வே. குமாரவாடி சே.ராமானுஜாசார்யர், நேர்காணலின்பொழுது, ராமானுஜர் குறித்து பல அரிய தகவல்களை அளித்தார். ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் ராமானுஜர் வகுத்த சீர்திருத்தங்கள் அனைத்தும் ஸ்ரீபெரும்புதூர் திருக்கோயிலில் கடைபிடிக்கப்படுகிறது என்ற அவர் அத்திரிதண்டி மகானைப் பற்றி மேலும் தாம் எழுதிய 'பகவத் ராமாநுஜர்' என்ற நூலில் இருந்து எடுத்துக்காட்டிக் கூறினார்.

திருவரங்கம் பெரிய கோயிலைப் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியில் முனைந்தார் உடையவர். மடப்பள்ளியில் காலம் தவறாது தளிகைகளைத் தயாரித்து, அமுது செய்வித்து விநியோகிக்கப் பல ஏற்பாடுகள் செய்தார். சந்நிதி வருவாய் பெருகும் வகையில் கிரய தளிகைகளும் தயாராயின.

● முக்கோல் பிடித்த முனி, திரிதண்டி ராமானுஜர் குறித்துக் கூறுங்களேன்?

பரமாச்சார்யர் ஆளவந்தார் இல்லறம் நடத்தி, பின் துறவியாகிப் புகழுடன் விளங்கியவர். அவரது வரலாறு ராமானுஜரின் நினைவில் பல்வேறு காட்சிகளைச் சித்தரித்தன.

நாதமுனிகள் நம்மாழ்வாரிடம் இருந்து மறைந்து கிடந்த நாலாயிர திவ்யப்பிரபந்தங்களைப் பெற்று அவற்றைத் தொகுத்து, இசையமைத்தது; வேதம் தமிழ் செய்த மாறனிடம் மந்திர உபதேசம் பெற்றது; தாம் அறிந்த யோக ரகசியங்களைத் தமது குமாரர் ஈஸ்வர பட்டர், சிஷ்யர் உய்யக்கொண்டார், அவரது சிஷ்யர் மணக்கால் நம்பி வழியாகத் தமது பேரன் ஆளவந்தாருக்கு எட்ட நாதமுனிகள் வழிவகுத்தது; பிறகு ஆளவந்தார் பாட்டனார் நாதமுனியின் விருப்பப்படி வாழ்க்கை நடத்தி நாடெங்கும் ஸ்ரீ வைஷ்ணவ நெறி தழைக்கும்படி ஞான நல்வித்து ஊன்றியது; வெளிப்படையாக ஸ்ரீவைஷ்ணவ பிரச்சாரப் பணியைச் செய்ய இயலாத சூழ்நிலை நாட்டில் நிலவியது; அதனால் ஓர் ஆண் வழியாக (ஒவ்வொருவராக தகுதி பார்த்து) உபதேசித்தது என்று பல அம்சங்கள் உள்ளன. அமைதியாக ஸ்ரீவைஷ்ணவத்தை எப்படிப் பரப்புவது என்று திண்ணமாக எண்ணமிட்டவர் ராமானுஜர்.

Koviloor Digital Library



ஸ்ரீபெரும்புதூர் அப்பன் பரகால ராமானுஜர் எம்பார் ஜீயர் சுவாமி என்று அழைக்கப்படும்
ஸ்ரீ உ.வே. குமாரவாடி சே.ராமானுஜாசார்யார்

Koviloor Digital Library

ஸ்ரீ பங்கயச்செல்வி - ஸ்ரீ புண்டரீகாக்ஷன் (திருவெள்ளறை)

ராமானுஜர் எழுதியவற்றுள் வேதாந்த சங்கிரகம் என்ற நூல் உபநிடத தத்துவங்களை விவரித்துச் சொல்கிறது. வேதாந்த சாரம் மற்றும் வேதாந்த தீபம் ஆகியவை பிரம்ம சூத்திரத்தின் சுருக்கமான உரைகளைக் கொண்டது. கீதா பாஷ்யம் என்ற பகவத் கீதைக்கு விசிஷ்டாத்து வைதத்தை யொட்டி அவர் உரை எழுதி உள்ளார். அன்றாட வைதீகச் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் குறித்து விளக்குகிறது நித்யக் கிரந்தம்.

• ராமானுஜர் விரும்பிய ஆச்சார்யர்கள் யார்?

ராமானுஜரின் பஞ்ச ஆச்சார்யர்கள் ஆளவந்தாரின் சிஷ்யர்களே. முக்கோல் பகவரான ஆளவந்தார் நாடெங்கும் நல்லவர்களைத் தேடி ஞான நல்வித்துக்களை ஊன்றி வைத்திருந்தது ராமானுஜர் கவனத்தைக் கவர்ந்தது. ஆளவந்தாரின் சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, திருமாலை, திருவரங்கப் பெருமாள் அரையர் ஆகிய இவர்களிடம் தமது ஞானப் பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொடுத்திருந்தார். அவர்களிடம் ராமானுஜரின் நெஞ்சம் சென்றது.

• ராமானுஜரின் சிஷ்யர் குழாம் எப்படிப்பட்டது?

யதிராஜர் ஸ்ரீவைஷ்ணவ சம்ராஜ்யப் பணியை இனிது தொடங்கினார். அப்போது அவரது வயது 35 (1052). முதலில் அவர் நினைவில் நின்றவர் கோவிந்தபட்டர். யாதவரிடம் இருந்து தம் உயிரைக் காத்துக் கொடுத்த அந்த ஆத்மாவை வைஷ்ணவத்தின்பால் திருப்ப வேண்டும் என்பதை முதற் பணியாகக் கொண்டார்.

அடுத்து ராமானுஜரின் நினைவுக்கு வந்தவர் பூமி, கமலா என்னும் அவரது இரு உடன்பிறப்புகளில் பூமியின் பிள்ளை தாசரதி என்னும் முதலியாண்டான். அவர் சிறந்த வைணவ குலத்தோன்றல். சர்வத்தையும் துறந்தபோது யதிராஜர் அவரை மட்டும் துறக்கவில்லை. முதலியாண்டானும், ராமானுஜரின் நிழலும் அடிதாறும் போல அவரைத் தொடர்ந்தார். யதிராஜரும் அவரைத் தம் திரிதண்டமாகவே (முக்கோல்) கருதினார்.

மூன்றாவதாக கூரத்தாழ்வான். ராமானுஜரைக் காட்டிலும் வயதிலும், ஞானத்திலும் ஏன் சீலத்திலும் விஞ்சி நின்ற கூரேசர், தம் சிஷ்யருள் தலைசிறந்தவர் என்றே யதிராஜரால் மதிக்கப் பெற்றவர்.

• குருவை விஞ்சியவர் யதிராஜர் என்கிறார்களே?

யதிராஜர் தம் திருமேனியில் பன்னிரு திருநாமங்கள் திகழ, முதலியாண்டான் ஒருபுறம், கூரத்து ஆழ்வான் மறுபுறம் இருக்க மடத்தில் வந்தவர்களுக்கு அறிவுரை வழங்கும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. 'துரோணாசாரியாருக்கு ஏகலைவன் போல், ஆளவந்தாருக்குத் தான்' என்று தம்மைச் சொல்லிக்கொண்டார் யதிராஜர். ஆனால் யதிராஜரை சேவித்தோர், அவர் மொழி கேட்டோர் ஆளவந்தாரிலும் மிக்கவரே இவர் என்று புளகாங்கிதம் அடைந்தனர்.

• யதிராஜர், உடையவரானது எப்போது?

முதலியாண்டானும் ஆழ்வானும் புடைசூழ, ராமானுஜர் ஸ்ரீரங்கம் புறப்பட்டார். திருக்கச்சிநம்பியிடம்

Koviloor Digital Library

> ‘துரோணாசாரியாருக்கு ஏகலைவன் போல், ஆளவந்தாருக்குத் தான்’ என்று தம்மைச் சொல்லிக்கொண்டார் யதிராஜர்.

கண்ணீர் சொரிந்து விடை கொண்டார் யதிராஜர். அரையரைப் பின் தொடர்ந்து ஸ்ரீரங்கம் சேர்ந்தார்.

யதிராஜர் வரவு கேட்டு, வடத்திருக்காவேரி வரை அரங்கன் சந்நிதி மரியாதைகளுடன் வந்து பெரிய நம்பி தலைமையில் உற்சாகமான வரவேற்பளித்தனர் ஸ்ரீரங்கவாசிகள்.

ஸ்ரீரங்கத்தில் பட்டணப் பிரவேசமானதும் முறைப் படி அரங்கனை அணுகித் திருவடி தொழுதார் யதிராஜர். “வாரீர் எம் உடையவரே” என்று அருளிப் பாடிட்டு அழைத்தார் அரங்கன். “இனி உபய விபூதி ஐஸ்வர் யமும் நீர் இட்ட வழக்காயிருக்கும்” என்றும் விளக்கி அருளினன் அரவணைப்பள்ளியான். தம்முடைய செங்கோலை அவர் கையில் கொடுத்து நீர் இனி உபய உலகுக்கும் உடையவர்” என்றருளினார்.

• ராமானுஜர், தென்னரங்கன் செல்வத்தை வளப்படுத்திய பாங்கு எப்படி இருந்தது?

திருவரங்கம் பெரிய கோயிலைப் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியில் முனைந்தார் உடையவர். மடப் பள்ளியில்காலம்தவறாதுதளிகைகளைத்தயாரித்து,அமுது செய்வித்து விநியோகிக்கப் பல ஏற்பாடுகள் செய்தார். சந்நிதி வருவாய் பெருகும் வகையில் கிரய தளிகைகளும் தயாராயின. மண் டபங்கள், நந்தவனங்கள், மலர்ச் சோலைகள், மருத்துவச் சாலைகள், நூல் நிலையங்கள் அனைத்துக்கும் அரங்கன் திருமுற்றத்தில் இடம் கொடுத்து சீராக நடத்த வழி வகுத்தார்.

ஸ்ரீராமானுஜர் யதிராஜராகி, ஸ்ரீரங்கம் சேர்ந்து உடையவராகி, அங்கு தென்னரங்கன் செல்வத்தைத் திருத்தி வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதைக் கேள்வியுற்ற பக்தர்கள், அரங்கனின் சொத்தான தங்களையும் திருத்திப் பணிகொள்ள வேண்டும் என்று பாரித்துக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஸ்ரீரங்கத்தில் உடையவரின் திருவடிகளில் பெருந்திரளாகக் கூடிய வண்ணம் இருந்தனர்.

• பக்தர்கள் திருக்கோயிலுக்கு அளித்த காணிக்கைகளில்கூடப் புனிதம் கண்டவர் ராமானுஜர்?

இதற்கு வண்டவில்லி, செண்டவில்லி வரலாறுதான் உதாரணம். அகளங்கள் என்னும் அரசனிடமே வில்லி யின் மருமக்கள் இருவரும் பணிபுரிந்துவந்தனர். வண்ட வில்லி, செண்டவில்லி என்று அவர்களுக்குப் பெயர்.

மாமனைத் தொடர்ந்து வண்டவில்லியும், செண்டவில்லியும் உடையவர் அடிபணிந்து பஞ்ச சமஸ்காரம் பெற்று அடியராயினர். அரசனிடம் அவ்வேடர்கள் பெற்று வந்த ஊதியம் அனைத்தையும் ஜீயர் திருவடிகளில் சமர்ப்பித்துவிடுவர். அரசுப் பணிகள் போக மீதி நேரங்களில் அடியார் பணிபுரிந்து மடத்துப் பிரசாதம் பெற்று தேக யாத்திரை நடத்தினர். உடையவரிடம் சேர்ந்த பின் அவரது நடை, உடை பேச்சு எல்லாம் ‘ஸாத்வீகமாக’ மாறி, அவர்களுக்கு தெய்வீகப் பொலிவு ஏற்பட்டது. இப்புனித மாறுதல்களைக் கண்ட அரசன் அகளங்கன், அது குறித்து விசாரித்தான். உடையவர் பெருமையை உணர்ந்தான். பரமபாகவதர்களாகிவிட்ட அவ்வேடர்களைத் தன் பணியில் ஈடுபடுத்தாமல் அவர்கள் பெற்றுவந்த ஊதியத்தை மட்டும் தவறாமல் அனுப்பினான். இதைப் பற்றி ஒரு சமயம் கேள்வியுற்ற உடையவர் ஊழியம் இல்லாமல் கிடைக்கும் அந்த ஊதியத்தை ஏற்க மறுத்துத் திருப்பியனுப்பிவிட்டார்.

• யதிராஜர், உடையவர் என்று எல்லாம் அழைக்கப்பட்ட ராமானுஜருக்கு திருப்பாவை ஜீயர் என்ற பெயர் வரக் காரணம் என்ன?

எம்பெருமானார் பெரிய பெருமாள் நியமனத்தால் உபய விபூதி செல்வத்துக்கும் உடையவர் என்ற சிறப்பு பெற்றிருந்தாலும் தாம் மேற்கொண்டிருந்த சந்நியாச ஆசிரமத்திற்குச் சேர, தினமும் ஏழு இல்லங்களுக்குச் சென்று பிக்ஷை எடுத்து அதைப் புசித்துப் பசியாற்றிவந்தார்.

அவ்வாறு வீதியில் செல்கையில் திருப்பாவை பாடிச் செல்வது ஜீயர் வழக்கம். அன்று பெரிய நம்பி திருமாளிகை வாயிலில் வரும்போது, “உந்து மதகளிற்றன்” என்னும் பாசுரத்தின் கடைசி வரிகளை அநுஸந்தித்துக்கொண்டே, அதன் பொருளில் ஆழ்ந்த வண்ணம் நின்றார்.

பந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாட
செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப

என்று அவர் கூறவும், அப்போதே தாளை உருவிக் கதவைத் திறந்து அத்துழாய் பிக்ஷையிடவும் சரியாயிருந்தது. ஜீயரோ தன் அகக்கண் காட்சிக்கு ஏற்ப, நப்பின்னைப் பிராட்டியே நேரில் வந்து கதவைத் திறப்பதாகக் கருதிவிட்டார். உடனே அத்துழாயின் பாதங்களில் விழுந்து தண்டனிட்டார்.

அத்துழாய் ஒன்றும் புரியாமல் ஜீயர் தன்னைத் தண்டனிட்டது கண்டு திடுக்கிட்டு, உள்ளே ஓடித் தகப் பனார் நம்பியிடம் நடந்ததைப் பரபரப்புடன் சொன்னாள்.

நம்பியும் நிதானமாக உந்து மதக் களிற்றன் அநுஸந்தித்தாரோ ஜீயர் என்று கேட்டு திருப்பாவையில் ஜீயர் ஆழ்ந்துவிட்ட அனுபவத்தைக் கண்டு வியந்தார். அன்று முதல் ராமானுஜருக்கு ‘திருப்பாவை ஜீயர்’ என்ற பெயரும் ஏற்பட்டது.

Koviloor Digital Library

திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம்

ராமானுஜர் ஊருக்குள் நுழையும் தருணத்தில், பெண் ஒருவர் அவ்வூரில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்தார். ஆச்சார்யர் அம்சங்கள் கொண்ட ராமானுஜரைக் கண்டதும் அப்பெண் ராமானுஜரை வணங்கினார்.

திருக்குறுங்குடி என்ற திவ்ய தேசத்தில் நம்மாழ்வார் தோன்றினார். 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றுதல் தோன்றாமை நன்று' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப, பிறக்கும்போதே சடம் என்ற ஊழ்வினைச் செறிந்த காற்றை கோபமாக முறைத்ததால் சடகோபன் எனப்பட்டார். இத்திருக்குருகூருக்கு அருகில் உள்ளது திருக்கோளூர். இத்திருத்தலத்தில் தோன்றியவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வாரை குருவாகக் கொண்டவர். இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமாள், வைத்தமாநிதி பெருமாள். இப்பெருமாளை தரிசிக்க வந்தார் ராமானுஜர். இங்குதான் பெண்பிள்ளை ரகசியம் வெளிப்பட்டது. அதற்குக் காரணமானார் ராமானுஜர்.

ராமானுஜர் ஊருக்குள் நுழையும் தருணத்தில், பெண் ஒருவர் அவ்வூரில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்தார். ஆச்சார்யர் அம்சங்கள் கொண்ட ராமானுஜரைக் கண்டதும் அப்பெண் ராமானுஜரை வணங்கினார். அப்போது அவர் "நான் வரும் நேரம் பார்த்து ஊரை விட்டு வெளியேறுகிறீர்களே, இதன் நோக்கம் என்ன? 'புகத் தகும் ஊர்' என ஆழ்வாரால் புகழப்பட்ட ஊர் ஆயிற்றே திருக்கோளூர்" என்று கேட்டார்.

"தங்களை அவமதிக்கும் நோக்கம் எதுவும் இல்லை. காலந்தோறும் தோன்றிய மகான்கள், திருமாலுக்கு தாசம் செய்த எதனையும் நான் செய்யவில்லையே. அதனால் இத்திருக்கோளூரில் தங்குவதற்கு தான் தகுதியற்றவள்" என்ற அவர் தொடர்ந்து அந்த அரிய நிகழ்ச்சிகளைப் பட்டியலிடத் தொடங்கினார். குறுகத் தரித்தது குறள் என்பார்கள். ஜப்பானிய பாணி கவிதைகள், ஹைகூ கவிதைகள் மூன்று வரிகள் கொண்டவை. இவை அனைத்தையும் விட சிறியதாக சில சொற்களை மட்டுமே கொண்டு இரண்டு வரிகளில் கேள்விகள் போன்ற தோன்றத்தில் மிகப் பெரிய நிகழ்வுகளைச் சுட்டுகிறாள் அப்பெண்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் மகாபாரதம், ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஆழ்வார்களின் அருளிச் செயல் உட்பட அவர்களது அவதார வரலாறுகளை உட்கருத்தாய் கொண்டவை. 81 குறிப்புகள் கொண்ட, இரு வரி வினாக் கவிதைகளை ஒருவர் அறிந்தால் வைணவ சித்தாந்தங்களை

அப்பெண் கூறியவற்றை திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம் என்று போற்றுகின்றனர் வைணவப் பெரியோர்கள்.

Koviloor Digital Library

ஸ்ரீபெரும்புதூர் உடையவர்

Koviloor Digital Library

ஸ்ரீ புண்டரீகவல்லி - ஸ்ரீ கோவிந்தராஜன் (திருச்சித்ரகூடம்)

முழுவதுமாக அறிந்தவர் ஆகிவிடுவார். இவரது அடக்கத்தையும், ஆன்மிக அறிவையும் கண்ட ராமானுஜர், அவருக்கு வைத்தமாநிதி பெருமாளை தரிசனம் செய்துவித்தார். பின்னர் அப்பெண் இல்லத்தில் அமுதுண்டார் ராமானுஜர். அப்பெண் கூறியவற்றை திருக்கோளூர் பெண் பிள்ளை ரகசியம் என்று போற்றுகின்றனர் வைணவப் பெரியோர்கள். சிலவற்றை விளக்கமாகவும், மீதமுள்ள வற்றைக் குறிப்புகளாகவும் காணலாம்.

1. அழைத்து வருகிறேன் என்றனோ
   அக்ரூரரைப் போலே!
2. அகமொழித்து விட்டேனோ
   விதுரரைப் போலே!
3. தேகத்தை விட்டேனோ ரிஷி
   பத்தினியைப் போலே!
4. தசமுகனைச் செற்றேனோ
   பிராட்டியைப் போலே!
5. பிணமெழுப்பி விட்டேனோ
   தொண்டைமானைப் போலே!
6. பிணவிருந்திட்டேனோ
   கண்டாகர்ணனைப் போலே!
7. தாய்கோலம் செய்தேனோ
   அனுசூயையைப் போலே!
8. தந்தை எங்கே என்றேனோ
   துருவனைப் போலே!
9. மூன்றெழுத்து சொன்னேனோ
   க்ஷத்ரபந்துவைப் போலே!
10. முதலடியைப் பெற்றேனோ
    அகலிகையைப் போலே!
11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ
    ஆண்டாளைப் போலே!
12. எம்பெருமான் என்றேனோ
    பட்டர்பிரானைப் போலே!
13. ஆராய்ந்து விட்டேனோ
    திருமழிசையார் போலே!
14. அவன் சிறியனென்றேனோ
    ஆழ்வாரைப் போலே!
15. ஏதேனும் என்றேனோ
    குலசேகரரைப் போலே!
16. யான் சத்யம் என்றேனோ
    ஆழ்வாரைப் போலே!
17. அடையாளம் சொன்னேனோ
    கபந்தனைப் போலே!
18. அந்தரங்கம் சொன்னேனோ
    திரிஜடையைப் போலே!
19. அவன் தெய்வம் என்றேனோ
    மண்டோதரியைப் போலே!
20. அஹம்வேத்மி என்றேனோ
    விஸ்வாமித்திரரைப் போலே!
21. தேவுமற்றறியேனோ
    மதுரகவியாரைப் போலே
22. தெய்வத்தைப் பெற்றேனோ
    தேவகியைப் போலே!
23. ஆழிமறை என்றேனோ
    வசுதேவரைப் போலே!

Koviloor Digital Library

ஸ்ரீ ரங்க நாயகி - ஸ்ரீ ரங்கநாதர் (ஸ்ரீ ரங்கம்)

Koviloor Digital Library



ஸ்ரீ ஆண்டாள் - ஸ்ரீரங்கமன்னார் (ஸ்ரீ வில்லி புத்தூர்)

24. ஆயனை(னாய்) வளர்த்தேனோ
யசோதையைப் போலே!
25. அநுயாத்திரை செய்தேனோ
அணிலங்களைப் போலே!
26. அவல் பொரியை ஈந்தேனோ
குசேலரைப் போலே!
27. ஆயுதங்கள் ஈந்தேனோ
அகஸ்தியரைப் போலே!
28. அந்தரங்கம் புக்கேனோ
சஞ்சயனைப் போலே!
29. கர்மத்தால் பெற்றேனோ
ஜநகரைப் போலே!
30. கடித்து அவனைக் கண்டேனோ
திருமங்கயாரைப் போலே!
31. குடை முதலானதானேனோ
ஆனந்தாழ்வான் போலே!
32. கொண்டு திரிந்தேனோ
திருவடியைப் போலே!
33. இளைப்பு விடாய் தீர்த்தேனோ
நம்பாடுவான் போலே!
34. இடைகழியில் கண்டேனோ
முதலாழ்வார்களைப் போலே!
35. இருமன்னரைப் பெற்றேனோ
வால்மீகரைப் போலே!
36. இருமாலை ஈந்தேனோ
தொண்டரடிப்பொடியார் போலே!
37. அவனுரைக்கப் பெற்றேனோ
திருக்கச்சியார் போலே!
38. அவன்மேனி ஆனேனோ
திருப்பாணரைப் போலே!
39. அனுப்பி வையுமென்றேனோ
வசிஷ்டரைப் போலே!
40. அடி வாங்கினேனோ
கொங்கில் பிராட்டியைப் போலே!
41. மண்பூவை இட்டேனோ
குரவ நம்பியைப் போலே!
42. மூலமென்றழைத்தேனோ
கஜராஜனைப் போலே!
43. பூசக் கொடுத்தேனோ
கூனியைப் போலே!
44. பூவைக் கொடுத்தேனோ
மாலாகாரரைப் போலே!
45. வைத்தவிடத்து இருந்தேனோ
பரதரைப் போலே!
46. வழி அடிமை செய்தேனோ
இலக்குவனனைப் போலே!
47. அக்கரைக்கே விட்டேனோ
குகப்பெருமாளைப் போலே!
48. அரக்கனுடன் பொருதேனோ
பெரியவுடையாரைப் போலே!
49. இக்கரைக்கே சென்றேனோ
விபீஷணனைப் போலே!
50. இனியதென்று வைத்தேனோ
சபரியைப் போலே!
51. இங்கும் உண்டென்றேனோ
பிரஹலாதனைப் போலே!

Koviloor Digital Library

52. இங்கில்லை என்றேனோ
ததிபாண்டனைப் போலே!
53. காட்டுக்குப் போனேனோ
பெருமாளைப் போலே!
54. கண்டுவந்தேன் என்றேனோ
திருவடியைப் போலே!
55. இருகையையும் விட்டேனோ
திரௌபதியைப் போலே!
56. இங்குபால் பொங்கும் என்றேனோ
வடுகனம்பியைப் போலே!
57. இருமிடறு பிடித்தேனோ
செல்வப்பிள்ளையைப் போலே!
58. நில்லென்று(உனைப்) பெற்றேனோ
இடையற்றூர்நம்பியைப் போலே!
59. நெடுந்தூரம் போனேனோ
நாதமுனியைப் போலே!
60. அவன் போனான் என்றேனோ
மாருதியாண்டான் போலே!
61. அவன் வேண்டாம் என்றேனோ
ஆழ்வானைப் போலே!
62. அத்வைதம் வென்றேனோ
எம்பெருமானாரைப் போலே!
63. அருளாழங் கண்டேனோ
நல்லானைப் போலே!
64. அனந்தபுரம் புக்கேனோ
ஆளவந்தாரைப் போலே!
65. ஆரியனைப் பிரிந்தேனோ
தெய்வவாரியாண்டானைப் போலே!
66. அந்தாதி சொன்னேனோ
அமுதனாரைப் போலே!
67. அனுகூலம் சொன்னேனோ
மால்யவானைப் போலே!
68. கள்வனிவன் என்றேனோ
லோககுருவைப் போலே!
69. கடலோசை என்றேனோ
பெரியநம்பியைப் போலே!
70. சுற்றிக்கிடந்தேனோ
திருமாலையாண்டான் போலே!
71. சூழுறவு கொண்டேனோ
திருக்கோட்டியூரார் போலே!
72. உயிராயப் பெற்றேனோ
ஊமையைப் போலே!
73. உடம்பை வெறுத்தேனோ
திருனறையூரார் போலே!
74. என்னைப்போல் என்றேனோ
உபரிசரனைப் போலே!
75. யான் சிறியன் என்றேனோ
திருமலைநம்பியைப் போலே!
76. நீரில் குதித்தேனோ
கணப்புரத்தாளைப் போலே!
77. நீரோருகம் கொண்டேனோ
காசிசிங்கனைப் போலே!
78. வாக்கினால் வென்றேனோ
பட்டரைப் போலே!
79. வாயிற் கையிட்டேனோ
எம்பாரைப் போலே!
80. தோள் காட்டி வந்தேனோ
பட்டரைப் போலே!
81. துறை வேறு செய்தேனோ
பகவரைப் போலே!

விரிவாகச் சில

அழைத்து வருகிறேன் என்றேனோ
அக்ரூரரைப் போலே!

கம்சன், தன்னைக் கொல்லப் பிறந்தவன் தேவகியின் மகன் கிருஷ்ணன் என்பதை அறிந்தவன். கிருஷ்ணனைக் கொல்லப் பலவாறாக முயற்சித்தும், முடியாமல் அக்ரூரரை அனுப்புகிறான் கண்ணனை அழைத்து வர. அக்ரூரரும் சென்று அழைத்து வந்ததால் கொடியவன் கம்சன் மாண்டான். கொடுங்கோலன் ஆட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்றினான் கண்ணன். தர்மம் வென்றது. இந்த அக்ரூரைப் போல் எனக்கு சாமர்த்தியம் இல்லையே என்கிறாள். மகாபாரதத்தின் அதிமுக்கியமான நிகழ்வு இது.

அகம் ஒழிந்து விட்டேனா
விதுரரைப் போலே!

பாண்டவர்களின் பங்கினைக் கொடுக்க மறுத்துவிட்டான் துரியோதனன். போரைத் தவிர்க்கத் தூது சென்றான் கண்ணன். கண்ணன் வந்தவுடன் தங்கள் இல்லத்தில்தான் கண்ணன் தங்குவான் என்று பீஷ்மர், துரோணர், விதுரர் ஆகியோர் எண்ணி இருந்தனர். திருவீதியில் நடந்து வந்தான் கண்ணன். மாட மாளிகைகள் இருந்த இடம் அது. யாருடைய மாளிகை என்று ஒவ்வொரு மாளிகையைக் கடக்கும்போதும் கண்ணன் கேட்க, தன்னுடையது என்று ஒவ்வொருவரும், தங்கள் பெயரையே கூறிக்கொண்டார்கள். விதுரர் இல்லம் வந்தது. யாருடையது என்று கண்ணன் கேட்கும் முன்னரே, உன்னுடையது கண்ணா என்றார் விதுரர். 'தான்' என்ற அகங்காரம் ஒழித்தவராக. இதனைக் குறிப்பிட்டு ராமானுஜரிடம், அவரைப் போல 'அகம்' ஒழிந்தவளாகத் தான் இல்லையே என்று கூறினார் திருக்கோளூர் பெண்பிள்ளை.

விட்டேனா ரிஷி
பத்தினியைப் போலே!

ஆயர்பாடிக் கண்ணன் அல்லவா. ஆடு, மாடுகளை மேய்ப்பதில் அலாதியான இன்பம் காண்பவன் கண்ணன். அவ்வாறு ஒரு நாள் மேய்ப்பதில் ஈடுபட்டான் கண்ணன். அவன் கூட வந்த கோபர் சிறுவர்கள் பசி என்றார்கள். இக்காட்டில் யாகம் செய்யும் அந்தணர்களிடம் சென்று தன் பெயரைக் கூறி உணவைக் கேட்டுப் பெற்றுவருமாறு சிறுவர்களைப் பணித்தான். ஆகுதிகள் எல்லாம் எவனை அடையுமோ, அவனே ஆள் அனுப்பியும் ரிஷிகள் மறுத்துவிட்டனர். ஆனால் ரிஷி பத்தினிகள், தத்தமது கணவன்மார்களுக்குத் தெரியாமல் உணவை எடுத்துச்

Koviloor Digital Library



ஸ்ரீ மட்டவிழுங்குழலி - ஸ்ரீ தாடாளன் (காழி சீராம விண்ணகரம்)

சென்று கண்ணனுக்கும், அவனது தோழர்களுக்கும் அளித்தனர். மாலை மயங்கியது. அவரவர்களும் இல்லம் நோக்கித் திரும்பிச் செல்ல வேண்டும். ரிஷி பத்தினிகள், அவரவர்தம் கணவர்மார்கள் என்ன தண்டிப்பார்களோ என்று பயந்தாலும் சமாளித்துக்கொள்ளலாம் என்று புறப்படத் தயாரானார்கள். ஆனால், அதில் ஒரு பெண் கண்ணனுக்காக உயிர் துறந்தாள். கண்ணனுக்கு உணவு அளிப்பதற்காக தன் இன்னுயிரையே மாய்த்துக்கொண்டவள் போலவா நான் இருக்கிறேன்? என்று தன்னை இழித்துக் கூறிக்கொண்டாள் அப்பெண்.

'ஆயனை வளர்த்தேனோ
யசோதையாரைப் போலே?'

குழந்தைக் கண்ணனை வளர்க்கும், யாருக்கும் கிடைக்காத வாய்ப்பினைப் பெற்றாள் யசோதை. பன்னிரெண்டு ஆண்டு காலம் அவனது லீலைகளை அம்மா என்ற உரிமையுடன் கண்டு களித்தவள் யசோதை. கோகுலத்தின் மகிழ்ச்சிக்குக் காரணமான கண்ணன், மண்ணை உண்ட வாயால் அகிலத்தைக் காட்டி, தாயை தரணியில் உயர்த்தியவன். யசோதையைப் போலவா நான் என்று ஏக்கம் காட்டுகிறாள் திருக்கோளூர் பெண் பிள்ளை.

'அநுயாத்திரை செய்தேனோ
அணிலங்களைப் போலே?'

நான் என்ன அணில்கள் போலவா இருந்தேன் என்று கேட்கிறாள் அப்பெண். ராமனுக்கு பாலம் கட்ட உதவிய அணில்களின் அநுயாத்திரை போல் என்னால் செய்ய முடியவில்லையே என்று மேலும் சுவை கூட்டுகிறாள். பாலம் கட்டத் தன்னால் பாறைகளைத் தூக்க முடியாத சிறிய உருவம் என்றாலும் ராமன் பாதத்தின் அடியிலிருந்து உருண்டு மணலைச் சரித்துக்கொண்டு போய் சேர்த்தது. பாலத்தின் இடம் வரை சென்று உருண்டுவிட்டு, மீண்டும் தாவி ஓடி வந்து ராமனின் பாத அடியிலிருந்து உருண்டது. ராமனின் பாதத்துக்கும், பாலத்துக்குமான இடைப்பட்ட தூரத்தைப் பயணமாகக் கொண்டால் அது அநுயாத்திரை. அநுயாத்திரை என்றால் மீண்டும் மீண்டும் செய்யும் யாத்திரை. இதனை நான் செய்யவில்லையே என்கிறாள் அப்பெண்.

தெய்வத்தை பெற்றேனோ
தேவகியைப் போலே!

இந்த வரிகளைப் படித்தாலே விளக்கம் ஏதும் தேவையில்லை. தேவகிக்கும் வசுதேவருக்கும் பிறந்த குழந்தை கண்ணன். பிறக்கும் பொழுது அந்த சிசு, சங்கு, சக்கர கதாபாணியாகவும், நான்கு அழகிய கரங்களைக் (சதுர் புஜ)கொண்டவனாகவும் பிறக்கிறது. விஷ்ணுவின் அம்சம் என்று அறிந்ததாலும், கம்சனின் கொடூர குணத்தை எண்ணி அஞ்சிய தேவகி கண்ணா உன் அதிகப்படியான கரங்களை மறைத்துக்கொள் என்று வேண்டுகிறாள். பகவானைப் பெற்று எடுத்தாளே தேவகி அது போல செய்தேனா என்று தாய்ப் பாச தாபத்தில் தவிக்கிறாள் அப்பெண். இதனைச் செய்ய இயலாத நான் திருக்கோளூரில் தங்குவதற்கு லாயக்கற்றவள் என்கிறாள்.

இப்பெண் கூறியவற்றைக் கேட்டு அதிசயித்த ராமானுஜர், அவருக்கு திருக்கோளூர் வைத்தமாநிதி பெருமாளையும், குமுதவல்லித் தாயாரையும் தரிசனம் செய்துவித்து ஆற்றுப்படுத்தினார். ஜாதி பேதம் மட்டுமல்ல, ஆண், பெண் பேதங்கள் இன்றி ஆணாதிக்கமற்றவராகவும் விளங்கினார் என்பதற்கு பெண் பிள்ளை ஒருவர் கூறிய இவற்றை ராமானுஜர் வரலாற்று நிகழ்வாக்கியதுதான் சான்று என்று சொன்னால் மிகையில்லை.

Koviloor Digital Library

ஸ்ரீ சுகந்தவனநாயகி - ஸ்ரீ பரிமளரங்கன் (திரு இந்தளூர்)

Koviloor Digital Library

ராமானுஜரின் எளிமையும் பெருமையும்

சமத்துவம் பற்றித் தத்துவம் பேசலாம். ஆனால் அதை நடைமுறையில் காட்டுவதற்கு மெய்யான சமத்துவ தரிசனம் வேண்டும். ராமானுஜரின் வாழ்க்கையைப் பார்க்கும்போது அந்த தரிசனம் அவருக்கு இருந்தது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

திருமங்கையாழ்வார் பிறந்த திருநகரிக்கு ராமானுஜர் ஒரு முறை சென்றார். அங்கே தாழ்குலப் பெண் ஒருவர் அவர் எதிரில் வந்தார். உடனிருந்த சீடர்கள் அவரைச் சற்று ஒதுங்கக் சொன்னார்கள். "இங்கே வலதுபுறம் பெருமாள், இடதுபுறம் திருமங்கையாழ்வார். நான் யார் பக்கம் ஒதுங்குவது? ஆண்டவன் பக்கமா, ஆழ்வார் பக்கமா?" என்று கேட்டார் அப்பெண்.

யதிராஜர், பாஷ்யகாரர், எம்பெருமானார் என்றெல்லாம் சிறப்பாக அழைக்கப்படும் ஸ்ரீ ராமானுஜர் வைணவத்தையும் ஆன்மிகத்தையும் மட்டும் வாழ்விக்க வந்தவராகவே பார்க்கப் படுகிறார்; உலகெங்கும் தோன்றிய பல மனிதப் புனிதர்களைப் போல மக்கள் பால் இரக்கமும் அவர்களைக் கடைத்தேற்ற வேண்டிய கருணையும் சீடர்கள் மேல் பாசமும் கொண்ட அவர் மிகுந்த எளியவராகவும் அடக்கமுள்ளவராகவும் வாழ்ந்து தன்னைப் பின்பற்று பவர்களுக்கு நல்லுதாரணராகவே வாழ்ந்திருக்கிறார்.

ஊர்களின் மகிமைகள்

ராமானுஜர் பிரம்ம சூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத பரமாக உரை எழுதினார். அந்த உரையின் மூலம் விசிஷ்டாத்வைதத் தத்துவத்தை உணர்ந்துகொள்ளலாம். எட்டெழுத்து மந்திரத்தை குருவிடம் தகுந்த முறையில் உபதேசம் பெற்று அதையே நாட்டு மக்களுக்கும் உரைத்து அவர்களையும் உய்விக்க முற்பட்டார் அச்சம்பவம் நடந்த இடமே திருக்கோஷ்டியூர். யாதவப் பிரகாசரிடம் சீடனாக இருந்தார். அந்த ஊர் திருப்புட்குழி. திருக்கச்சி நம்பிகளிடம் சீடராகச் சேர விரும்பினார். அந்த ஊர் திருக்கச்சி (காஞ்சிபுரம்). சேஷாசலம் புனிதமானது. அதில் கால் வைத்து ஏறக் கூடாது என்று முழங்கால் போட்டு முட்டி தேயத்தேய நடந்தார். அந்த ஊர் திருமலை. முகலாயப் படையெடுப்பின்போது கொண்டுசெல்லப்பட்ட சம்பத் குமாரன் என்ற உற்சவ மூர்த்தியை டெல்லி பாதுஷாவிடமிருந்து மீட்டுவந்து, தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளான மனிதர்களின் உதவியுடன் கோயிலில் மீண்டும் பிரதிஷ்டை செய்து அவர்களுக்குக் கோயில் நுழைவு உரிமையும் பூசைகளின்போது கோயில் மரியாதைகளை ஏற்கும் உரிமையும் நியமமாகவே நடைபெற வைத்தார். அந்த ஊர் திரு நாராயணபுரம். 'நூறு தடாவில் அக்கார அடிசில் சொன்னேன்' என்று சூடிக்கொடுத்த நாச்சியார் சொன்னார். ஆனால் செய்ய வாய்க்கவில்லை என்ற குறை கூடாது என்பதற்காக அவர் சார்பில் தானே அதை நிறைவேற்றினார். அந்த ஊர் திருமாலிருஞ்சோலை. அன்புத் தங்கையின் ஆசையை நிறைவேற்றிய அண்ணன் நீர் என்று அந்தத் தங்கையே அழைத்த ஊர் திருவில்லிப்புத்தூர். வட திசை நோக்கிச் சென்றபோது கொலை முயற்சியிலிருந்து தப்பக் கொடுங்காட்டில் சிக்கியபோது வரதராஜரும்

Koviloor Digital Library

ஸ்ரீ அரவிந்தவல்லீ - ஸ்ரீ ச்யாமளமேனியன் (திருக்கண்ணங்குடி)

Koviloor Digital Library



ஸ்ரீ திருமோகூர்வல்லி - ஸ்ரீ காளமேகப் பெருமாள் (திருமோகூர்)

பெருந்தேவித் தாயாரும் வேட்டுவத் தம்பதியாக வந்து காஞ்சிக்கு அருகில் அவரைக் கொண்டுவந்து விட்டார்கள். அந்த இடத்திலிருந்த கிணற்றிலிருந்து திருமஞ்சனத்துக்குத் தீர்த்த கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்தினார். அந்த இடம் சாலைக் கிணறு. இப்படியாக ராமானுஜருடன் தொடர்புள்ள ஊர்களைத் தரிசித்தாலே ராமானுஜ தரிசனம் சாத்தியமாகிவிடும். யதிகளுக்கு ராஜாவாக மட்டும் அல்ல பாமரர்களுக்கும் உற்ற தோழராகத் திகழ்ந்தவர்.

> கோவிலில் ஒட்டடை நீக்கிகள், கோவில் கோபுரங்களில் வளரும் புல்லுருவிச் செடிகளைக் கவனித்து அகற்றுவோர், காவிரியின் அக்கரையிலிருந்து கோவில் மடைப்பள்ளிக்குப் பால் தயிர் கொண்டுவரும் நபர்கள், ஆற்றைக் கடக்கப் பயன்படுத்தும் படகுகளின் படகோட்டிகள் இப்படி ரங்கனுக்குச் சேவை செய்யும் ஆட்களில் ஒருவரைக்கூட ராமானுஜர் விடவில்லை.

யார் பக்கம் ஒதுங்குவது?

திருமங்கையாழ்வார் பிறந்த திருநகரிக்கு ராமானுஜர் ஒரு முறை சென்றார். அங்கே தாழ்குலப் பெண் ஒருவர் அவர் எதிரில் வந்தார். உடனிருந்த சீடர்கள் அவரைச் சற்று ஒதுங்கச் சொன்னார்கள். “இங்கே வலதுபுறம் பெருமாள், இடதுபுறம் திருமங்கையாழ்வார். நான் யார் பக்கம் ஒதுங்குவது? ஆண்டவன் பக்கமா, ஆழ்வார் பக்கமா?” என்று கேட்டார் அப்பெண். சீடர்களின் தவறுக்குத் தக்க பதில் அது என்று கண்டு மகிழ்ந்து வைணவத்துக்கு உற்ற சோதரி நீ என்று அவரை வைணவ மரபில் சேர்த்தார்.

திருமலைக்கு ஒரு முறை பெருமாளைச் சேவிக்க ராமானுஜர் வருவதைக் கேட்ட அவருடைய தாய் மாமனும் பெரிய திருமலை நம்பி என்று அழைக்கப்படுபவருமான வைணவப் பெரியார், அவரை வரவேற்க திருமலையின் எல்லையில் பூரண கும்ப மரியாதைகளுடன் காத்திருந்தார். அவரை நேரில் கண்டதும் நெகிழ்ச்சியுற்ற ராமானுஜர், தாங்கள் இந்தத் தள்ளாத வயதில் என்னை வரவேற்க வரவேண்டுமா, யாராவது (வயதில்) சிறியவரை அனுப்பக்கூடாதா? என்று கேட்டார். திருமலையெங்கும் தேடினேன் என்னைவிடச் சிறியவர் யாரும் இல்லை என்றார் பெரிய திருமலை நம்பி.

அதற்கும் முன்னர்தான் சீடர்களுக்கு அதே போன்ற அனுபவம் கிட்டியிருந்தது. திருப்பதி இத்தனை கிலோ மீட்டர் என்ற வழிகாட்டிப் பலகைகளும் மைல்கற்களும் இல்லாத அக்காலத்தில் திருமலையையும் அதற்குப் போகும் வழியையும் அடையாளம் காண முடியாமல் பக்தகோடிகள் தடுமாறுவது வழக்கம். அப்படியொரு சமயம் சோர்வும் பசியும் சேர்ந்துகொள்ள திருமலையை அடையாளம் காண முடியாது தொண்டர்கள் தவித்தபோது அங்கு கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்த விவசாயியிடம் வழிகேட்டார் ராமானுஜர். அவர்

தனது கையை நீட்டி அதோ தெரிகிறதே அதுதான் திருமலை என்று அடையாளம் காட்டினார். உடனே ராமானுஜர் அங்கேயே அவருக்குத் தெண்டனிட்டு சேவித்து நன்றி கூறினார். தொண்டர்கள் திகைத்து விளக்கம் கேட்டனர். “இறைவன் இருக்குமிடத்தைக் காட்டும் எல்லோருமே ஆச்சார்யர்கள்தான். எனவே அவருக்கு தெண்டனிட்டேன்” என்று விளக்கம் அளித்தார். திருநாராயணபுரத்துக்கு அருகில் விவசாயம் செய்வதற்கு நீரில்லாமல் விவசாயிகள் தவிப்பதைக் கண்டு மனம் வருந்தி, தன்னை ஆதரிப்பவர்களைக் கொண்டு மிகப் பெரிய ஏரியை நிர்மாணித்து உபரி நீரை அதில் தேக்கி அவர்களுடைய வாட்டத்தைப் போக்கினார் ராமானுஜர்.

சாமான்யர்களுடன் சாமான்யராக இருந்த ராமானுஜர் நித்ய கிரந்தம், கீதா பாஷ்யம், ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த ஸாரம், வேதாந்த தீபம், வேதார்த்த ஸ்ங்கரஹம், ஸ்ரீவைகுண்ட கத்யம், ஸ்ரீ ரங்க கத்யம், சரணாகதி கத்யம் என்ற அரிய நூல்களையும் படைத்தார்.

கோயில் நிர்வாகச் சீரமைப்பு

வைணவத்தை நெறிப்படுத்தியதுடன் சேவார்த்திகளின் நலனை மனத்தில் கொண்டு, திருவரங்கக் கோயிலின் நிர்வாகத்தை அற்புதமாகச் சீரமைத்து இன்றைக்கும் அது தொடருமாறு செய்திருக்கிறார். கோவில் ஒழுகு என்னும் கோவில் வரலாற்று நூலில், ராமானுஜர் நிர்வாக ஏற்பாடுகள், அதற்காக அவர் நியமித்த பணியாளர்கள் முதலான அனைத்து விவரங்களும் உள்ளன.

கோயில் காரியங்களில் அஞ்சு பதவிகள் என்று இருந்ததைப் பத்தாக்கினார். திருப்பதியார், திருப்பணி செய்வார், நம்பிகள், உள்ளூரார், விண்ணப்பம் செய்வோர், திருக்கரகக்கையார், ஸ்தானத்தார், பட்டர்கள், ஆரிய பட்டர்கள், தாச நம்பிகள் இப்படிப் பத்துக் குழுக்கள். இதில்லாமல் ஏகாங்கிகள், சத்தாத முதலிகள் என்னும் வகையில் எட்டு வைணவத் துறவிகள், வேத்திர பாணிகள் என்று வகைவகையான குழுக்கள்.

கருவூலத்தின் தலைமை அலுவலர் வேலைக்கு எடுக்கும் நபர் ஒரு வேளாளராக இருக்க வேண்டும் என்றார். அந்தந்தப் பிரிவினருக்கு உள்ள கடமைகள். சிறப்புரிமைகள் எல்லாம் வகுத்தவரும் ராமானுஜரே!

சமையலுக்கு உப்பு, மிளகு, மசாலா சாமான்கள் எடுத்துக் கொடுப்போர், கோவில் கதவுகளுக்கு முத்திரை இடுவோர், களிமண் அரக்கு தயாரிப்போர், சிற்பிகள், கொடிகள் தோரணம் இவற்றுக்கு வண்ணம் தீட்டும் சம்மியர்கள், ஸ்வாமிக்குப் புது நகை செய்யவும் பழையதைப் பழுதுபார்க்கவும் பொற்கொல்லர்கள், கோவில் விளக்குகள் பாத்திர பண்டங்கள் செய்வோர், மடைப்பள்ளியில் ஸ்வாமிக்கு மண்பாண்டச் சமையலுக்கான மண்பாண்டங்கள் செய்து கொடுப்போர் (தினமும் புதுப் பாண்டம்), பெருமாளின் உடுப்புகளைத் துவைக்கும் ஈரங்கொல்லிகள் என்ற சலவையாளர்கள், தச்சர்கள், நெசவாளர்கள், தையல்காரர்கள், தொங்கும் விதானங்கள், மடிப்புத் தொங்கல்கள், திரைச்சீலைகள் போன்றசற்றுக்குச் சரிகை வேலைப்பாடு செய்பவர்கள், பெருமாள் குடை, ஆலவட்டம், பல்லக்கு அலங்கரிக்கும் துணிகள் தயாரிப்பவர்கள் என்று ஒரு வேலையைக்கூட விடாமல் கவனித்து ஒழுங்கு செய்துள்ளார்.

கோவிலில் ஒட்டடை நீக்கிகள், கோயில் கோபுரங்களில் வளரும் புல்லுருவிச் செடிகளைக் கவனித்து அகற்றுவோர், காவிரியின் அக்கரையிலிருந்து கோயில் மடைப்பள்ளிக்குப் பால் தயிர் கொண்டுவரும் நபர்கள், ஆற்றைக் கடக்கப் பயன்படுத்தும் படகுகளின் படகோட்டிகள் இப்படி ரங்கனுக்குச் சேவை செய்யும் ஆட்களில் ஒருவரைக்கூட ராமானுஜர் விடவில்லை.

சமத்துவம் பற்றித் தத்துவம் பேசலாம். ஆனால் அதை நடைமுறையில் காட்டுவதற்கு மெய்யான சமத்துவ தரிசனம் வேண்டும். ராமானுஜரின் வாழ்க்கையைப் பார்க்கும்போது அந்த தரிசனம் அவருக்கு இருந்தது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது. தத்துவ விசாரத்தில் மட்டுமின்றி நடைமுறை வாழ்க்கையைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துப் பல ஏற்பாடுகளை உருவாக்கிய சமுதாயச் சிந்தனையாளர் ராமானுஜர். யாருக்கு ஆசானாக இருக்கும் தகுதி இருக்கிறது, கோயில் எப்படி நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். சமூகத்தில் ஏற்றத்தாழ்வின்றி அனைவரையும் இறைப்பணியில் ஈடுபடுத்தும் மகத்தான சேவை செய்த தன்னிகரில்லாத மகான் என்று ராமானுஜரைச் சொன்னால் அதில் துளியும் மிகை இருக்காது. ●



Koviloor Digital Library

வா.ரவிக்குமார்

நாடக மேடையில் ராமானுஜர் வாழ்வு

80 பாத்திரங்கள்; 55 மேடைகள்

சீர்திருத்தம் என்பது சொல் அல்ல; செயல் என்பதை தம் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நிரூபித்திருக்கிறார் ராமானுஜர்.

காட்சி-1

பெரிய நம்பியின் மகன் திருமணம் செய்துகொள்கிறார். குருவின் மகனுக்கும் அவரின் மனைவிக்கும் சேவை செய்ய முதலியாண்டனை அனுப்புகிறார் ராமானுஜர்.

காட்சி-2

ராமானுஜர் திக்விஜயம் வரும்போது, எதிரில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு பெண் வருகிறாள். அடியார் ஒருவர், அவளை விலகி அந்தப் பக்கம் போகச் சொல்கிறார்.

அந்தப் பெண், "(மூவுலகையும் தம் இரண்டு அடியில் அளந்தவர் பெருமாள் எனும் பொருளில்) வலப்பக்கம் கண்ணமங்கை. இடப்பக்கம் வயலாலி. நான் எந்தப் பக்கம் போவது? என்கிறாள்.

இந்த உரையாடலைப் பல்லக்கில் இருந்தபடி கேட்கும் ராமானுஜர், இறங்கி ஓடோடி அந்தப் பெண்ணிடம், "அம்மா... என்னுடைய சீடன் செய்த தவறுக்கு நான் மன்னிப்பு கேட்கிறேன்" என்கிறார் அந்தப் பெண்ணைப் பணிந்தபடி.

சாதி அடக்குமுறைகள் மதப்பூசல்கள் நிறைந்த நாட்டில் இவற்றுக்கு எதிராக 1000 ஆண்டுகளுக்கு முன்பே போராட்டத்தைத் தொடங்கிவிட்ட மூத்த போராளி ராமானுஜர்.

சாதி அடக்குமுறைகள் மதப்பூசல்கள் நிறைந்த நாட்டில் இவற்றுக்கு எதிராக 1000 ஆண்டுகளுக்கு முன்பே போராட்டத்தைத் தொடங்கிவிட்ட மூத்த போராளி ராமானுஜர். தான் மட்டும் சாதி, மதக் கருத்துகளுக்கு எதிராக இருந்தால் போதாது, தம்மைச் சேர்ந்தவர்களும் இதே எண்ணத்தோடு இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார். இதை விளக்குவதுதான் மேலே இருக்கும் இரண்டு காட்சிகள். அவரின் இந்த உறுதியே ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அவரின் நினைவை நம் மனதில் ஏற்றிப் போற்றுவதற்குக் காரணமாக இருக்கிறது.

சீர்திருத்தம் என்பது சொல் அல்ல; செயல் என்பதை தம் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நிரூபித்திருக்கிறார் ராமானுஜர். அவரின் வாழ்க்கை எனும் பெருங்கடலை சிறு கமண்டலத்தில் அடக்கும் முயற்சியாக சென்னை, அம்பத்தூரிலிருக்கும் திருப்புகழ் யோக மண்டலியைச் சேர்ந்த நடனமணி ரமணி சுந்தர்ராஜன் தன்னிடம்

Koviloor Digital Library

பெருமாளின் சிலையை உயிராக வைத்திருக்கிறாள் சுல்தானின் மகள். ராமானுஜரின் செல்லப் பிள்ளாய் பாடலுக்கு மயங்கி பகவானின் சிலை ராமானுஜரின் மடியில் விழுகிறது.

நடனம் பயிலும் மாணவிகளுடன் ராமானுஜர் நாட்டிய நாடகத்தை தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் டெல்லியிலும், பத்ரிநாத், ரிஷிகேஷ், சண்டிகர் என இந்தியாவின் பல மாநிலங்களிலும் நடத்தியிருக்கிறார்.

டெல்லி ரசிகர்களைக் கவர்ந்த பீவி நாச்சியார்

ராமானுஜர் கர்நாடகாவின் மேல்கோட்டையில் (திருநாராயணபுரம்) இருந்தபோது, அவர் ஒரு பெருமாள் சிலையைக் கண்டெடுக்கிறார். அந்தச் சிலையை திருநாராயணபுரம் கோயிலில் மூலவராக பிரதிஷ்டை செய்யும்போது, உற்சவர் சிலைக்கு என்ன செய்வது என்று யோசிக்கிறார்கள். ராமானுஜரின் கனவில் தோன்றும் பெருமாள், நான் டெல்லி சுல்தானின் அரண்மனையில் இருக்கிறேன். அங்கு சென்று என்னுடைய சிலையை எடுத்துவந்து இங்கே பிரதிஷ்டை செய் என்று ராமானுஜருக்கு உத்தரவு வருகிறது.

ராமானுஜர் டெல்லிக்குச் செல்கிறார். பெருமாளின் சிலையை உயிராக வைத்திருக்கிறாள் சுல்தானின் மகள். ராமானுஜரின் செல்லப் பிள்ளாய் பாடலுக்கு மயங்கி பகவானின் சிலை ராமானுஜரின் மடியில் விழுகிறது. அதை எடுத்துக்கொண்டு வரும் வழியில், சிலையை திருப்பிக் கொடுக்குமாறு வழிமறிக்கிறாள் சுல்தானின் மகள் பீவி. ராமானுஜரோ, நீயும் வந்துவிடு என்கிறார். சிலையைத் தன் கையில் வாங்கும் பீவி அந்த நொடியே இறந்துவிடுகிறார். அவரை பீவி நாச்சியார் என்று ராமானுஜர் அழைக்கிறார். இன்றைக்கும் திருநாராயணபுரம் கோயிலில் பீவி நாச்சியாருக்குச் சிலை இருக்கிறது. டெல்லி தமிழ்ச் சங்கத்தில் ராமானுஜர் நாட்டிய நாடகத்தைப் பார்த்த ரசிகர்கள், கண்களில் நீர் வழிய அந்தக் காட்சியோடு ஒன்றியிருக்கின்றனர்.

நாட்டிய நாடகத்தில் ராமானுஜராகத் தோன்றி மொழிகளைக் கடந்து பக்தர்களை மெய்மறக்க வைத்த ரமணியும் நாடகமாக்கத்துக்கு உதவிய அவரின் கணவர் சுந்தர்ராஜனும் ராமானுஜர் நாட்டிய நாடகம் உருவான தருணங்களையும் பல மாநிலங்களிலும் பக்தர்கள் அதை எதிர்கொண்ட பக்தி அலைகளையும் நம்மிடம் பகிர்ந்துகொண்டனர்:

"ராமானுஜர் நாட்டிய நாடகம் உருவாகிய அனுபவத்தை இப்போது நினைத்தாலும் பிரமிப்பாக இருக்கிறது.

கடந்த 2009-ம் ஆண்டு தொடங்கி, ஏறக்குறைய 55 முறை நாட்டிய நாடகமாக அரங்கேறியிருக்கிறது இளையாழ்வாரின் வாழ்க்கை வரலாறு. முதன்முதலில் 80 மாணவியர்கள் பங்கு கொண்டு, 31-12-2009 அன்று சின்ன திருப்பதி, லெனின் நகர், ஆழ்வார்கள் அலங்கார மண்டபத்தில், பக்த ஜன சபா டிரஸ்ட் மற்றும் பகவன் நாம பிரசார டிரஸ்ட் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. அதன்பின் திருமலை திருப்பதி தேவஸ்தான திருக்குடை வைபவத்தின்போது நடத்தப்பட்டது.

நாட்டிய நாடக வடிவமாக்கம்

பரதநாட்டியத்தை எப்போதும் பார்த்துப் பழகியவர்களுக்கு மட்டுமே புரியும் பதங்கள், ஜாவளிகள் கொண்டுதான் இந்த கலை ஆடப்பட்டுவந்தன. இதற்கு மாறாக, பாமரருக்கும் இக்கலை சென்றடையும் வழியை யோசித்தோம். அப்போது எங்களுக்கு உதித்த யோசனைதான் திருப்புகழ் மற்றும் பன்னிரு திருமுறையை நாங்கள் பரதநாட்டியத்தில் கையாண்டது.

சேக்கிழார் மாநாடுகளிலும், திருமுறை விழாக்களிலும், திருப்புகழ் அரங்கங்களிலும் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதையடுத்து, 63 நாயன்மார்கள் வரலாற்றை, சராசரியாக ஒரு அடியாருக்கு 7 நிமிடம் வைத்து சுமார் 7 மணிநேரம், ஆம்பூர் சேக்கிழார் விழாவில் அரங்கேற்றினோம். இந்த நிகழ்ச்சியின் வெற்றி எங்களை மலேசியாவுக்குக் கொண்டுசென்றது.

மலேசிய நாட்டில் கோலாலம்பூர் பத்துமலை முருகர் கோயிலின் அறங்காவலர் டத்தோ நடராஜன், இந்து சேவை சங்கம் ராமாஜி போன்றோரின் பெருமுயற்சியால் அந்நாட்டில் நிகழ்ச்சிகளை நடத்தியதோடு, அந்நாட்டில் நாட்டியக் கலை கற்ற மாணவிகள் 80 பேருக்கு 10 நாட்களில் பயிற்சியளித்து, மலேசியாவின் மஹா மாரியம்மன் ஹாலில் பெரிய புராணம் நாட்டிய

Koviloor Digital Library

நாடகத்தை நடத்தினோம். இதற்கு வெளிநாட்டு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் கிடைத்த வரவேற்பு, எங்களை ராமானுஜரின் வாழ்க்கை வரலாற்றை நாட்டிய நாடகமாக்கத் தூண்டுகோலாக அமைந்தது.

நீயும் பக்தன். நானும் பக்தன் இதில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்னும் பேதம் எங்கே வந்தது? நாம் இருவரும் ஒரே பக்த ஜாதி, என்று கூறி, கச்சிநம்பிகளை ஆரத் தழுவிய குழந்தை ராமானுஜரின் முற்போக்கு சிந்தனை, ஜாதி, மத பேதமில்லை என்னும் உயர் கொள்கை எங்களை அதிசயிக்க வைத்தது. நிச்சயமாக இந்தக் கதையை எடுத்தால் ஒரு பாமரனை 2 மணிநேரம் உட்கார வைக்க முடியும் என்று தோன்றியது.

ராமானுஜர் வாழ்க்கைச் சம்பவங்கள்

தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் எனும் பாகுபாடு இல்லாமல் பெரிய நம்பியை தன் குருவென ஏற்றார். மதுராந்தகத்தில் வைணவ (ஸமாஸ்ரயணம் சங்கு, சக்கர முத்திரை தன் கரங்களில் பதித்துக் கொள்வது) முத்திரையை அவரிடம் பெற்றார். ராமானுஜரின் பணிவல்லவா இது? குலம் தாழ்ந்தவர்தானே என்று குருவுக்கு திண்ணையில் சோறு போட்ட தன் மனைவியை வெறுத்து ஒதுங்கினார். தவறான கருத்தை குரு பாடமாக சொல்கிறார் என்பதால் அவரிடம் வாக்குவாதம் செய்து உண்மை விளக்கம் சொன்னவர்.

நல்லதொரு சீடன் வருவான் என்று அரங்கத்தில் ஆளவந்தார் காத்திருக்க, பெரியநம்பியால் அரங்கம் வந்து, தன்னைப் பார்க்காமல் முக்தியடைந்த குரு ஆசைகளைத் தன் விரல்களால் சொல்ல, அப்பணியை சிரமேற்கொண்டார் ராமானுஜர்

பயிற்சியளித்த விதம்

ராமானுஜரின் வாழ்க்கையில் இடம்பெற்ற காட்சிகளை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பாடல்களை முதலில் எழுதினோம். அந்தந்த காட்சியின் பரிமாணத்துக்கு பொருத்தமான ராகங்களைத் தேர்வுசெய்து, அதற்கு இசை வடிவம் கொடுத்தோம். பின்னர் காட்சிக் கோவைகளை குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை குழுக்களாகப் பிரித்து, காட்சிக்கேற்ப பயிற்சி அளித்தோம். காட்சிகளை குழந்தைகளுக்குப் புரியவைக்கும் போதே, இந்த வேலை எங்களுக்கு சுலபமாகிவிட்டது. எங்களிடம் படிக்கும் குழந்தைகள் பல சாதி, மதப் பின்னணியில் இருப்பவர்கள். அவர்களுக்கு ராமானுஜர் நாடகத்திற்காக பயிற்சி கொடுக்கும்போது, இளையாழ்வாரின் பணியை நாங்கள் தொடர்ந்து செய்வதாகவே உணர்ந்தோம்.

'அரங்கனுக்கு உடையவர்' என்று பட்டம் பெற்ற உடையவரின் தமிழ் நம்மை மயங்க வைக்கும் தமிழ். வடமொழியை அழகாகத் தமிழில் மொழிமாற்றம் செய்வதில் கைதேர்ந்தவர். இறைவனுக்கு நிவேதனம் செய்யும் ஒரு வார்த்தையை, ராமானுஜர், 'கண்டு அருளச் செய்தல்' என்று அழகாக மொழிமாற்றம் செய்திருப்பார். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

தன்னிடம் முதலில் சேர்ந்த சீடனுக்கு முதலியாண்டான் என்று பெயர் வைத்தவர். பகவத் சேவையில் ஆண், பெண் பேதம் ஏது? என்று விவாதம் செய்தவர். தன்னைக் கொல்ல நினைத்த குரு யாதவப்பிரகாசர், ஞான உபதேசம் செய்து கோவிந்த ஜீயர் என்று அழைத்து சீடனாக்கிக் கொண்டவர்.

பெரிய நம்பி ஆணையேற்று திருக்கோஷ்டி நம்பியிடம் ஸ்ரீவைணவ ரகசியத்தை அறிந்து கொள்ள தினமும் ஸ்ரீரங்கத்திலிருந்து கோஷ்டியூருக்கு கால்நடையாக 18 முறை சென்றவர். அலைய வைக்கும் குருவின் செய்கையால், கடுகளவும் கோபமோ, வருத்தமோ, கொள்ளாது, அரங்கனால் அவர் மனம் கனியவைக்கப்பட்டு, தன் சீடர்களைப் பவித்ரமும், கைத்தண்டாகவும் கொண்டு, வைணவ ரகசியத்தை அறிந்தார். அப்படி கடினப்பட்டு கற்ற அந்த ரகசியத்தை கோபுரத்தின் மீதேறி நின்று அனைவருக்கும் உரக்கச் சொன்ன அவரின் பெருந்தன்மையை முழுமையாக விளக்கமுடியாவிட்டாலும் ஓரளவுக்கு எங்களின் நாட்டிய நாடகத்தில் கொண்டுவந்தோம்.

இறுதி வடிவம்

ஒவ்வொரு காட்சிக் கோவையையும் கதைகளாகக் கூறி, குழந்தைகளின் மனதில் பதிய வைத்து, சுமார் 6 மாதம் பயிற்சி தந்தோம். ராமானுஜர் என்ற பெயரின் அற்புதம் எங்களை முழுமையாக ஆட்கொண்டுவிட்டது. அவரது வாழ்க்கையில், பல சவால்களை அவர் எதிர்கொண்டு, எதிர்த்துப் போராடி, மீண்டெழுந்த அவர் வாழ்க்கையின் நெகிழ்ச்சியான தருணங்கள் எங்களை பிரமிக்க வைத்தன.

இப்போதும் அவரது 1000-வது ஆண்டினைப் போற்றும் வகையில், பக்த ஜன சபா மற்றும் பகவன் நாம சபா டிரஸ்ட் இணைந்து தயாரிக்கும் பக்தவிஜயம் நாட்டிய நாடகத்தை மாதந்தோறும் ராமானுஜரின் திரு அவதார நட்சத்திரமான திருவாதிரை தினத்தன்று நடத்திவருகிறோம்.

Koviloor Digital Library

எஸ்.கோகுலாசாரி

ராமானுஜர் வளர்த்த இசை நாடகக் கலைகள்

பக்தி என்கிற வெள்ளத்தை மக்களின் மனதிலே பாய்ச்சி அவர்களின் வாழ்வை இனிமை அடையச் செய்தவர். மிகச் சிறந்த இசைக் கலை நுட்பங்களை அறிந்தவர். இசை, நடனக் கலைகளைப் போற்றியவர்.

ராமானுஜர் கோயில் வழிபாட்டில் முக்கியமாக அரையர் சேவையை இணைத்தார். ஆழ்வார்களுக்கு பிரதிநிதியாய் அரையர்களை நியமித்தார். இவர்கள் பெருமாள் திருமுன்பும் நாச்சியார் திருமுன்பும் உற்வ காலங்களில் பதிகத்தின் முதல் பாடலை இசையோடு பாடுவார்கள்.

ராமானுஜர் ஆயிரத்துப் பதினேழாம் ஆண்டு இவ்வுலகத்திலே அவதரித்த கருணை வள்ளல். இந்த உலக மக்களெல்லாம் உய்வு அடைய வேண்டும் என்பதற்காகவே பெரும் பாடுபட்டவர். ராமானுஜர் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியவர். அவர் ஒரு வேதாந்தி என்று மட்டும் சொல்லிவிட முடியாது. கோயில்களிலே பலவிதமான சீர்த்திருத்தங்களைச் செய்தவர்.

பக்தி என்கிற வெள்ளத்தை மக்களின் மனதிலே பாய்ச்சி அவர்களின் வாழ்வை இனிமை அடையச் செய்தவர். மிகச் சிறந்த இசைக் கலை நுட்பங்களை அறிந்தவர். இசை, நடனக் கலைகளைப் போற்றியவர்.

பக்தி இலக்கியத்தோடு இசைக் கலையை இணைத்துக் கோயில்களிலே திகழச் செய்தவர். இசையின் மூலமாக எந்த வேதாந்த விஷயத்தையும் மிக எளிமையாகப் புரிந்துகொள்ள முடியும் என்கிற எண்ணம் கொண்டவர்.

இசைக் கலை மற்றும் நாட்டியங்களிலே மிகுந்த ஈடுபாடு கொண்டு அக்கலையைப் போற்றி வளர்த்தவர். இசை நாட்டியங்களின் நுட்பங்களையெல்லாம் தெரிந்தவர் ராமானுஜர் .

பக்தியோடு இணைந்த இசை

பொதுவாக வைணவ பக்தி இலக்கியங்கள் இசையின் அடிப்படையிலேயே வளர்ந்தன. வடமொழி வேதங்களாக இருந்தாலும்கூட அதிலே இசைக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் உண்டு. வேதங்களையும் உபநிடதங்களையும் கொண்டு வேள்விகளைச் செய்தபோது அந்த வேள்வியின் அங்கங்களாக இசையும் நடனமும் இணைக்கப்பட்டன. வேள்வியின்போது இடையே வீணை இசையும், தாள வாத்தியமும் இசைக்கப்பட்டன

வேதங்களிலே சாம வேதம் முழுக்க இசை வடிவமானது. பகவான் பரமபதத்திலே எப்பொழுதுமே இசையைக் கேட்டுக்கொண்டிருப்பான் என்பதினாலே வைகுந்தத்தைப் பாட்டு கேட்கும் இடம் என்றே வைணவ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆழ்வார்கள் தங்கள்

Koviloor Digital Library

கூரத்தாழ்வான்

Koviloor Digital Library



ராமானுஜர் திருவரங்கப் பெருமாள் அரையருக்கு சேவை செய்தது

பாசுரங்களையெல்லாம் பெரும்பாலும் இசை வடிவங்களாகவே அளித்தனர். சாம வேதத்தின் சாரமான திருவாய்மொழி முழுக்க முழுக்க இசையின் துணை கொண்டு பாடப்படுகின்ற பிரபந்தமாகும்.

'பாலேய் தமிழர் இசைக்காரர் பத்தர் பரவும் ஆயிரம்' என்று தம்முடைய பாசுரங்களில் நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். நம்மாழ்வாரைப் போலவே திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்ற ஆழ்வார்களும் இசையாலும் தமிழாலும் இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர். ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமானது இடைக்காலத்திலே மறைந்தபோது அதனை மிகவும் முயன்று தேடி எடுத்துத்

Koviloor Digital Library

தொகுத்தவர் நாதமுனிகள். இவர் இசையிலே வல்லவர். தேவகானத்திலே பாடக்கூடியவர் என்று குரு பரம்பரைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

பெருமாளே இசையிலே வல்லவராகவும் இசையை ஏற்பவராகவும் இசைக்கு அருள்பவராகவும் இருக்கிறார் என்பதைப் பெரியாழ்வார் நாவலம் பெரிய தீவினில் என்ற பதிகத்திலே கண்ணனுடைய குழல் ஓசையின் சிறப்பைப் பாடும்போது மிக அருமையாக எடுத்துரைக்கின்றார். கண்ணன் குழல் ஊதுகின்றபோது மக்கள் மட்டுமல்ல விலங்குகள், தாவரங்கள் எல்லாம்கூடக் கண்ணனுடைய குழல் இசையிலே மயங்கிக் கிடந்தன என்பதைப் பெரியாழ்வார் காட்டுகின்றார்.

கோயில்களில் பிரவேசித்த இசை

ஆழ்வார்களின் பாசுரங்களில் ஈடுபாடு கொண்டு ராமானுஜர் இசையின் நுட்பங்களையெல்லாம் அறிந்து அதனை எல்லா வைணவக் கோயில் வழிபாடுகளிலும் புகுத்தினார். கலைஞர்களை ஆதரித்தார் என்பதை அவருடைய வரலாற்றின் பல சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக ராமானுஜர் கோயில் நிர்வாகச் சீர்த்திருத்தங்களை திருவரங்கத்திலிருந்து பல்வேறு கோயில்களுக்கும் விரிவாக ஏற்படுத்தினார்.

ராமானுஜருடைய வாழ்நாளில் பல்வேறு விதமான ராமானுஜக் கூடங்கள் தமிழகமெங்கும் குறிப்பாக கிராமங்களில் துவக்கப்பட்டன . அந்தந்த கிராம மக்களைக் கொண்டு எம்பெருமானைப் பாட வேண்டும் என்கிற பஜனை வழிபாட்டு முறையை ராமானுஜர் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரை ஏற்படுத்தினார். ஆடி ஆடி அகம் கரைந்து பாட வேண்டும் என்கின்ற ஆழ்வார்களுடைய எண்ணத்தை ராமானுஜர் இத்தகைய கூடங்கள் மூலமாக நிறைவேற்றினார். அதைப் போலவே வீதிகள் தோறும் எழுந்து ஆடிப்பாட வேண்டும் என்கின்ற ஆழ்வாரின் விருப்பத்தையும் அவர் நிறைவேற்றினார்.

திருமங்கையாழ்வார் பல்வேறு திருத்தலங்களில் சென்று இறைவனை வழிபட்டுப் போற்றியவர். பாசுரங்கள் பாடியவர். ஒவ்வொரு திருத்தலத்தை அவர் பாடுகின்றபொழுதும் அந்தத் தலத்தின் பெருமையாக இரண்டு விஷயங்களைச் சொல்லுவார். ஒன்று அங்கே வேதம் வல்லார்கள் மிகுந்து இருந்தது. இரண்டாவது ஏழிசையில் வல்லவர்கள் அந்தந்த ஊரிலே இருந்து எம்பெருமானைப் போற்றிப் பரவினர் என்பது.

திருமங்கையாழ்வாருடைய இசை மிக உயர்ந்த இசை. திருமங்கையாழ்வார் தம்முடைய திருவாயாலேயே வாலிமாவலத்து என்று தொடங்கும் பதிகத்திலே அரிய இன்இசைபாடும் நல்லடியவர்க்கு அருவினை அடையாவே என்று பாடுகின்றார். அதாவது இனிமையான இன்னிசையோடு கூடிய ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாடுபவர்களுக்கு பாவங்கள் சேராது என்று அருளிச் செய்திருக்கிறார். இதற்கு ராமானுஜர் விளக்கம் அளிக்கின்றபொழுது இசை என்பது இறைவனை மயக்கக்கூடியது. எப்படி சாதமானது இறைவனுக்கு சமர்ப்பித்துவிட்டால் பிரசாதமாக மாறுகிறதோ அதைப் போல இசையானது எம்பெருமான் விஷயமாகப் பாடப்பெற்றால் அது அரிய இன்னிசை ஆகிவிடுகிறது என்று பொருள் நிர்ணயம் செய் து இசையின் நுட்பத்தை உலகிற்கு உணர்த்தினார்.

ராமானுஜரின் இசை அறிவு

பல நிகழ்வுகள் ராமானுஜருடைய இசை அறிவுக்கும் திறனுக்கும் சான்றாகப் பிரபந்தங்களில் இருக்கின்றன. திருவரங்கம் பெரியகோயிலில் திருமொழித் திருநாள் நடந்துகொண்டிருந்தது. பெருமாள் திரு முன்பாக ராமானுஜர் மற்றும் உள்ள அடியார்கள் எல்லாம் வீற்றிருக்கின்றனர். அப்பொழுது அரையர் சேவை நடந்துகொண்டிருக்கிறது. உய்ந்தப்பிள்ளை என்கிற அரையர் கண்ணனுடைய பிள்ளை விளையாட்டுக்களை யெல்லாம் அபிநயித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது மெச்சூது சங்கம் எனும் பெரியாழ்வார் திருமொழிக்கு அபிநயிக்கின்ற விஷயமாக அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் என்கிற வரிக்கு அரையர் அபிநயம் பிடிக்கிறார். அத்தூதன் என்பதற்கு பெருமாளை அபிநயித்துக் காட்டி அப்பூச்சி காட்டுகின்றான் என்பதற்கு கண்ணையெல்லாம் உருட்டி மிரட்டிக் காண்பித்தாராம்.

அப்பூச்சி காட்டுதல் என்றால் மற்ற பிள்ளைகளை பயமுறுத்தும்படியாக ஏதேனும் ஒன்றை நடத்திக் காட்டுதல். கண்ணை விழித்தும் புரட்டியும் இமைகளை யெல்லாம் மேலே ஏற்றிப் புரட்டி கண்ணை சிவக்க வைத்து காட்டும் வழக்கம் உண்டு. இது சாதாரணமானது. இப்படிக் காட்டினால் பிள்ளைகள் எல்லாம் சிரிப்பார்களே தவிர பயப்பட மாட்டார்கள். எம்பெருமானாருக்கு இந்த அபிநயம் திருப்தியளிக்கவில்லை. பாடலின் பாவத்திற்கு ஏற்றதாக அபிநயம் இல்லையே என்று ராமானுஜர் நினைத்தார். அப்பொழுது அருகிலிருந்த எம்பார் அபிநயம் பிடித்த அரையர் உணரும் வண்ணம் தன்னுடைய இரண்டு கரங்களையும் சங்கு சக்கரங்கள் பிடித்துக்கொண்டதைப் போல் காட்டினாராம். புரிந்து கொண்டு அரையர் அபிநயத்தை மாற்றி அப்பூச்சி காட்டுதல் என்ற பாவத்துக்கு சங்கு சக்கரம் பிடித்துக் கொண்டதைப் போல் காட்டினாராம். ராமானுஜர் இதைக் கண்டு இதல்லவா சரியான முத்திரை என்று பரம திருப்தி அடைந்தாராம். இதைப்போலவே இன்னொரு நிகழ்ச்சியும் உண்டு.

கண்ணன் மீது ஊடல் கொண்ட கோபிகையின் பாவனையில் ஒருமுறை அபிநயம் நடந்தது. கண்ணன் ஒரு கோபிகையிடம் வருகிறேன் என்று உறுதியளித்துவிட்டு வராமல் போய்விட்டான். அடுத்த நாள் வந்தபொழுது கண்ணனோடு கோபிகை ஊடல் கொண்டு சினம் தணிவதாகக் குலசேகராழ்வாருடைய பாடல் வரிகள் அமைகின்றன. இந்த வரிக்கு அபிநயம் பிடித்துக் காட்டிய அரையர் கோபிகை தன் சினம் தணிவதற்காகக் கண்ணனைக் கைகளால் அடிப்பதாகக் காட்டினாராம்.

Kovilgar Digital Library



ஸ்ரீபெரும்புதூர்

கண்ணன் இப்படிக் காட்டினால் மகிழ்வானே தவிர, வருத்தப்பட மாட்டான். எனவே அபிநயத்தை மாற்ற வேண்டும். அதாவது கோபிகை கண்ணன் வருகின்ற பொழுது தன் முகத்தைத் திருப்பிக்கொண்டால் கண்ணன் அய்யோ நம்முடைய பக்தை நம்மைப் பார்க்க வில்லையே என்று முகத்தைத் திருப்பி வருத்தப்படுவான் என்று புதிய அபிநயத்தைக் காட்டினார்களாம். இதிலிருந்து பரம ரசிகரான ராமானுஜர் பாவத்தோடு கூடிய நடன முத்திரைகளை அரையர் சேவையிலே திறனோடு சேர்த்தார் என்பதை அறிகிறோம்.

கோயில் வழிபாட்டில்அரையர் சேவை

ராமானுஜர் கோயில் வழிபாட்டில் முக்கியமாக அரையர் சேவையை இணைத்தார். ஆழ்வார்களுக்கு பிரதிநிதியாய் அரையர்களை நியமித்தார். இவர்கள் பெருமாள் திருமுன்பும் நாச்சியார் திருமுன்பும் உற்வ காலங்களில் பதிகத்தின் முதல் பாடலை இசையோடு பாடுவார்கள்.

அரையர் சேவை என்பது நாதமுனிகள் காலத்திலே இருந்து வழிபாட்டில் முக்கியமானதாக இருந்து வந்தது. இது மூன்று பிரிவாக உள்ளது. முதல் பிரிவில் பாசுரங்களைப் பண்ணோடு பாடுவது. இதற்குக் கொண்டாட்டம் என்று பெயர். அடுத்து அந்தப் பாசுரங்களை அபிநயத்தோடு நடித்துக் காண்பிப்பது. மூன்றாவதாக அந்தப் பாசுரங்களுக்கான உரையை இசையோடு சொல்வது. இதனை திருவிழாக் காலங்களில் உறுதியாக நடக்க வேண்டும் என்று ராமானுஜர் ஏற்படுத்தித்தந்தார். இன்றும் அவர் சீர்திருத்தம் செய்த மேல்கோட்டை என்கிற திருநாராயணபுரத்தில் அரையர் சேவையோடு திவ்யப் பிரபந்தத்திற்கு இசையோடு பாட வேண்டிய முறையையும் ஏற்படுத்திவைத்தார்.

ராமானுஜர் முக்கியமான திருக்கோயில் சீர்திருத்தங்களில் முதல் பத்துப் பிரிவுகளில் முக்கியமான பிரிவாக இசையோடு பாசுரங்களை பாடுபவர்களை நியமித்தார். கருட வாகன பண்டிதர், பெரிய நம்பி போன்றோர்களெல்லாம் இப்பிரிவில் இருந்தனர்.

Koviloor Digital Library

தவிர, நாட்டியமாடுகின்ற மங்கையர்களைக் கோயில் தொண்டுக்காக நியமித்தார். அவர்கள் முக்கியமான காலங்களில் இசையோடு பாடல்களைப் பாடுவார்கள். அவர்களுக்கு உரிய கோயில் மரியாதையை கிடைக்கவும் செய்தார். பூஜை முறைகளிலேகூட இன்னின்ன ராகங்களை இப்படியெல்லாம் பாட வேண்டும் என்று வேத ஆகம முறைப்படி நடைபெற முறையான ஏற்பாடுகளை செய்தார்.

ஆறு கால பூஜையின் போது காலை விஸ்வரூப தரிசனத்தின்போது பூபாளமும், காலை சந்தி பூஜையின்போது திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி போன்றவற்றை அதற்குரிய பண்களுடன் பாடுவதையும் திருமஞ்சனத்தின்போது நீராட்டப் பாசுரங்களை இசையோடு பாடுவதையும் இரவில் அர்த்த ஜாம பூஜையின்போது ஊஞ்சல் சேவை லாலி பாடல்களையும் திருப்பள்ளியின்போது நீலாம்பரியில் தாலாட்டுப் பாடல்களை (மாணிக்கம் கட்டி, மன்னுபுகழ் கோசலை) பாடுவதையும் ராமானுஜர் நியமித்தார். திருவரங்கம் கோயிலில் திருப்பள்ளியெழுச்சி மற்றும் அர்த்த ஜாம வழிபாடுகளின்போது வீணை இசைக்கப்பட வேண்டும். இதனை ஏகாந்த சேவை என்பர். இதனை இசைப்பவர்களுக்கு அமுதனார் என்று பெயர்.

சித்திரை மாதத்தில் நடக்கும் பூச்சுற்று திருவிழாவின்போது பெருமாளின் முன்பாக குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழி வீணையோடு பாடப்படும்.

தினசரி காலசந்தி வழிபாட்டின்போது பெரிய மேளத்தில் மல்லாரி வாசிக்கப்படும். வாசித்துக் கொண்டே பிரகாரத்தை வலம் வரும்பொழுது ஒரு சிறிய கீர்த்தனையை வாசித்து தொடர்ந்து கம்பீரநாட்டையில் மல்லாரி வாசிப்பார்கள். திருவந்திக்காப்பின்போது தர்பார், ஆனந்தபைரவி முதலிய ராகங்கள் இசைக்கப் படும். மாலையில் சன்னிதியில் விளக்கேற்றும்பொழுது அந்திமேளம் வாசிக்கும் வழக்கம் உண்டு. இந்த ஏற்பாடுகளை இராமானுஜர் மிகவும் சிறப்பாக நடைபெற ஆவன செய்தார்.

திருப்பாணாழ்வார் பாடல்களிலே ராமாநுஜருக்கு அதிக ஈடுபாடு. ராமாநுஜரே இனிமையான குரலோடு அழகாகப் பாடும் திறன் பெற்றவர். சாமவேத சாரமாகிய திருவாய்மொழிப் பாசுரங்களை மிக அழகாகப் பண்ணோடு பாடி விளக்கமளிப்பார். இன்னிசையால் பாடிக்கொடுத்த ஆண்டாளின் பாசுரங்களை மார்கழி மாதம் முழுவதும் தானே வீதிவலத்தின்போது தன்னை மறந்து ஆண்டாள் பாடலின் பாவத்தில் கரைந்து ராமானுஜர் பாடுவார். அதனால் திருப்பாவை ஜீயர் என்றே அழைக்கப்பட்டார்.

இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இசை

இன்னிசை என்பதற்கு இனிமையான இசை என்று பொருள் கொள்ளாமல் இறைவனுக்கு அர்ப்பணிக்கப் பட்ட இசை என்று பொருள் கொண்டவர் ராமானுஜர். இந்த இசை அறிவு என்பது இராமாநுஜருக்கு மிக இளமையிலேயே இருந்தது. திருக்கச்சி நம்பிகளின் தொண்டராக காஞ்சிபுரத்திலே தேவப்பெருமாளுக்கு திருமஞ்சன கைங்கர்யம் செய்துவந்தார் ராமானுஜர். அப்போது ஆளவந்தாரின் ஆணைக்கிணங்க பெரியநம்பிகள் ராமாநுஜரை அழைத்துச் செல்ல காஞ்சிபுரம் வந்தார். ராமாநுஜருடைய கவனத்தைத் திருப்ப அவர் இசையைத்தான் கையில் எடுத்தார். ஆளவந்தாரின் ஸ்தோத்திரரத்னம் பாடல்களை மிக அழகான இசையில் அவர் பாடிக்கொண்டிருந்தார். அந்த வழியாகத் தோளில் குடத்தோடு சென்ற ராமானுஜரின் செவிகளில் பெரியநம்பிகளின் இனிமையான இசை விழுந்தது.

பாடலின் இசையிலும் பொருளிலும் மயங்கிய இராமநுஜர் பெரியநம்பிகளிடம் வந்தார். அப்பாடல் களை எழுதிய ஆளவந்தாரின் பெருமைகளையும் அறிந்துகொண்டார். தேவராஜப் பெருமாள் திருமுன்பு ஆளவந்தாரின் திருக்குமாரரும் மிகச் சிறந்த இசைமேதையும் ஆகிய திருவரங்கப் பெருமாள் அரையர் மிக அற்புதமாக இசையைப் பாடி தேவராஜனை மயக்கினார். எதைக் கேட்டாலும் அந்த இசைக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று வாக்களித்த தேவராஜப் பெருமாளிடம் ராமானுஜரைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து ராமானுஜரை அழைத்துக்கொண்டு திருவரங்கம் சென்றார் திருவரங்கப் பெருமாள் அரையர்.

இந்தத் திருவரங்கப் பெருமாள் அரையர் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களைத் தாளத்தோடு இசைப்பதில் நிகரற்றவர். தன் இறுதிக் காலம் வரை அரங்கன் முன்பு ஆடிப்பாடுவதைப் பேறாக நினைத்திருந்தவர். இசையில் வல்ல இவருக்குத் தொண்டை வறண்டுவிடும் என்று மஞ்சள் தூள் கலந்த பாலைக் காய்ச்சித் தந்தும் சந்தனம் மஞ்சள் மூலிகைகளைத் தயாரித்து உடலில் பூசியும் பணிவிடை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ராமானுஜர்.

பல சூழ்நிலைகளில் பல சாதனைகளை செய்வதற்கு இசைதான் ராமாநுஜருக்கு உறுதுணையாக இருந்தது. திருநாராயணபுரத்தில் உள்ள உற்சவர் டில்லி சுல்தானின் பொக்கிஷ அறையில் இருப்பதை அறிந்த ராமானுஜர் இசை அறிந்த அரையர் ஒருவருடன் டில்லி சுல்தானைக் காணச் சென்றார். அரையரின் அற்புத இசையில் மயங்கிய டில்லி சுல்தான் ராமாநுஜர் பொக்கிஷ அறையை அணுகி, தான் தேடி வந்த விக்கிரகத்தை எடுத்துச் செல்ல அனுமதி தந்தார்.

இறைவன்தான் இசை. இசைக்கு மயங்குபவன் இறைவன். இசைக்கு அருள்பவன் இறைவன் என்பதை நன்கு அறிந்த ராமாநுஜர் திருக்கோயில் வழிபாட்டில் இசையின் முக்கியத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு இணைத்தார். பண்ணார் இசையையும், நாடகத்தையும் இதர வாத்தியக்கலைகளையும் ராமானுஜர் அறிந்து வைத்திருந்து அதனை மக்களிடம் கொண்டு சென்றார்.

Koviloor Digital Library

திருப்பூர் கிருஷ்ணன்

தீண்டாமையை எதிர்த்த தீரர்!

தீண்டாமைக்கு எதிரான போராட்டம், இன்று நேற்று தொடங்கியதல்ல. பல நூற்றாண்டுப் போராட்டம் அது. அந்தப் போராட்டத்தின் ஒரு முக்கியக் கண்ணியாக ஶ்ரீராமானுஜர் செயல்பட்டார் என்பதே அவரது பெருமை.

நமது ஆன்மிக மரபின் நெடிய வரலாற்றில், தீண்டாமையை எதிர்த்து உரத்துக் குரல் கொடுத்தவர்களில் மிக முக்கியமான ஒரு பெருமகன் ஶ்ரீராமானுஜர். குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டுமானதல்ல ஆன்மிகம், அது அனைவர்க்குமானது என்பதைத் தம் வாழ்வில் நிலைநிறுத்தியவரும் அவரே.

இந்து மதத்தின் ஆன்மிக நெறி, ஜாதியோடு தொடர்புடையதல்ல. பன்னிரு ஆழ்வார்களிலும் அறுபத்து மூன்று நாயன்மார்களிலும் எல்லா ஜாதியினரும் உண்டு. இந்து மதத்தின் ஆதாரமான வேதங்களில் ஜாதி ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்படவில்லை. வேதநெறி ஜாதி நெறியாய்க் கீழிறங்கியது பின்னாளில் நேர்ந்த துரதிர்ஷ்டம். தொன்றுதொட்டே மனச்சாட்சி உள்ள பெருமக்கள் அனைவரும் ஜாதி ஏற்றத் தாழ்வுக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

இந்து மதத்தின் ஆன்மிக நெறி, ஜாதியோடு தொடர்புடையதல்ல. பன்னிரு ஆழ்வார்களிலும் அறுபத்து மூன்று நாயன்மார்களிலும் எல்லா ஜாதியினரும் உண்டு. இந்து மதத்தின் ஆதாரமான வேதங்களில் ஜாதி ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்படவில்லை.

ஆதிசங்கரரின் சமத்துவ தரிசனம்

ஆதிசங்கரர் வாராணசி சென்று கங்கையில் குளித்துத் திரும்பும்போது நான்கு நாய்களோடு எதிர்ப்படுகிறார் ஒரு புலையர். விலகு என விரல் நீட்டி எச்சரிக்கிறார் ஆசாரம் நிறைந்த சங்கரர். 'எதை விலகச் சொல்கிறீர்? என் உடலையா? என் ஆன்மாவையா? என நகைத்தவாறே கேள்வி கேட்கிறார் அந்தப் புலையர். சங்கரர் மனம் திகைக்கிறது. ஆன்ம பரிபக்குவம் அடைந்த தாமே பேத உணர்வோடிருப்பது என்ன நியாயம் என்ற சிந்தனை அவர் மனத்தில் எழுகிறது. இறைவனின் பிரதிபலிப்பே அனைத்து உயிர்களும் என்ற உண்மையை அவர் உள்ளம் உணர்கிறது.

அப்போது அவர் பாடியதே 'மனீஷா பஞ்சகம்' என்ற ஐந்து சுலோகங்கள். மனீஷா பஞ்சகம் ஜாதிபேதத்தை எதிர்த்து எழுதப்பட்ட சம்ஸ்க்ருத இலக்கியத்தின் அழியாப் பொக்கிஷம். புலையராய் வந்தவர் சிவபெருமானே என்றும் அவருடன் வந்த நான்கு நாய்களும் நான்கு வேதங்கள் என்றும் கருதப்படுகிறது.

Koviloor Digital Library



ஸ்ரீ வஞ்சுளவல்லீ - ஸ்ரீ நம்பி (திருநறையூர்)

Koviloor Digital Library

நவீன கால சமத்துவ நாயகர்கள்

பின்னாளில் கேரளம் ஒரு நாராயண குருவைக் கண்டது. அவர் தலித் சகோதரர்கள் அனைவரும் வேதம் படிக்கலாம் என்று சொன்னதோடு, அவர்களுக்கு வேதம் கற்பிக்கவும் செய்தார். பல நூற்றாண்டுகளாக எந்தக் குலத்தாருக்கு வேதம் மறுக்கப்பட்டதோ அந்தக் குலத்தார் வேத நெறியில் திளைக்க வழிவகுத்தார் அவர்.

காந்தி ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தார். ஹரிஜனங்கள் நுழைய அனுமதியில்லாத மதுரைக் கோயிலில் தாமும் நுழைய அவர் விரும்பவில்லை. காந்தியின் கருத்துக்களால் கவரப்பட்ட மதுரை வைத்திய நாதய்யர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் ஆதரவோடு ஹரிஜனங்களை அழைத்துக்கொண்டு மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தினுள் சென்றார் என்பது நம் சுதந்திர வரலாற்றுச் செய்திகளில் ஒன்று.

பாரதியார் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த கனகலிங்கத்திற்கு உபநயனம் செய்வித்து காயத்ரி மந்திர உபதேசமும் வழங்கினார். அதுமட்டுமல்ல, தாம் எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறுகதையை தலித் சகோதரர்களுக்குத்தான் அவர் அர்ப்பணித்திருக்கிறார்.

'பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரட்சிப்பவர்களாகிய பள்ளர் பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்' என்பது பாரதியின் வாசகங்கள்.

நான்கு வேதங்களையும் தமிழில் மொழிபெயர்த்த அறிஞர் ஜம்புநாதன், அந்நூலை கீழ் ஜாதியினர் என்று கூறப்பட்டோருக்கே காணிக்கையாக்கியிருக்கிறார்.

தீண்டாமைக்கு எதிராக ராமானுஜர்

தீண்டாமைக்கு எதிரான போராட்டம், இன்று நேற்று தொடங்கியதல்ல. பல நூற்றாண்டுப் போராட்டம் அது. அந்தப் போராட்டத்தின் ஒரு முக்கியக் கண்ணியாக ஸ்ரீராமானுஜர் செயல்பட்டார் என்பதே அவரது பெருமை.

அவர் சரிதத்தில் இரண்டு முக்கியச் சம்பவங்கள் அவரது ஜாதி எதிர்ப்புணர்வுக்கு அத்தாட்சியாகத் திகழ் கின்றன. ஒன்று ஜாதி உணர்வுடைய தம் மனைவியை அவர் விலக்கித் துறவு பூண்டது. இன்னொன்று தமக்கென்றே உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை அனைவர்க்குமாக அவர் கோயில் கோபுரத்தில் ஏறி முழங்கியது.

ராமானுஜர் தமக்கு ஆன்மிகப் பயிற்சி அளித்து வந்த திருக்கச்சி நம்பி, திருமால்மேல் செலுத்தும் பக்திப் பெருக்கைக் கண்டு நெக்குருகினார். அவருக்கு ஒருநாளேனும் தம் இல்லத்தில் அமுது செய்விக்க விரும்பினார். அவர் உண்ட பின் அவரது எச்சிலை உண்டு புனிதமடைவோம் என்பது ராமானுஜரின் ரகசியத் திட்டம். தம் இல்லத்திற்கு உணவுண்ண வரவேண்டும் என்ற தம் விருப்பத்தைத் திருக்கச்சி நம்பியிடம் பணிவோடு தெரிவித்துக் கொண்டார். உளம் நெகிழ்ந்த நம்பியும் அதற்கு உடன்பட்டார்.

தம் இல்லத்திற்கு ஓடி வந்த ராமானுஜர், சம்பிரதாய வழக்கங்களிலேயே தஞ்சம் புகுந்திருந்த தம் மனைவி தஞ்சம்மாளிடம் நம்பி உணவருந்த இல்லம் வரவிருப்பது குறித்து அறிவித்தார். 'நாரணன் வேறல்ல, நம்பி வேறல்ல. இதை மனத்தில் கொண்டு அடிசில் தயாரிப்பாயாக!' எனவும் அறிவுறுத்தினார். சாப்பாடு தயாரானதும், நம்பியை அழைத்துவர தெற்கு வீதி வழியே புறப்பட்டார்.

திடீரென ஏற்பாடு செய்யப்படும் இந்த விருந்தின் நோக்கம் என்னவாக இருக்கும்? நம்பியின் மனம் சிந்தித்தது. தம் எச்சிலை குருபக்தி நிறைந்த ராமானுஜர் உண்ணக்கூடும் என சந்தேகித்தது அவர் உள்ளம். உத்தம பக்தரான ராமானுஜர் அவ்விதம் எச்சில் உண் பதை நம்பி விரும்பவில்லை.

எனவே ராமானுஜர் தம்மை அழைக்க வருவதற்குள் வடக்கு வீதி வழியாக ராமானுஜர் இல்லத்தை அடைந்தார் நம்பி. ராமானுஜர் இல்லத்தில் இல்லாததை உறுதிப்படுத்திக் கொண்டு, 'உடனே உணவிடு அம்மா!' என ராமானுஜரின் மனைவி தஞ்சம்மாளை அவசரப்படுத்தினார்.

தஞ்சம்மாள் ஆசார அனுஷ்டானங்கள் மேல் அபார நம்பிக்கை கொண்டவள் ஆயிற்றே? ராமானுஜர் அந்தணர். வந்திருக்கும் நம்பியோ வைசியர். எனவே அவரை வீட்டுக் கூடத்திற்கு வரவழைக்காமல் நடை யிலேயே உட்கார வைத்தாள். அங்கேயே இலைபோட்டு உணவு பரிமாறினாள்! யார் எச்சிலை உண்ணக்கூட ராமானுஜர் தயாராக இருந்தாரோ அவர் சிரித்தவாறே நடையில் அமர்ந்து அமைதியாக உணவுண்டு நடையைக் கட்டினார். தஞ்சம்மாள் இலையை எடுத்துப் போட்டுவிட்டு, இலைபோட்ட இடத்தை நீர்விட்டுக் கழுவினாள். கீழ்ஜாதியைச் சேர்ந்தவருக்குச் சோறிட்ட தீட்டுப் போக கிணற்றில் நீர்சேந்திக் குளிக்கலானாள்.

ராமானுஜர் நம்பியைத் தேடிச் சென்று அங்கே நம்பி இல்லாததால் இல்லம் திரும்பினார். 'நீங்கள் அனுப்பியவர் சாப்பிட்டுவிட்டுப் போனார். அதுதான் நான் தீட்டுப் போகக் குளித்துக் கொண்டிருக்கிறேன்!' என்றாள் தஞ்சம்மாள்!

தன்னையே அவமானப்படுத்தியதுபோல் ராமானுஜர் மனம் மறுகினார். எப்பேர்ப்பட்ட மகான் திருக்கச்சிநம்பி! அவர் பாதம் பட இந்த இல்லம் என்ன புண்ணியம் செய்ததோ! ஆனால் அவருக்கு உணவிட்டதன் பொருட் டுக் குளிக்கிறாளே இந்தப் பைத்தியக்காரி! இந்தக் கீழ்த்தரமான ஜாதி உணர்வு மக்களை விட்டு என்று போகும்? தம் மனைவியைக் கடுமையாய்க் கண்டித்த ராமானுஜர் தீவிரமாக யோசித்தார்.

அடியவர்கள் அனைவரும் ஓரினம்

அடியவர் அனைவரும் ஓரினத்தவர் அல்லவோ? திருக்கச்சி நம்பியின் எச்சிலை உண்ண விரும்பினேன். ஆனால் அவர் சாப்பிட்ட இடத்தின் எச்சிலைத் தூய்மைப்படுத்தியதற்காகக் குளித்துக்கொண் டிருக்கிறாள் என் மனைவி! இந்த முரண்பாட்டை எப்படி நீக்குவது? இவள் மனத்தை மேன்மையுறச் செய்வது

Koviloor Digital Library

ஸ்ரீ என்னைப் பெற்ற தாயார் - ஸ்ரீ பக்தவத்சலன் (திருநின்றவூர்)

Koviloor Digital Library

ஸ்ரீ நிலமங்கை - ஸ்ரீ ஸ்தலசயனப் பெருமாள் (திருக்கடன் மல்லை)

எவ்விதம்? ஆன்மிகத்தில் ஜாதி ஆசாரங்களுக்கு இடமில்லை என்பதை இவளுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும். ராமானுஜர் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

காலம் கொஞ்சம் கடந்தது. 'உன் ஞான வேட்கைக்கு நீ மகாபூரணரையே குருவாக அடைய வேண்டும்' என்ற திருக்கச்சி நம்பியின் ஆலோசனையின் பேரில் மகாபூரணரை குருவாக ஏற்றார் ராமானுஜர். திருவரங்கத்தைச் சேர்ந்த மகாபூரணரும் அவர் மனைவியும் காஞ்சிபுரம் வந்து தங்கினார்கள்.

ஒருநாள் வெளியூர் சென்றிருந்தார் ராமானுஜர். அவர் மனைவி தஞ்சம்மாள் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அதே கிணற்றில் நீர் இறைக்க வந்தாள் மகாபூரணரின் மனைவி. தற்செயலாக அந்த அம்மையாரின் உடை தஞ்சம்மாள் மேல் பட்டு விட்டது. படலாமோ? மகா தோஷமல்லவா அது? ஜாதி ஆசாரங்களைப் பெரிதும் பாராட்டும் தஞ்சம்மாள் தாறுமாறாய்க் கத்தலானாள். பெரும் சண்டை மூண்டது. தஞ்சம்மாள் தன் நீட்டுப் போக மீண்டும் மீண்டும் கிணற்றுத் தண்ணிரை இழுத்து இழுத்துத் தன் மேல் கொட்டிக் கொள்ளத் தொடங்கினாள். இப்படிச் செய்தே கிணற்று நீர் முழுவதையும் அவள் காலிசெய்ய நினைத்தாள்போல் தோன்றியது. அந்தச் செயலைப் பார்த்து மகாபூரணரின் மனைவி மனம் கலவரம் அடைந்தது.

தன் கணவரிடம் சென்று நடந்ததைச் சொன்னாள் மகாபூரணரின் மனைவி. ராமானுஜர் இவற்றையெல்லாம் கடந்தவர் என்பது உண்மைதான். ஆனால் அவர் குடும்பத்தில் தங்களால் சிக்கல் ஏற்படக் கூடாது என்று நினைத்தார் மகாபூரணர். இங்கிருந்தால் தானே சிக்கல், திருவரங்கம் சென்று விடுவோம் என, இருவரும் ராமானுஜர் ஊரிலிருந்து திரும்பி வருவதற்குள் திருவரங்கம் சென்று விட்டார்கள்.

காஞ்சீபுரம் திரும்பிய ராமானுஜர் குருவையும் குரு பத்தினியையும் காணாது திகைத்தார். இந்நிலைக்குத் தம் மனைவி காரணமாக இருக்கலாம் என்று அவர் மனத்தில் ஒரு பட்சி சொல்லிற்று! மனைவியின் இயல்பை ஏற்கெனவே அறிந்தவர் தானே அவர்! தஞ்சம்மாளிடம் அவர்கள் எங்கே என விசாரித்தார்.

'என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்? உங்கள் குரு பத்தினியின் சேலை என்மேல் பட்டுவிட்டது. அதற்காக கிணற்றில் எத்தனை குடம் தண்ணீர் இழுத்துக் குளித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? அதுபற்றி உங்களுக்கு என் மீது சற்றேனும் இரக்கம் இருக்கிறதா?

கடகடவெனப் பொரிந்தாள் தஞ்சம்மாள். அடுத்து தனக்கு நேரவிருக்கும் நிலை பற்றி அவள் சிந்திக்கவில்லை. மனைவியின் விந்தையான வாதத்தைக் கேட்டு இடி விழுந்தாற்போல் திகைத்து நின்றார் ராமானுஜர். தஞ்சம்மாள் நிலைகுலையும் வகையிலான ஒரு பெரிய முடிவை ஒரு கணத்தில் எடுத்தார்.

தம் குருவான மகாபூரணரின் மனைவியிடம் ஜாதி ஆசாரம் பாராட்டினாளே இவள்! குரு பத்தினி தாய்க்குச்

Koviloor Digital Library

சமம் அல்லவோ? இவளின் இயல்பால் அல்லவோ அவர்கள் தம்மை விட்டு நீங்கினார்கள்?

'பெண்ணே! எவ்வளவு சொல்லியும் உன் மனம் பக்குவப்படவில்லை. மனிதர்களில் ஏற்றத் தாழ்வில்லை என்பதை உலகிற்கு போதிக்கிறேன். ஆனால் என் மனைவியான நீ என் கருத்தை ஏற்கவில்லை. அப்படியானால் உன்னை நானும் ஏற்க இயலாது. இனி உன்னோடு எனக்கு ஒட்டும் இல்லை. உறவும் இல்லை!'

மனைவியிடம் தன் நிலை பற்றி அறிவித்த அவர் அன்றே மனைவியை முற்றிலுமாகத் துறந்து வீட்டை விட்டு வெளியேறினார் என்பது ராமானுஜர் துறவு பூண்டது தொடர்பான அவர் வாழ்க்கைச் சம்பவம்.

மந்திர உபதேசம்

திருக்கோட்டியூர் நம்பியிடம் மந்திர உபதேசம் பெற விரும்பினார் ராமானுஜர். திருக்கோட்டியூருக்குப் பதினேழு முறை சென்றுவந்தார். ஆனால் நம்பி உபதேசிக்கவில்லை. பதினெட்டாம் முறை சென்றபோது நம்பியின் மனம் இளகியது. 'ஓம் நமோ நாராயணாய!' என்ற புனித மந்திரத்தை ராமானுஜர் செவிகளில் உபதேசம் செய்தார் நம்பி.

மந்திர உபதேசம் பெற்ற ராமானுஜர் மனத்தில் பல்வேறு சிந்தனைகள் எழுந்தன. என் பூர்வாசிரமத்தில் என் மனைவியாக இருந்த தஞ்சம்மாள், ஜாதி ஆசாரம் பாராட்டி என் குருவின் பத்தினி தன்னைத் தொட்டதே தீட்டு எனக் குளித்தாளே! மக்களின் அறியாமையை என்ன சொல்ல! திருமால் அடியவர்கள் அனைவரும் ஒரே குலம் அல்லவோ! அவர் ஒரு முடிவெடுத்தார். திருக்கோட்டியூர் கோயிலில் உயரமான பகுதி ஒன்றில் ஏறி நின்றார். மக்களைக் கூவி அழைத்தார். பெருங்கூட்டம் கூடியது.

'ஓம் நமோ நாராயணாய என்ற திருமந்திரத்தை உங்கள் அனைவருக்கும் உபதேசிக்கிறேன். இந்த மந்திரத்தை நம்பிக்கையுடன் விடாமல் ஓதி சொர்க்கத்திற்குச் செல்வீர்களாக! ஓம் நமோ நாராயணாய!'

ராமானுஜர் சொல்லச் சொல்ல அந்தக் கூட்டம் மந்திரத்தால் கட்டுண்டதுபோல் அவர் வசப்பட்டது. உண்மையிலேயே மந்திரத்தால்தானே அது கட்டுண்டிருந்தது.

ராமானுஜர் செய்த செயல் திருக்கோட்டியூர் நம்பியின் மடத்தையும் எட்டியது. ரகசியமான புனித மந்திரத்தைக் குலத்தில் தாழ்ந்தோரும் அறியுமாறு மதில் சுவர் மேல் ஏறி முழங்குவதா?

'நரகமல்லவா உனக்குக் கிட்டும்!' என்றார் குரு. 'அதனால் என்ன சுவாமி? நான் ஒருவன் நரகம் போனாலும் நாராயண மந்திரத்தைச் சொன்ன அத்தனை பேரும் சொர்க்கம் போவார்களே? தாழ்ந்த குலத்தோர் என்று சொல்லப்படுவோர் சொர்க்கம் புக வேண்டி நான் நரகம் புகவும் சித்தமாக உள்ளேன்!' என்றார் ராமானுஜர்.

இந்த அற்புதமான பேச்சைக் கேட்டு திருக்கோட்டியூர் நம்பி திகைத்தார். அவர் உள்மனத்தில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது- தாம் அதுகாறும் கொண்டிருந்த சம்பிரதாயத்தை உதறித் தள்ளினார். 'நீ நூறாண்டு தாண்டியும் வாழ்ந்து ஆன்மிகப் பணியாற்றுவாய்!' என மனமார வாழ்த்தினார்.

அவர் வாழ்த்து பலித்தது. நூற்றியிருபது ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தார் ராமானுஜர். கி.பி. 1017ஆம் ஆண்டு அவதரித்த அவர், 1137ஆம் ஆண்டு ஸித்தி அடைந்ததாய்ச் சொல்லப்படுகிறது. அத்தனை ஆண்டு அவர் செய்த அத்தனை பணிகளிலும் தலையாயது தீண்டாமையை இந்து மதத்தை விட்டு நீக்கப் பாடுபட்ட பணியே.

இன்று பல அரசியல் தலைவர்கள் தாங்கள் ஒரு கோட்பாட்டைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்தக் கோட்பாட்டைப் பேச்சிலும் எழுத்திலும் முழங்குகிறார்கள். ஆனால் தங்கள் குடும்பத்தாரே தன் கொள்கையை விட்டு விலகுவது வெளிப்படையாகத் தெரிந்தும் இவர்கள் குடும்பத்தை விட்டு விலகுவதில்லை. தாங்கள் ஒரு கொள்கையோடும் தங்கள் மனைவி மற்றும் குடும்பத்தார் அதற்கு நேர் எதிரான கொள்கையோடும் இருந்தாலும் குடும்பத்தைத் துறக்காமல் இன்னும் அதிக குடும்பப் பாசத்தோடு இயங்குகிறார்கள் தலைவர்கள்.

குடும்பத்தாரையே தங்கள் கொள்கைக்கு வசப்படுத்திச் சீர்திருத்த இயலாத இத்தகையவர்களுக்கு அந்தக் கொள்கையை சமூகத்திற்குப் பிரசாரம் செய்ய தார்மீக ரீதியாக என்ன உரிமை இருக்கிறது? இந்த முரண், உண்மையான தொண்டர்களின் நெஞ்சைச் சுடுகிறது. அதனாலேயே பல அரசியல் கட்சிகள் பலவீனப்படுகின்றன.

ஆனால் இந்தப் போலித்தனம் ராமானுஜரிடம் இல்லை. ஜாதி ஏற்றத் தாழ்வு பாராட்டலாகாது என்ற தமது கொள்கையைத் தம் மனைவி அனுசரிக்கவில்லை என்று தெரிந்ததும் மனைவியையே துறந்துவிடும் நியாய உணர்ச்சி ராமானுஜருக்கு இருந்தது. மனைவியை வெறுத்துத் துறவியானோர் பலர். ஆனால் மனைவியை மறுத்துத் துறவியானவர் ராமானுஜர்.

ராமானுஜர் அவதரித்து ஆயிரமாண்டுகள் ஓடி விட்டன. என்றாலும் தீண்டாமை என்ற கொடிய நோயிலிருந்து இந்து மதம் இன்னமும் முழுமையாக விடுபடவில்லை. இன்னமும்கூட தனி அலுமினியக் குவளைக் கலாசாரம் பல மாவட்டங்களில் தேநீர்க் கடைகளில் பின்பற்றப்படுகிறது. இப்போதுகூட கலப்புத் திருமணங்களில் ஜாதி தொடர்பான கௌரவக் கொலைகள் நிகழ்கின்றன. தேர்தல்களில் கூட, எந்தத் தொகுதியில் எந்த ஜாதியினர் அதிகமாக இருக்கிறார்களோ அந்தத் தொகுதியில் அந்த ஜாதிக்காரர்தான் வேட்பாளராக நிறுத்தப்படுகிறார். மக்கள் மனத்திலிருந்து ஜாதி உணர்வு இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்பதன் அடையாளங்களே இவை.

இந்நிலையெல்லாம் என்று மாறுகிறதோ அன்றுதான் ஆயிரமாண்டு கண்ட ராமானுஜர் பற்றிப் பெருமைப்பட நமக்கு அருகதை உண்டு.

Koviloor Digital Library

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத சுவாமி திருக்கோயில்

ராமானுஜர் வாழ்வாங்கு வாழ்ந்த தலம்

இந்தத் திருக்கோயில் 108 வைணவத் திருப்பதிகளில் முதன்மையான தலமாக விளங்குகிறது. வரலாற்றுச் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட கோயில் இது.

உடையவரே வாரும் என்று ஸ்ரீரங்கநாத சுவாமியால் வரவேற்கப்பட்டதாகக் கூறப்படும் ராமானுஜர் தங்கி இருந்த திருக்கோயில் ஸ்ரீரங்கம். தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பழமையான வரலாற்றுச் சிறப்பையும், வழிபாட்டுச் சிறப்பையும் கொண்டுள்ள கோயில்களில் ஒன்றாகத் திகழ்வது ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில். 108 வைணவத் திருப்பதிகளில் முதன்மையான தலமாகவும் இது விளங்குகிறது.

பூலோக வைகுண்டம் என்றும், பெரிய கோயில் என்றும் போற்றப்படுவது இத்திருக்கோயில். காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளுக்கு இடையே அமைந்த தீவு போன்ற பகுதியில் அமையப்பெற்றுள்ளது. அகண்ட காவிரியாகத் தமிழகத்துக்கு வரும் காவிரிஆறுமுக்கொம்பு மேலணையில் காவிரி, கொள்ளிடம் என இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கம் என்ற தீவை உருவாக்கி மீண்டும் கல்லணையில் ஒன்றாக இணைகிறது.

பூலோக வைகுண்டம் என்றும், பெரிய கோயில் என்றும் போற்றப்படுவது இத்திருக்கோயில். காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளுக்கு இடையே அமைந்த தீவு போன்ற பகுதியில் அமையப்பெற்றுள்ளது.

புராண வரலாறு

ஸ்ரீராமனால் வணங்கப்பட்டவர் ரங்கநாதப் பெருமாள். ஸ்ரீரங்க விமானம் ராமபிரானால் விபீஷணனுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. விபீஷணன், இந்த விமானத்தை இலங்கைக்கு எடுத்துச் செல்லும் வழியில், ஸ்ரீரங்கத்தில் இறக்கி வைத்து, நித்திய பூஜைகளை முடித்த பின்னர், மீண்டும் எடுத்துச் செல்ல முயன்றான். அப்போது, ஸ்ரீரங்கத்திலேயே தங்க விரும்பிய அரங்கன் இங்கேயே நிலை பெற்றதாகவும், அதன் பின்னர் இந்த இடத்தில் கோயில் எழுப்பப்பட்டதாகவும் புராண வரலாறு கூறுகிறது. விபீஷணன் தனது கைகளில் ரெங்க விமானத்தைத் தாங்கியிருப்பது போன்ற சிற்பங்கள் கோயில் தூண்களிலும் காணப்படுகின்றன.

கோயில் சிறப்புகள்

ஸ்ரீரங்கத்தின் மையத்தில் பிரணவாகார விமானத்தின் கீழ் படமெடுத்த ஆதிசேஷன் படுக்கையில், அனந்த சயனத் திருக்கோலத்துடன், வலது கையைத் திருமுடியில் படும்படியும், இடது கையைத் திருவடி புறமாக வைத்தபடியும் துயில் கொண்ட நிலையில் காட்சியளிக்கிறார் ஸ்ரீரங்கநாதர். தங்கத் தகடுகளால் போர்த்தப்பட்ட விமானம் காண்போரை பக்திப் பரவசமூட்டும் வகையில் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

மூலவர் ஸ்ரீரங்கநாதர், உற்சவர் அழகிய மணவாளப் பெருமாள் என்ற நம்பெருமாள், தாயார் ஸ்ரீரங்கநாச்சியார் மற்றும் ஏராளமான சுவாமி சன்னதிகள் உள்ளன.

விண்ணை முட்டும் ராஜகோபுரம்

ஸ்ரீரங்கம் கோயிலுக்கு அழகு சேர்க்கும் அணிகளில் ஒன்றாகக் கருதப்படுவது விண்ணை முட்டி நிற்கும் ராஜகோபுரம். இது கோயிலின் தென்புறத்தில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் நாயக்க மன்னர்களால் கட்டத் தொடங்கப்பட்டு, முற்றுப்பெறாமலேயே இருந்தது. அகோபில மடத்தின் 44-வது பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளின் பெரு முயற்சியால் நிறைவு பெற்றது.

ஏழு அடுக்கு மதில் சுவர்கள்

ஸ்ரீரங்கம் கோயிலைச் சுற்றி 7 அடுக்கு மதில் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மத்தியில்தான் கோயில் அமையப்பெற்றுள்ளது. ராஜகோபுரத்துடன் கூடிய பிரதான வாயில் தெற்கு நோக்கி உள்ளது. திருவுண்ணாழி திருச்சுற்று, ராஜமகேந்திரன் திருச்சுற்று, குலசேகரன் திருச்சுற்று, ஆலிநாடன் திருச்சுற்று, அகளங்கன் திருச்சுற்று அடங்கிய 24 ஏக்கர் பரப்பளவில் திருக்கோயில் வளாகம் அமைந்துள்ளது.

இது தவிர திருவிக்ரமன் திருச்சுற்று (உத்திர வீதிகள்), கலியுகராமன் திருச்சுற்று (சித்திரை வீதிகள்) ஆகியவற்றையும் சேர்த்தால் மொத்தம் 156 ஏக்கரில் இந்தக் கோயில் மிகப் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. உட்புறமாக அமைந்துள்ள நான்கு சுற்றுகள் கோயில் பயன்பாட்டுக்கு உரியதாகவும், வெளிப்புறத்தில் உள்ள மற்ற 3 சுற்றுகள் மக்கள் வசிப்பிடங்களாகவும் உள்ளன. இக்கோயிலில் 21 கோபுரங்கள் உள்ளன.

முக்கியமான சன்னிதிகள்

இத் திருக்கோயிலில் ஸ்ரீரங்கநாதர் (பெரிய பெருமாள்) சன்னிதி, தாயார் ஸ்ரீரங்கநாச்சியார் சன்னிதி, சக்கரத்தாழ்வார், திருவரங்கத்தமுதனார், கருடாழ்வார், தன்வந்திரி, உடையவர் ஸ்ரீ ராமானுஜர், வெளி ஆண்டாள் உள்ளிட்ட முக்கியமான சன்னிதிகளோடு சேர்த்து கோயில் உள்ளே 43 உப சன்னிதிகள் உள்ளன.

தாயார் உற்சவங்கள்

ஸ்ரீரங்கநாதருக்கு நடைபெறும் திருவிழாக்கள் போன்றே தாயார் சன்னிதியில் சித்திரை மாதத்தில் 10 நாள்களுக்குப் பூச்சாற்று உற்சவம், வைகாசி மாதத்தில் ஏழு நாட்களுக்கு வசந்த உற்சவம், மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவும் நடைபெறும்.

ராமானுஜர் சன்னிதி

இத்திருக்கோயிலில் உள்ள ராமானுஜர் (உடையவர்) சன்னிதி சிறப்பு வாய்ந்தது. ராமானுஜர் மறைந்த பிறகு அவரது திருமேனி அகளங்கன் திருச்சுற்றில் வசந்த மண்டபத்தில் திருப்பள்ளிப்படுத்தப்பட்டது. அதுவே உடையவர் சன்னிதியாகத் தற்போது உள்ளது. ராமானுஜர் திருமேனியைப் பள்ளிப்படுத்திய பிறகு தானாகவே திருமேனி தோன்றியுள்ளது. ராமானுஜ மூலவருக்கு திருமஞ்சனம் கிடையாது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதமும், சித்திரை மாதமும் குங்குமப் பூ மற்றும் பச்சைக் கற்பூரம் ஆகியவை கலந்து திருமேனியில் சாற்றப்படுகின்றன.

ஆண்டாள்: திருவரங்கம்

Koviloor Digital Library

முனைவர் இரா.அரங்கராஜன்

சிறுவனுக்கு திருவடி காட்டிய உடையவர்

கோஷ்டியின் நடுவில் வாய் பேசவராத ஓர் ஊமை பிராமணச் சிறுவன் எம்பெருமானார் திருமுன்னர் வந்து சைகையால் தனக்கு உபநயன ஸம்ஸ்காரம் முதலியவை செய்யப்படவில்லை என்று காட்டினான்.

எம்பெருமானாருடைய அன்புக்குப் பாத்திரமான சலவைத் தொழிலாளி ஒருவனுடைய வாழ்க்கைத் துணுக்கு ஒன்று நம்பிள்ளையின் திருவாய்மொழி உரையில் இடம் பெற்றுள்ளது.

திருவரங்கம் பெரியகோயிலில் நம்பெருமான் கைங்கர்யத்தில் பல தொழிலாளர்களையும், பணியாளர்களையும் எம்பெருமானார் நியமித்திருந்தார். திருமங்கையாழ்வாரின் காலத்திலிருந்து ஐந்து கொத்தாக இருந்ததை எம்பெருமானார் பத்து ப்ராஹ்மண கொத்துக்களாகவும், பத்து ப்ராஹ்மணரல்லாத கொத்துக்களாகவும் விரிவுபடுத்தினார். அவற்றில் ஈரம்கொல்லி என்றழைக்கப்பட்ட சலவைத் தொழிலாளிகள் ஒரு பிரிவினர். அவர்கள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் என்று அழைக்கப்பட்டனர்.

ஒருநாள் நம்பெருமாளுக்கு அர்ஜுன மண்டபத்தில் பெரிய திருமஞ்சனம் நடந்து கொண்டிருந்தது. அப்போது கோயில் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் நம்பெருமாளுடைய திருப்பரியட்டங்களை மிகவும் நன்றாகத் துவைத்து வெளுத்து மடித்து, அவற்றை எம்பெருமானாரிடம் கொண்டு வந்து கட்டினான். மிக நன்றாக வெளுக்கப்பட்டிருந்ததைத் திருக்கண் நோக்கி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

அவன் கோஷ்டியில் கடைசியில் நின்று கொண்டிருந்ததைக் கண்ட எம்பெருமானார் அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பெரிய பெருமாள் சன்னிதிக்குச் சென்றார்.

அவன் கோஷ்டியில் கடைசியில் நின்றுகொண்டிருந்ததைக் கண்ட எம்பெருமானார் அந்த சலவைத் தொழிலாளியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு பெரிய பெருமாள் சன்னிதிக்குச் சென்றார். பெருமாளிடம் ''நாயிந்தே! இவன் தேவரீருடைய திருவரைக்குத் தகுதியாக ஆடைகளை மிகவும் நேர்த்தியாகத் துவைத்து வாட்டி மடித்துக் கொண்டு வந்திருப்பதை தேவரீர் கண்டருள வேண்டும்''. என்று விண்ணப்பித்து அந்த ஆடைகளை பெரியபெருமாளிடம் காட்டினார். பெருமாளும் மிகவும் உகந்து, எம்பெருமானாருக்கு அருளப் பாடிட்டு, ''இச்சலவைத் தொழிலாளிக்காக கம்ஸனுடைய சலவைத் தொழிலாளி நம்மிடத்தில் பட்ட குற்றத்தை மன்னித்தோம்'' என்று திருவுள்ளமாய் அருளிச் செய்தார்.

கண்ணபிரானும் பலராமனும் கம்சனால் அழைக்கப்பட்டு மதுரைக்கு வந்தபோது அவ்வூர் ராஜவீதியில் கம்ஸனுடைய அரண்மனை சலவைத் தொழிலாளி துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, கண்ணனும் பலராமனும் யாசிக்க, அவன் கொடுக்க மறுத்துவிட்டான். இதுவே அவன் இழைத்த குற்றமாகும். கிருஷ்ணாவதாரத்தில் ஒரு சலவைத் தொழிலாளி செய்த அபசாரத்தை அவன் குலத்தில் வந்த ஒரு சலவைத் தொழிலாளி செய்த

Koviloor Digital Library



உடையவர்

கைங்கர்யத்தால் உகப்படைந்த நம்பெருமாள் எம்பெருமானாரின் பரிந்துரை கேட்டுப் பொறுத்தருளினார். இந்த நிகழ்ச்சிகளை நம்பிள்ளை இரண்டு இடங்களில் பதிவு செய்திருக்கிறார். அவருடைய சொற்களைக் கொண்டே அறிவோம்.

"ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரியட்டங்களை அழகியதாக வாட்டிக் கொண்டு வந்து எம்பெருமானாருக்குக் காட்ட, போர த்ருப்தராய், அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைப்பிடித்துக் கொண்டு புக்கு, ' நாயிந்தே! இவன் திருவரைக்கு ஈடாம்படி வாட்டினபடி திருக்கண் சாத்தியருளவேணும்' என்று இவற்றைக் காட்டியருள, கண்டு உகந்தருளி, உடையவரை அருள் பாடிட்டு, 'இவனுக்காக ரஜகன் நம் திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்'' என்று திருவுள்ளமாயருளினார்". (ஈடு, 4-3—5, 5-10-6)

திருவாய் பேசவராத தாஸர்

உடையவர் ஒரு நாள் நம்பெருமாள் கோஷ்டியில் நடுநாயகமாக எழுந்தருளியிருந்தார். ஆழ்வான் ஆண்டான், வடுகநம்பி முதலான ஆசாரிய பெருமக்கள் எம்பெருமானாருக்கு அருகிலும், எதிரிலுமாக நின்றிருந்து நம்பெருமாளை சேவித்துக்கொண்டிருந்தனர். அந்த கோஷ்டியின் நடுவில் வாய் பேசவராத ஓர் ஊமை பிராமணச் சிறுவன் எம்பெருமானார் திருமுன்னர் வந்து சைகையால் தனக்கு உபநயன ஸம்ஸ்காரம் முதலியவை செய்யப்படவில்லை என்று காட்டினான். மேலும் எம்பெருமானாரையும் நம்பெருமாளையும் மாறி மாறிக் காட்டினான்.

உடனே எம்பெருமானார் கோஷ்டியிலிருந்து நீங்கி அந்தச் சிறுவனைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு தம்முடைய மடத்திற்குச்சென்று வாசல் கதவை தாழிட்டுக் கொண்டார். தம்முடைய திருவடிகளை சைகையால் காட்டினார். அச்சிறுவனும் அவருடைய திருவடிகளை விழுந்து வணங்கினான். அவனுடைய தலையில் திருவடிகளைச் சேர்த்து கிருபை செய்தார்.

இவ்வளவையும் கூரத்தாழ்வான் கதவின் புரை வழியே கண்டு, "ஐயோ! கூரத்தாழ்வானாகப் பிறந்து சதுச் சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டேன். ஏதும் அறியாத ஊமையாகப் பிறந்திருந்தால் உடையவர் இரங்கியருள்வாரே" என்று நினைத்து மூர்ச்சையுற்றார்.



புத்தகம்:
ஸ்ரீவைஷ்ணவ தாஸர்கள் என்ற சீர்மிகு ராமாநுஜ தாஸர்கள்.

ஆசிரியர்:
முனைவர் இரா.அரங்கராஜன்

விலை: ரூ.150

கிடைக்குமிடம்:
இரா.ரங்கராஜன்,
'மதுரா' எண். 1, ஜீவரத்தினம் நகர், பிரதான சாலை,
அடையாறு, சென்னை 600 020
தொலைபேசி : 97914 57614

Koviloor Digital Library

ராமானுஜரின் குருபக்தி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்



மகா பெரியவர்

ராமானுஜாசாரியார் திருக்கோட்டியூர் நம்பி என்கிற தம்முடைய ஒரு குருவின் வார்த்தையை எல்லா ஜனங்களுக்கும் உபதேசம் செய்தார் என்று பலர் கேட்டிருப்பீர்கள். ஆனால் அவரே இதே நம்பியிடம் எத்தனை அடக்கத்தோடு நடந்து காட்டியிருக்கிறாரென்றும் வைஷ்ணவ குரு பரம்பரைக் கதைகள் சொல்கின்றன.

உபதேசம் தருவதற்கு முந்தித் திருகோட்டியூர் நம்பி ராமானுஜாசாரியாரைப் பதினெட்டு தடவை ஸ்ரீரங்கத்திலிருந்து திருகோட்டியூருக்கு நடக்கப் பண்ணிவிட்டே கடைசியில் உபதேசம் கொடுத்தாராம். ராமானுஜர் கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் இப்படி நடையாக நடந்தாராம்.

ஸ்மார்த்தர்கள் ஆச்சார்யனுக்கு நாலு தரம் நமஸ்காரம் பண்ணுவது வழக்கம். வைஷ்ணவர்கள் ஆச்சார்யன் போதும் போதும் என்கிற வரையில் பண்ணிக்கொண்டேயிருப்பார்கள். ஒரு தரம் ஸ்ரீரங்கத்துக்கு வந்த திருகோட்டியூர் நம்பி ஜில்லென்று காவேரி ஜலத்திலே (அல்லது படித்துறை மண்டபமாயிருக்கலாம்) நின்றுகொண்டிருந்தாராம். வெளியிலே ஆற்றங்கரை மணலோ நல்ல வெயிலில் நெருப்பாகக் கொதித்துக்கொண்டிருந்ததாம். அப்படிப்பட்ட மண்ணில் ராமானுஜர் உடம்பு கன்றிப் போவதையும் பொருட்படுத்தாமல் நமஸ்காரம் பண்ணிக்கொண்டேயிருந்தாராம். அவருடைய குரு பக்தியை சோதனை பண்ண வேண்டும் என்று இப்படிச் செய்த நம்பி அப்புறம் மனஸ் தாங்காமல் அவரை நிறுத்தினாராம்.

தெய்வத்தின் குரல் - (மூன்றாம் பகுதி)

KOVILOOR ANDAVAR
A. No. 24238
LIBRARY KOVILOOR

Koviloor Digital Library

ஸ்ரீரங்கம்